# உணர்வுகள்



உடுவில் அரவிந்தன்

# உணர்வுகள்

(சிறுகதைத் தொகுதி)

## உடுவில் அரவிந்தன்

1999

நூல் : உணர்வுகள்
(சிறுகதைத் தொகுதி)

எழுதியவர் : உடுவில் அரவிந்தன்

முதற்பதிப்பு : டிசம்பர் 1999

பதிப்புரிமை : நூலாசிரியருக்கு

பக்கங்கள் : XI + 103

அட்டைப்படம் : நூலாசிரியர்

அட்டை அச்சுப்பதிவு : யுனி ஆட்ஸ், கொழும்பு.

கணனி அச்சுப்பதிவு : தயா கொம்பியூட்டர் பிறின்ட்
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

விலை : ரூபா 100/=+

# முன்னுரை

உடுவில் அரவிந்தனின் சிறுகதைகள் அடங்கிய இத் தொகுதியைப் படித்து முடித்ததும் என் மனதில் எஞ்சி நின்ற உணர்ச்சிகள் எவை என அளவிட்டேன். அவ்வளவிட்டின்படி வீறு கொண்ட புதியதொரு இளந்தலைமுறை புனைகதைத் துறையில் காலடி எடுத்து வைத்திருக்கின்றதென்ற உணர்வு ஏற்பட்டது. சஞ்சீவி உருவாக்கிய சிறுகதை எழுத்தாளராக உடுவில் அரவிந்தன் விளங்குகின்றார். சஞ்சீவியில் எழுதுகின்ற, இளம் எழுத்தாளர்களில் உடுவில் அரவிந்தன், தாட்சாயணி, சிவாணி என்போரின் எழுத்துக்கள் நம்பிக்கை தரும் படைப்புகளாக விளங்குகின்றன. இம்மூவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் என்பது, இவர்களின் எதிர்காலப் படைப்புகள் ஈழத்தமிழிலக்கியத்திற்கு அணி சேர்க்கும் என்ற எண்ணத்தை வலுப்படுத்துகின்ற செய்தி. 1961 / 1965களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புனைகதைத்துறையின் ஆக்கவிலக்கியக் கர்த்தாக்களாகப் பலர் மிளிர்ந்தனர். அவர்கள் இன்று ஈழத்தின் புனைக்கதையாளர்களாக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். அக்காலகட்டத்திற்குப் பின்னர் பல்கலைக் கழகங்கள் புனைக்கதை எழுத்தாளர்களை உருவாக்கிவிட வில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து புனைக்கதை எழுத்தாளர்கள் உருவாகி வருகின்றனர் என்பது மகிழ்ச்சியைத் தரும் சங்கதி யாகும்.

ஈழத்துப் புனைக்கதை வரலாற்றில் உடுவில் அரவிந்தன் ஆறாந் தலைமுறை எழுத்தாளர். இச்சிறுகதைத்தொகுதியில்

பதினான்கு சிறு கதைகள் இடம் பிடித்திருக்கின்றன. அவை அனைத்தும் யாழ்ப்பாண மண்ணின் மக்களின் உணர்வுகளையும் நடத்தைகளையும் சித்தரிக்கும் பாங்கானவை. ஒரு வகையில் யதார்த்தப்பண்பு வாய்ந்தவை. தான் வாழ்கின்ற சமூகம் பற்றிய அக்கறையுடன், பிரபஞ்சம் பற்றிய அக்கறையும் உடுவில் அரவிந்தனிடம் இருக்கின்றதென்பதைச் சில சிறுகதைகள் சுட்டி நிற்கின்றன, (தீர்வு). சமகாலப்பிரச்சினைகளையும் போராட்ட நிலைமைகளையும் உள்ளடக்கமாகக் கொண்ட சிறுகதைகளில் உடுவில் அரவிந்தன் மிக அவதானமாகத் தன் கருத்துக்களைப் பொதித்துள்ள விதம் பாராட்டத்தக்கது. (உணர்வுகள், பிரசவம், இணைவு). வாழ்க்கையின் அவலங்களை அவரது சிறுகதைகள் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கின்றன. சமூக மனிதர்கள் சிலரின் முகமூடிகளைக் கிழித்தெறியும் உந்துதல் உடுவில் அரவிந்தனின் கதைகளில் காணப்படுகின்றன. (மலராத மலர், போலி). குடும்ப உறவுகளின் மெல்லிய உணர்வுளைக் கலாபூர்வமாகச் சித்திரிக்க பிரமச்சாரியான உடுவில் அரவிந்தனால் முடிந்திருக்கின்றது. (ஊடல், பொருத்தம்). 'புதியவர்கள் பலர் எழுத்துலகிற்கு வந்திருக்கிறார்கள், புதிதாக எதுவுமில்லை' என்ற கூற்று உடுவில் அரவிந்தனின் சிறுகதை ஆக்கங்களினால் ஓரளவு அற்றுப்போகின்றது. உடுவில் அரவிந்தனின் சிறுகதைகளின் தலைப்புக்கள் அவர் சொல்ல விரும்புகின்ற கதைக்கருவினை முதலிலேயே நெகிழ்த்திக் காட்டி விடுகின்றன. ஒவ்வொரு 'சொல்' அவர் சிறுகதைகளின் தலைப்புக்களாகவுள்ளன. அது ஒருவகையில் சிறப்பான அம்ச மெனக்கருதப்பட்டாலும், சொல்வதிலும் சொல்லாமல் விடுகின் றவை. சிறுகதைகளில் அதிகமாகவிருக்க வேண்டும். தமிழகத் தில் ஜெயகாந்தனும், ஈழத்தில் செம்பியன் செல்வனும்

சிறுகதைகளுக்குத் தலைப்பிடுவதில் சிறப்பானவர்கள். கதையைப் படித்து முடிந்ததும் உள்ளத்தில் எழுகின்ற உணர் விற்குச் சிறுகதையின் தலைப்பு கலைத்துவமான கருத்தினைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

உடுவில் அரவிந்தன் எளிமையான சொற்களில் தான் எடுத்துக் கொண்ட கதையினைச் சொல்வதில் வல்லவராகத் தெரிகிறார். முரண்பாடுகளின்றி ஆற்றொழுக்காக அவர் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இலக்கிய அந்தஸ்து என்பது எழுதுகிற விடயங்களைப் பொறுத்தது. மானிட சோகங்களை உள்ளடக்கி அடக்கியொடுக்கப்பட்ட மானிடத்தின் விடுதலைக்காக எழுத்துக் கள் படைப்பாக்கம் பெறும்போது அவை சமூகப்பயன் கொண்ட எழுத்துக்களாக மாறிவிடுகின்றன. எழுத்தாக்கத்தி லுள்ள ஒரு பொறி வாசிப்பவனின் இதயத்தைத் தொட வேண்டும். உடுவில் அரவிந்தனின் மலராதமலர், உணர்வுகள், மாற்றம், போலி முதலிய சிறுகதைகளில் அவ்வாறான பொறி இருக்கின்றது. தன் மகளுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டால் அவள் உழைப்பால் கிடைக்கின்ற வருமானம் கிடை யாது போய்விடுமென்றெண்ணுகின்ற பெற்றோரின் மனநிலை யைப் பல எழுத்தாளர்கள் சித்திரித்துள்ள போதிலும் உடுவில் அரவிந்தனின் மலராதமலர் சிறுகதையில் அது கலைத்துவமாக விழுந்துள்ளது. போராட்டம் பற்றிய ஒரு பெண்ணின் கருத்து நிலை மாற்றத்தை உணர்வுகள் சிறப்பாகக் கூறுகின்றது. ஊரடங்குச் சட்டத்தால் ஒரு குடும்பத்தின் ஐந்துவருடப் பிள்ளைப் பேற்றேக்கம் இடைநடுவில் அவலமாக முடிவதைப் பிரசவம் சிறுகதை சொல்கின்றது. இச்சிறுகதைகளை வாசித்து முடிந்ததும் இதயத்தில் மெல்லிய ஒரு வலி ஏற்படுகின்றதென்பது படைப்பாற்றலின் வெற்றி.

உடுவில் அரவிந்தன் எழுதியுள்ள துணை என்ற சிறுகதை பெண்ணியல்வாதிகளின் ஆக்ரோசமான தாக்குதல் களுக்குள்ளாகும். இளவயதில் வேண்டாமென்ற மனைவி பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட கணவனுக்கு இறுதிக்காலத்தில் தேவைப்படுகின்றாள். அவளும் எல்லாவற்றையும் மறந்து கணவனிடம் செல்கிறாள். இது யதார்த்தம், எம் மண்ணின் இயல்பு என அரவிந்தன் வாதிடலாம். ஆனால் சிறுகதை என்பது சமூகம் இப்படி இருக்கின்றதென்று கூறுவதுடன் நிறைவுபெறு வதில்லை. இச்சமூகம் எப்படி இருக்க வேண்டுமென்ற படைப்பாளியின் நோக்குடன் தான் நிறைவுற வேண்டும். இக்கருத்து அரவிந்தனுக்கு சமர்ப்பணம்.

நிறைவாக உடுவில் அரவிந்தனின் சிறுகதைகளின் பாத்திரவார்ப்பும் நிகழ்ச்சிச்சித்திரிப்பும் அவர் எழுத்தின் முதிர்ச்சியைக் காட்டுகின்றன. கருத்து நிலைகள் அவரின் முதிரா இளமையைச் சுட்டி நிற்கின்றன. எழுத்தில் நிஜத்தன்மை பொதிந்திருப்பது உடுவில் அரவிந்தனின் படைப்பாற்றலுக்கு கிடைத்திருக்கின்ற கொடை. யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு கோணங்களை அவர் தன் எழுத்துக்களில் படைப்பாக்கி உள்ளார். இவரின் பேனாவில் இருந்து எதிர்காலத்தில் உத்திச் சிறப்பும் உருவ அமைதியும் கொண்ட சிறப்பான உன்னத சிறுகதைகள் தமிழுக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்கள்

செங்கை ஆழியான் க. குணராசா

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
**10.11. 1999**

# என்னுரை

பல்வேறுபட்ட உணர்வுகளின் கலவையாக இணைந்த இந்தத்தொகுதியினை வெளிப்படுத்துமளவுக்கு ஏற்ற தகுதி என்னிடம் உள்ளதாவென ஒரு கணம் சிந்தித்ததுண்டு. ஏனென்றால், கவிதைக்கும் எனக்கும் இருந்த பதினைந்து வருடகாலப் பந்தம் போல சிறுகதை என்னை அப்போதே பற்றிக்கொள்ளவில்லை. 1987இல் பதினைந்து வயது மாணவனாக இருந்த போது நல்லூர் கல்விவலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் அப்போதைய போராட்ட சூழ்நிலைக்கேற்ப என்னால் முதன்முறையாக எழுதப்பட்ட சிறுகதைக்கு முதல் பரிசு கிடைத்ததென்னவோ உண்மையென்றாலும், தொடர்ச்சியாக எழுதத்தொடங்கியது 1996 காலப்பகுதிக்குப் பிறகுதான். பரந்துபட்ட இலக்கிய உலகில் வளர்ச்சிப்படியின் ஆரம்பத்திலே தயங்கி நிற்கும் சிறியவனாகவே இன்னும் நான் உள்ளேன்.

'யாவும் கற்பனை' என்று எழுதப்பட்டாலும், கதைகளின் கருக்கள் உலகின் எங்கோ ஒருமூலையில் ஏற்கனவே உருப் பெற்றிருக்கும். இது உண்மை. ஏனென்றால் சமூகத்தை வைத்தே கதைகள் புனையப்படுகின்றன. ஆகவே கதைக் கருக்கள் சமூகத்தில் நிகழ்வதில் வியப்பேதுமில்லையே! என்னால் எழுதப்பட்ட அநேகமான சிறுகதைகள் உண்மைச் சம்பவங்களின் விரிப்பாகும். சுவையைக் கருத்திற்கொண்டு, பாத்திரங்களை நன்கு பதிய வைக்கவேண்டும் என்ற நோக்கில் உள்ளதை உள்ளபடியே உரைக்கவேண்டிய அவசியமும் சில சந்தர்ப்பங்களில் எனக்கு ஏற்பட்டதுண்டு.

'தான் வாழும் சூழ்நிலையின் யதார்த்தத்தைப் பிரதி பலிக்காத வகையில் எழுதப்படுபவை வெறுமனே கரைந்து போகும் காகிதக் கிறுக்கல்கள் தாம்' என்று எங்கோ வாசித்த ஞாபகம். இயன்றவரை நியாயத்தைக் கருத்திற் கொண்டு நடப் பியலை எழுத்துருவாக்கி வருகின்றேன் என்பதில் நிறைவெனக்கு.

பொதுவாக நான் அனுபவங்களுக்கு அப்பால் இருந்து எழுதுவதாக பலர் கூறக்கேட்டிருக்கின்றேன். ஒரு எழுத்தாள னுக்கு நிறைந்தவாசிப்புத்திறனும், கூரிய அவதானிப்புத்திறனும் நிச்சயம் இருக்க வேண்டும். சமூகத்தில் நடக்கின்ற ஒவ்வொரு மெல்லியஅசைவினையும் உள்வாங்கி, அவற்றோடு சம்பந்தப் பட்ட நுட்பமான மன உணர்வுகளைக் கூட ஓரளவுக்கேனும் என்னால் அனுமானித்துக்கொள்ளமுடிவதால் அவ்வாறெல்லாம் எழுத வருகின்றது. அத்துடன், வாழ்வில் என் உள்ளத்துக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்ற நிறைவும் இத்துறைக்கு நல்ல தோர் ஊக்கியாகும்.

என்னுடைய இந்தத் தொகுப்பு வெளிவரப் பலர் காரண மாக இருந்திருக்கின்றார்கள் என்னைக் காணும்போதெல்லாம் இதைத்தொகுக்க வேண்டிய அவசியத்தை எனக்கு வலியுறுத் திய யாழ்/ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரியரும், உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் கௌரவ புரவலர்களில் ஒருவருமாகிய 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன்.

இந்த தொகுப்பில் இணைந்துள்ள 14 சிறுகதைகளுடன் ஏனைய சிறுகதைகளையும், இதர படைப்புக்களையும் பிரசுரித்து என்னைச் சமூகத்துக்கு முழுமையாக வெளிப்படுத்திய உதயன் - சஞ்சீவி ஆசிரிய பீடத்தினருக்கும், குறிப்பாக இந்நூலுக்கு

அறிமுகவுரையினை அழகாக எழுதித்தந்துதவிய பிரதம ஆசிரியர் திரு.ம.வ.கானமயில்நாதன் அவர்களுக்கும் நான் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதைய 'இறுக்கமான' சூழ்நிலையில் யதார்த்தப்படைப்புக் களை ஆக்குவதிலுள்ள பிரச்சினைகள் எல்லோரும் அறிந்ததே: எனினும், அவற்றைத் துணிவுடன் வெளியிட்டு வரும் 'உதயன்' பத்திரிகையின் பணி போற்றுதற்குரியது.

தனக்குள்ள பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியிலும் இந்த தொகுப்பிலுள்ள ஒவ்வொரு சிறுகதையையும் வாசித்து ஏற்ற முன்னுரையை வழங்கியுதவிய ஈழத்தின் பிரபல நாவலாசிரியர்களில் ஒருவரும், யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளருமாகிய 'செங்கை ஆழியான்' கலாநிதி க.குணராசா அவர்களுக்கு நான் என்றும் கடப்பாடுடையேன்.


ஐந்துவயதிலிருந்தே வேண்டிய நூல்களை வாங்கித் தந்து என் எழுத்தாற்றலுக்கு அத்திவாரமிட்ட என் அன்னைக்கும் இவ்வேளை இனிய நன்றி. அத்துடன், இக்கதைகள் 'சஞ்சீவியில்' வெளியாகியபோது வாசித்து நிறைகுறைகள் எழுதிய அன்புள்ளங்களுக்கும் இதயபூர்வமான நன்றி.

நிறைவாக, இந்நூலுக்கான அட்டையினை அழகாக அச்சிட்ட **Unie Arts** நிறுவனத்தினருக்கும், அவற்றை கொழும்பிலிருந்து எடுத்து வந்து உதவிய திரு. த. ஜெயராஜ் அவர்களுக்கும், இந்நூலைச் சிறந்தமுறையில் கொம்பியூட்டர் பிறின்ட் மூலம் பதித்துத்தந்த 'தயா' அச்சகத்தினருக்கும், மறைவாக நின்றுதவிய மாண்புடையோர்க்கும் நன்றி உரித்தாகுக.

உடுவில் அரவிந்தன்.

'பிருந்தாவன்',
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.
20. 11. 99

# காணிக்கை



மண்ணில்

மரணித்துப்போன

மாண்புடையோர்க்கு.

# நுழைவாயில்...

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தீர்வு | 01 |
| 2. | மலராத மலர் | 07 |
| 3. | துணை | 16 |
| 4. | பிரசவம் | 25 |
| 5. | போலி | 33 |
| 6. | விமோசனம் | 41 |
| 7. | ஊனம் | 48 |
| 8. | பொருத்தம் | 55 |
| 9. | மாற்றம் | 61 |
| 10. | ஊடல் | 69 |
| 11. | இணைவு | 79 |
| 12. | சந்தேகம் | 83 |
| 13. | தகுதி | 90 |
| 14. | உணர்வுகள் | 97 |

# 1

# தீர்வு

அந்த நீண்ட வீதியில் நாட்டப்பட்டிருந்த மரக்கன்றுகளுக்குச் செல்லத்துரையர் அக்கம்பக்க வீடுகளிலிருந்து அள்ளியள்ளி நீர் ஊற்றுவதை ஊர்மக்கள் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"உந்த மனிசனுக்கு வேறை வேலை இல்லையோ? தன்ரை தறையை உழாமல் விசர் வேலை பாக்குது" என்று சிலர் சிரிப்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை. வாடிச்சுருண்டிருந்த மரக்கன்றுகள் நீர்பட்டதும் இலைகளைச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தன. செல்லத்துரையர் மனம் இலேசாகியிருப்பதை உணர்ந்தார்.

நேற்று நடந்த சம்பவங்கள் மெல்ல மெல்ல அவருடைய மனத்திரையில் வந்து மோதத்தொடங்கின.

★ ★ ★

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்துகிடந்த அந்த வயலைச் செல்லத்துரையரின் கண்கள் ஏக்கத்துடன் பார்த்தன. வயல் காய்ந்து கருவாடாகிக்காட்சியளித்தது. உச்சி வெயிலில் புழுதி நிலம் பளபளத்துக் கண்களைக் கூச வைத்தது.

மெல்ல அருகிலிருந்த குளக்கட்டில் ஏறினார். குளத்தில் மருந்துக்குக் கூட நீரில்லை. குளக்கட்டோடு அணைந்திருந்த குண்டுகளில் மட்டும் கொஞ்சம் நீரிருந்தது.

"இந்த முறை மழை பெய்யாதோ? பேசாமல் வயலை வித்துப்போட்டு நல்ல தோட்டக்காணியா வாங்குவம் எண்டாலும் மனம் வருகுதில்லை. என்ரை அப்பாவின்ரை காலத்து வயல். சோக்கான பள்ளக்காணி"

யோசித்தவாறு திரும்பிப் பார்த்தார்.

சிலர் புழுதி விதைப்பில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

மழையில்லா வேளையிலே விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் கை கொடுக்கும் முறை அது.

மெல்ல நடந்து கந்தையாவின் காணிப்பக்கம் வந்தார். கந்தையர் இவரது காணிக்கு அடுத்த காணிக்காரர். நல்ல பிரயாசிக்காரர். மூன்று பரப்புக்காணியில் என்னென்ன நட்டுப் பயன் எடுக்கலாமோ அத்தனையும் செய்வார்.

செல்லத்துரையரைக் கண்டதும் கந்தையர் மண்வெட்டியை வைத்து விட்டு வரம்பில் ஏறினார்.

"என்ன துரையண்ணை விதைக்கேல்லையோ?" என்றவாறு தலையிலே கட்டியிருந்த துவாயை அவிழ்த்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

"என்னடாப்பா செய்யிறது? போனமுறை பட்டபாடு காணாதே? வந்த வெள்ளம் எல்லாத்தையும் அள்ளிக்கொண்டு போச்சுது. இந்த முறை என்னடாவெண்டால் மழையை இன்னும் காணேல்லை...."

"எல்லாம் பெய்யும்"

கந்தையர் வாயிலே சுருட்டை வைத்துக் கொண்டார்.

"அவன் சின்னையாவைப் பார் கந்தையா. ஆள் விண்ணன் தான். இந்த வரியம் வயலுக்கை குழாய் அடிச்சிருக்கிறான். போன முறை வெள்ளம் அடிச்சும் கவலையில்லாமல் திரியிறான்."

செல்லத்துரையரின் குரலில் இலேசான ஆதங்கம் தெரிந்தது.

"அவனுக்கென்ன? ரெண்டு பெடியன்கள் சுவிசிலை. உவன் சும்மா பொழுதுபோக்குக்கெல்லோ தோட்டம் செய்யிறான். எங்களை மாதிரி இதை நம்பி இருக்க வேணும் என்டில்லை........."

இருமியபடி கந்தையர் சொன்னதை செல்லத்துரையர் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"என்ரை வீட்டிலை மூண்டு குமர் இருக்குது. நான் என்னெண்டு காசு சேர்த்து...? இவளவை ஆரையாவது விரும்பி

ணாலும் பேசாம செய்யுங்கோடி எண்டு விட்டிடலாம். அதுக்கும் துணியிறாள வையில்லை."

"ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ அண்ணை, எல்லாம் நடக்கும்"

"உனக்கென்ன? நீ ஆறு பெடியளைப் பெத்திருக்கிறாய். அவங்கள் வளர்ந்திட்டாங்கள் எண்டா சும்மா இருந்து சாப்பிடு வாய். ம்.... அங்கை பார் அவன் ரத்தினம் வேலை செய்யா மல் பிராக்குப் பார்க்கிறான். நீ போய் அலுவலைப்பார். நான் வாறன்" என்றவாறு செல்லத்துரையர் திரும்பி நடந்தார்.

இக்கிரியும், கோரையும் மண்டிப்போய்க்கிடந்த தனது காணியைப் பார்த்தார். "ஒரு சின்னமழை பெய்தாலும் உழுது போடுவன். கடவுளே! இந்தமுறை என்ன செய்யப்போறனோ?"

எண்ணியபடி வரம்பிலிருந்து வீதியில் ஏறினார். வீதிச் சரிவிலே சாய்த்து வைக்கப்பட்டிருந்த சைக்கிளை நிமிர்த்தி னார்.

அவரது வயற்காணி வீட்டிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்தது. வீட்டிற்கும், வயலுக்குமான ஒரேயொரு போக்குவரத்துப் பாதை அந்த நீண்ட வீதி தான். ஒல்லாந்தர் காலத்து வீதி, அநேக வளைவுகளுடன் அமைந்திருந்தது. எழுபத்தொன்பதிலே தார்போட்ட பின் இன்றுவரை செப்பனிடப் படாத வீதி அது. ஒருபுறம் வீதியுடன் சேர்ந்திருந்த வடிகால் பற்றைகள் வளர்ந்து, மண் நிரப்பி அடைபட்டிருந்தது. இரு புறத்து வேலிகளும் நிலம் வரை வெட்டப்பட்டு வெட்டவெளி யாக்கப்பட்டிருந்தது.

"அநியாயப்படுவார்.. ஒரு மரந்தடியையாவது உருப் படியா இருக்க விட்டாங்களே. வீட்டுக்கு அச்சறுக்கையா வேலி யைப்போட்டா அதை வெட்ட வைக்கிறது. எண்டைக்குத்தான் எங்களுக்கு நிம்மதி வரப்போகுதோ? " என்று செத்தல் சுப்பிர மணியத்தினுடைய பேத்திக்கிழவி புலம்பியது இன்றும் செல் லத்துரையரின் காதுகளுக்குள் ஒலித்துக்கொண்டிருந்தது.

உண்மைதான். ஒரு கிராமத்தின் இயற்கை அழகு அங்குள்ள மரங்களிலும் பசுமையான வயல்களிலும் தான் தங்கியுள்ளது.

செல்லத்துரையர் யோசித்துக்கொண்டே சைக்கிளை உழக்கினார்.

ஒழுங்கான இடைவெளிகளில் நடப்பட்டிருந்த அந்த மலைவேம்புக் கன்றுகளைப் பார்த்தார். இரண்டு வருட முதிர்ச் சியில் நாலைந்தடி உயரத்திற்கு வளர்ந்திருந்தன. வெயிலின் அகோரத்திலே இலைகள் சுருண்டிருந்தன. வீசுகின்ற அனற் காற்றிலே அவை ஆடிய போது தண்ணீர் வேண்டி இரப்பது போல அவருக்குத் தோன்றியது.

உச்சிவெயில் மண்டையைப் பிளந்தது. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தார். சாய்மனைக் கதிரையிலே "அப் பாடா" என்று சரிந்து கொண்டார்.

மனைவி பூரணம் மூக்குப் பேணி நிறைந்த தேநீருடன் வந்தாள்.

இவ்வளவு காலம் கடந்தும் அவர் மூக்குப்பேணியை விடவில்லை. அதிலே குடித்தால் தான் தேநீரே ருசிப்பதாகக் கூறுவார்.

மனைவி பூரணம் அடிக்கடி புறுபுறுப்பாள்.

"பெட்டையள் பீலிசிலை குடிக்கிறாளவை... இவர்தான் கண்டறியாத மூக்குப்பேணிக்கை குடிக்கிறார். கொஞ்சமெண்டா லும் நாகரிகம் தெரியாத மனிசன்".

செல்லத்துரையர் மௌனமாகச் சிரிப்பார். வீண் சண் டைகளைத் தவிர்க்க அவர் கையாளும் முறை அதுதான்.

தேநீரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள் பூரணம்.

"அவன் குமார் வந்திட்டுப்போறான். அடைவு வைச்ச கொடியை மீளட்டாம். வட்டியும் முதலும் நகையை விழுங்கப் போகுது".

அவள் குரலில் கவலை தெரிந்தது.
அதைக் கண்டுகொண்ட செல்லத்துரையர் மெதுவாகச் சொன்னார்.

"நானென்னப்பா செய்யிறது? இடையிடையிலை அங் கினை இங்கினை எண்டு வாற தரகுக்காசிலை சீவியம்

போகுது. இனி நகைகளை மீளிறதெண்டால் காணியைத்தான் விக்கவேணும் ....”

“... றோட்டுக்கு வெளிக்கிடவே வெக்கமாக் கிடக்கு. கழுத்திலை ஒரு சங்கிலி எண்டாலும் வேண்டாமே. என்ன கந்தறுந்த வாழ்க்கையப்பா?”

சலித்துக்கொண்டாள் பூரணம்.

“இஞ்சைபார் பூரணம் எங்கட மூண்டு பெட்டையளும் காதிலை கிடக்கிற தோட்டைத் தவிர ஏதாவது போட்டிருக் கிறாளவையே? இண்டுவரைக்கும் அதை வாங்கித்தா இதை வாங்கித்தா எண்டு கேக்கேல்லை. அவளவைக்கு இல்லாத கவலை உமக்கு வந்திட்டுதோ?.......

பூரணத்துக்கு அது சுள்ளென்று சுட்டிருக்க வேண்டும். “என்னவோ செய்யுங்கோ. எல்லாம் என்ரை விதி. கிடந்து உலை யுறன்”என்றவாறு பேணியை எடுத்துக்கொண்டு நகர்ந்தாள்.

“ஏதோ கோடீஸ்வரன் வீட்டிலை இருந்துவந்த குமரி மாதிரி எல்லே நிக்கிறா” என எண்ணி மெல்லச் சிரித்துக் கொண்டார். பூரணம் இலேசில் எதிலாவது திருப்திப்படுபவள் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தார். அன்றைய பத்திரிகையை எடுத்துப் புரட்டினார். சாப்பாடு தண்ணீர் இல்லா விட்டாலும் நாட்டு நடப்புக்களை அறிந்து கொள்ளாவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது.

தலைப்புச் செய்தியை மேய்ந்தார்.

“அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றைக் காண்பதே எமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்”

“மூன்று கிபிர் விமானங்கள் கொள்வனவு”

“உவங்களைத் திருத்தேலாது. நான் என்ரை பிரச்சி னைக்கே தீர்வு காணேலாமல் முழுசிறன்” வாய்விட்டுத் திட்டிக் கொண்டார்.

கைகள் ஐந்தாம் பக்கத்தைப் புரட்டின.

காடழிப்பதால் ஏற்படும் தீமைபற்றி "மில்க்வைற்" தகவலாக ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

நிமிர்ந்து உட்கார்ந்தார். "...மரங்களைத் தொடர்ச்சியாக அழிப்பதால் இயற்கையான காலநிலை வட்டம் பாதிப்படையும்; நீர்ச்சமநிலை குலையும்; மழை குறைந்து கடும் வரட்சி ஏற்படும். எனவே அளவுக்கு மீறி மரங்களை அழிக்காது, இருக்கும் மரங்களைப் பேணுவோம். நாளைவரும் எமது சந்ததி நலமாக வாழ ஆளுக்கொரு மரம் நடுவோம். எமது தேசம் செழிப்படையக் கண்டு மகிழ்வோம்" – என்று அந்தக் கட்டுரை முடிந்திருந்தது.

பத்திரிகையை மேசையில் வைத்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதியோரங்கள், வெளிகள் எல்லாம் மரங்கள் நடப்பட்டு மிகவும் ஒழுங்காக நீருற்றப்பட்டுப் பராமரிக்கப்பட்ட காட்சிகள் மனதில் நிழலாடின.

"ஓ...! எவ்வளவை இழந்திட்டம்"

நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்.

"இந்த மனிசன் சாப்பிடாமல் என்ன கண்டறியாத யோசினையோ?" உள்ளே பூரணம் புறுபுறுப்பது கேட்டது.

ஏதோ தீர்மானித்தவராக எழுந்து கிணற்றடிக்கு முகங் கழுவப் போனார்.

★ ★ ★

இலேசாகச் சில்லிட்டபடி வீசிய காற்று செல்லத்துரையரை நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது. சிந்தித்தபடி வாளியும் கையுமாக நின்றுவிட்டதை உணர்ந்தவர், நிமிர்ந்து மேலே பார்த்தார்.

வெகு தொலைவில் வடகீழ் வானம் மெல்லியதாகக் கறுத்திருப்பது தெரிந்தது.

இனி ......

மழை பெய்யக்கூடும்!

○ சஞ்சீவி 11.10.97

# 2

# மலராத மலர்

ஆரவாரமாக விடிந்த அந்தக் காலைப்பொழுது அவசரம் நிறைந்த இந்த உலகத்தை நினைவூட்டி, உறங்கிக் கிடந்த உமாவைத்தட்டி எழுப்பியது. உமா கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தபடி கொட்டாவி விட்டுக் கொண்டாள். பிடிப்பில்லாமல் கழிந்து கொண்டிருக்கும் அவளுடைய முப்பத்தெட்டு வருடங்களில் இதுவும் ஒரு நாள். படுக்கையை விட்டு எழவே உமாவுக்கு வெறுப்பாயிருந்தது.

"கல்லூரி, வீடு, சமையல்..... சே...!"

அலுத்துக் கொண்டாள்.

"உமா! உமா! எழும்பேல்லையே? ஆறுமணியாகுது..."

முன்னறையிலிருந்து அப்பா கூப்பிடுவது கேட்டது. அந்த அழைப்பின் அர்த்தம் அவளுக்குத் தெரியும். எட்டு மணி வரை இழுத்து மூடிக்கொண்டு படுத்திருக்கும் அவளுடைய தாய், உமா தேநீர் ஊற்றிக் கொடுக்கும் வரை அசைய மாட்டாள். அவள் ஊற்றிக் கொடுத்தால் தான் அப்பாவுக்கும் விடியும்.

மெல்ல எழுந்து படுக்கையை ஒழுங்காக விரித்தாள்.

அடுப்பிலே 'கேற்றிலை' வைத்துவிட்டுக் கிணற்றடிக்குப் போனாள்.

சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தபோதும் வீடு நிசப்தமாக இருக்கவே அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"உங்களுக்கு ஒருநாளும் விடியாது. நான் ஒருத்தி விடிய எழும்பிச் சமைச்சு எத்தினை அடுக்குகள் பார்க்க வேண்டிக்கிடக்கு. பத்தாதெண்டு தேத்தண்ணி ஊத்தக்கூட நான் வேணும்."

உமாவின் கத்தலைக்கேட்டு தாய் புறுபுறுத்துக் கொண்டு வந்தாள்.

“இப்ப ஏனடி கத்திறாய்?.. மனிசர் ஒரு நாளெண்டாலும் நிம்மதியாப் படுத்தெழும்ப வழியில்லை...”

“ஓமோம் நல்லா வேலை செய்த களை. போய்ப் படுத்து நித்திரையைக் கொள்ளுங்கோ...”

உமாவின் குரலிலிருந்து ஏளனம் தாய் கனகத்தைத் தாக்கியிருக்க வேண்டும்.

“பின்னை நீ உன்ரை கொக்காக்காறிய விட எந்தள விலை குறைஞ்சனீ!..”

அக்காவை நினைவூட்டியதும் உமா சட்டென்று அடங்கினாள்,

அக்கா!

பாவம். முப்பத்தாறு வயதுவரை காத்திருந்துவிட்டு, யார் தயவையும் எதிர்பாராமல் தனக்கென்று ஒரு வாழ்வைச் சிருஷ்டித்துக் கொண்டவள். அதுவும் தன்னைவிட ஐந்து வயது குறைந்தவரைத் திருமணம் செய்ததன் மூலம் வீட்டிலே பெரும் பிரளயத்தினைக் கிளப்பிவிட்டுச் சென்றவள்.

இவர்களது சண்டையைக்கேட்டதும் தந்தை சிவபாதம் எழுந்து வந்தார்.

“எணையப்பா ஏனிப்ப கத்திறாய்?.. கொஞ்சமெண் டாலும் அவளை நிம்மதியாய் இருக்கவிடன். அவள் பாவம் பள்ளிக்குடத்திலையும் கிடந்து கஷ்டப்பட்டுப்போட்டு.. இஞ்சை யும்.. முறியிறாள்.. நீ எப்பனெண்டாலும் உதவியா இரன்.. எக்கணம் அவள் ஒரு கலியாணத்தைக்கட்டிப் புருஷன் வீட்டிலை கொஞ்சநாள் இருப்பமெண்டு போனா நீ இஞ்ச சமைக்கவே மாட்டாய் போல ...!”

தாயை ஏசியது உமாவுக்கு ஆறுதலாக இருந்தது.

கனகம் மனதினுள்ளே திட்டிக்கொண்டு தேநீரை ஊற்றத்தொடங்கினாள். பாத்திரங்கள் தட்டுப்படுவதில் அவளு டைய கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது.

உமா மௌனமாகக் காய்கறிகளை வெட்டத் தொடங்கினாள்.

ஒருவழியாகச் சமையலை முடித்துவிட்டு வெளிக்கிடத் தொடங்கியபோது நேரம் எட்டைத் தாண்டிவிட்டது.

கண்ணாடி முன்னேநின்று தலையை இழுக்கத்தொடங்கினாள். காதுக்கு அருகிலே நரை தெரிந்த இடத்தை எண்ணெய் பூசி மறைத்தாள். இடையைத்தாண்டி நீண்டிருந்த கூந்தலைப் பின்னி முடித்தாள். முன்பெல்லாம் கண்ணாடியுடனிருக்கவே அவளுக்குப் பிடிக்கும்.. இப்போது கண்ணாடி தன் வயதைக் குத்திக் காட்டுவதாக நினைத்துக்கொள்வாள்.

“இளமை,அழகு எல்லாம் என்னைவிட்டுத் தொலைந்து கொண்டிருக்கின்றன. இனி எனக்கென்று ஒருவன் ...?

பெருமூச்சு விட்டுக் கொண்டாள் உமா. அப்படி எண்ணும் போதே கல்லூரியில் உடன் கற்பிக்கும் ஆசிரியர் சிவநாதனின் நினைவு அவளையறியாமல் தோன்றியது.

“நாப்பத்துமூண்டு வயதிலையும் எவ்வளவு இளமையா இருக்கிறார். இன்னும் ஏன் கலியாணம் கட்டேல்லை? ஒரு வேளை அவருக்கு என்னிலை விருப்பம் இருக்குமோ? இல்லாட்டி ஏன் என்னோட மட்டும் கூடுதலாகக் கதைக்கிறார்? சீ! இதென்ன விசர் எண்ணம். கூடப்படிப்பிக்கிற ஆம்பிளை ரீச்சர்மார் கதைக்கிறது வழமைதானே எண்டாலும்... என்ரை மனம்...”

ஏதேதோ கற்பனைகளிலே திளைத்துப் போனவள் சாப்பிடாமலே கல்லூரிக்குக் கிளம்பினாள்.

முன்விறாந்தையிலே பத்திரிகை படித்தபடியிருந்த சிவபாதம் நிமிர்ந்து பார்த்தார்.

“என்ன உமா சாப்பிடாமல் வெளிக்கிடுறியோ?...”

அவரது குரலில் எந்தவிதமான உணர்ச்சிகளும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை.

“எனக்குப் பசிக்கேல்லை” சிரத்தையின்றிப்பதில் சொல்லியபடி சைக்கிளை எடுத்தாள் உமா.

“ம்…” என்று பெருமூச்சு விட்டபடி சிவபாதம் தொடர்ந்தார்.

“உனக்கும் ஒண்டைப் பேசிச் செய்ய நானும் அலை அலையெண்டு அலையிறன். சரிவருகுதில்லை. ஒண்டில் சீதனம் கூடக் கேட்கிறாங்கள். இல்லாட்டி வயதைப் பார்க்கி றாங்கள்”

“அப்பா! எனக்குக் கலியாணம் வேணுமெண்டு கேட்ட னானே? ”

அது பொய் என்பதை அவளுடைய மனம் இடித்து ரைத்தது.

“பிள்ளை நீ ஒண்டுக்கும் யோசியாதை. நேற்றுத் தம்பையா குறிப்பொண்டு கொண்டு வந்தவர். வாத்திப்பெடியன் அவனும் ரீச்சர் பொம்பிளைதான் வேணுமாம். இது கட்டாயம் சரிவரும்…”

உமா அதுபற்றி எதுவும் பேசவில்லை. அவள் மனதில் சிவநாதன் மட்டும் நிறைந்திருந்தார்.

“அப்பா போயிட்டுவாறன்” என்றவாறு சைக்கிளை வீதிக்கு நகர்த்தினாள்.

வீதி நிறைந்து மாணவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவர்களுடன் கலந்தாள். அந்த நீண்ட வீதியால் வந்து பிரதான நாற்சந்தியில் ஏறியபோது சோதனைச்சாவடி எதிர்ப்பட்டது.

அதில் நின்றவர்கள் அடையாள அட்டையைக் கூடப் பார்க்காமல் எல்லோரையும் போகவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

“அப்பாடா! இண்டைக்கு வேளைக்குப் போயிடலாம்” என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள் உமா. அவளது முறை வந்தது.

"ஐடென்ரி இருக்கா.?"
என்று கேட்டான்.
எடுத்துக் கொடுத்தாள்.
"ஜொப்...?"

அவள் கொடுத்த ஆசிரிய அடையாள அட்டையிலே அனைத்து விவரங்களும் உள்ளன. அதைக் கூடப்படிக்கத் தெரியாமல்..!

"ரீச்சர்" என்று எரிச்சலுடன் பதிலளித்தாள்.

"ஸ்கூல்...?" தேவையற்ற வினாக்கள் தொடர்ந்தன.

'தம்பி உன்னை விட எனக்கு இருபது வயது கூட' என்று உமா மனதுக்குள் எண்ணிக் கொண்டாலும் வெளியே சொல்லவில்லை.

பின்னால் நிறையப்பேர் சேர்ந்துவிட்டதை அறிந்ததும் அவளைப்போக விட்டு விட்டான்.

மனதினுள்ளே திட்டிக்கொண்டு சைக்கிளை உழக்கினாள்

கல்லூரியை அடைந்த போது மாணவர்கள் பிரார்த் தனை முடிந்து வகுப்பிற்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

உமாவின் விழிகள் ஆவலுடன் சிவநாதனைத் தேடின. தென்படவில்லை. அவசரமாக ஒப்பமிட்டுவிட்டு தனது வகுப்பிற்குப் போனாள்.

அந்தப் பாடம் முடிந்ததும் அடுத்த பாடம் அவளுக்கு ஓய்வு என்பதனால் ஆசிரியர் தங்கும் அறையை நோக்கி நடந்தாள்.

அறையினுள்ளே மிஸிஸ் கணபதிப்பிள்ளை கால் மேல் கால் போட்டபடி பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். பக்கத்திலே மிஸிஸ் கதிர்காமநாதனும் மிஸிஸ் சின்னத் தம்பியும் சுவாரசியமாக எதைப்பற்றியோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். உமாவைக் கண்டதும் அவர்களின் சிரிப்பு நின்றது. மிஸிஸ் கணபதிப்பிள்ளை பத்திரிகையைப் பதித்து விட்டு உமாவைப் பார்த்தார்.

"ஆ... உமா! வாரும் வாரும் வெள்ளிக்கிழமை வந்த புறப்போசல் என்ன மாதிரி?"

உண்மையில் உமா தன் திருமண விசயமாக எதுவும் கதைப்பதில்லை, ஆனால் எப்படியோ எல்லா விடயங்களும் இவர்களுக்கு எட்டி விடும்.

"அது மிஸ் ........ மாப்பிள்ளை எனக்குப் பிடிக்கேலை" உமா இழுத்தாள்.

அது அப்பட்டமான பொய் என்பது எல்லோருக்கும் தெரியும். அது உமாவுக்கு புரிந்தாலும் அதையே சொன்னாள்.

"கேட்டீரே கதிர்காமநாதன்! தனக்குப்பிடிக்கேலையாம்"

மிஸிஸ் கணபதிப்பிள்ளை பெரிதாகச் சிரித்தார்.

"சிலவேளை இருபது வயதுப்பெடியன் என்டாப் பிடிக்குமாக்கும்"

மிஸிஸ் கதிர்காமநாதன் நக்கலாகக் கூறினார்.

உமா மௌனமாக அமர்ந்திருந்தாள்.

"ஏன் சின்னத்தம்பி? உமாவுக்கு ரெண்டாந்தாரமா ஒருத்தரும் அகப்படேலையோ?"

"இரண்டாந்தாரமாகப் போக உமாவுக்கு விருப்பமில் லைப்போல"

இது மிஸிஸ் சின்னத்தம்பி.

உமா பெருகி வரும் கண்ணீரை அடக்கிக்கொண்டாள்.

அப்போது ஒரு மாணவி வந்து மிஸிஸ் கணபதிப்பிள் ளையிடம்.

"மிஸ்!" "என்றாள்

"என்னடி"

மிஸிஸ் கணபதிப்பிள்ளையின் குரலிலே சலிப்புத் தெரிந்தது.

“... இந்தப் பாடம் உங்கட மிஸ்”

“... நீ ..... இயர் நயின் ‘ஏ’ எல்லே?”

“இல்லை மிஸ். ரென் ‘பி’

“நான் இப்ப பிறின்ஸிப்பலுக்கு ஒரு வேலை செய் யிறன். நீ போய் வகுப்பை சத்தம் போடாமல் பார்.....”

அந்த மாணவி சிரிப்பை அடக்கிக் கொண்டு வெளியே போனாள்.

“சே...! இன்ரரெஸ்ரிங்கான கதையைக் குழப்பிப்போட் டாள்... என்ன கதைச்சனீர் சின்னத்தம்பி..... ஆ! உமாவுக்கு ரெண்டாந்தாரம் ... அது என்னத்துக்கு?”

“ஏன்? ”

“எங்கட ஸ்கூல் மாஸ்ரரை எல்லே உமா வளைக்கப் பாக்கிறா”

“ஆர் மிஸ் அது?”

மிஸிஸ் கதிர்காமநாதனின் குரலில் ஆவல் தொனித் தது.

“வேறை ஆர்? உவர் சிவநாதன் தான்.”

“அவருக்கு சாவச்சேரியிலை முற்றாகிப் போட்டினம் எண்டு கேள்விப்பட்டன்.”

உமா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அதைக் கவனிக்காதது போல மிஸிஸ் சின்னத்தம்பி சொல்லிக் கொண்டு போனார்.

“கொழுத்த சீதனம் இருபது இலட்சம் காசு, நகை நட்டு, மாடிவீடு, தென்னங்காணிகள், மறவன்புலோவிலை வயல் எண்டு இனி ராஜயோகம்தான். அந்தாளுக்கு. ஸ்கூலையும் மாத்திக்கொண்டு போயிடுவார்.”

உமாவுக்கு தொடர்ந்து அங்கிருக்கப் பிடிக்கவில்லை. தன் காதில் விழுந்தவை ‘கற்பனையாக இருக்கக் கூடாதா?’ என்று ஏங்கினாள்.

வெளியே வந்தாள்.

உள்ளே மூன்று ஆசிரியைகளும் சிரித்தது கேட்டது.

அந்தப்பாடம் முடிந்ததற்கான மணி ஒலித்தது.

எதிரே ஒரு வகுப்பறையிலிருந்து ஆசிரியர் சிவநாதன் வெளியேறி வந்து கொண்டிருந்தார். இவளைப் பார்த்து முறு வலித்தார்.

"என்ன மிஸ் அழுதுகொண்டு வாறீங்கள்? ஏதும் பிரச்சினையோ... ?"

"... ஒண்டுமில்லை சேர் கண்ணுக்க சோக்குத்தூள் விழுந்திட்டுது அதுதான்..."

சிவநாதன் தன்னுடைய பையைத்திறந்து அழைப்பிதழ் ஒன்றை எடுத்து நீட்டினார்.

"வாற இருபதாம் திகதி எனக்கு வெடிங். கட்டாயம் வாங்கோ மிஸ் ..." என்றவாறு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

உமா அழைப்பிதழைக் கையிலே பிடித்தவாறு பிரமை பிடித்துப் போய் நின்றாள்.

"சே....! அவர் என்னோட இயல்பாகக்கதைக்க நானும் பிழையான கற்பனைகளை வளர்த்திட்டன். இந்தக் கிழவிக்குக் கண்டறியாத காதல் கத்தரிக்காய்" என்று தன்னைத்தானே திட்டிக்கொண்டாள்.

ஏதோ முடிவுக்கு வந்தவளாக அதிபர் அறையை நோக்கி நடந்தாள்.

அரைநாள் விடுப்புப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் புறப் பட்டாள்.

வழி முழுவதும் சிந்தனைகள்.

"என்ரை ஆசை வீணாய்ப் போச்சு இனி என்ன செய் யிறது? விடிய அப்பா சொன்ன மாப்பிள்ளை சரிவருமோ? கட்டாயம் சரிவரும். அப்பாவும் மும்முரமா நிற்கிறார். அந்த மாப்பிள்ளையும் நல்லவராய்த்தான் இருக்க வேணும். கடவுளே இந்த மாப்பிள்ளை எனக்குப் பொருந்த வேணும்"

ஒருவாறு வீடு வந்து சேர்ந்தாள்.

சைக்கிளை நிறுத்தி விட்டு படியேறினாள்.

முன் கதவு திறந்து கிடந்தது.

"…. இதென்ன கதவும் திறந்து கிடக்கு. ஆக்களைக் காணேல்லை.." என எண்ணியவாறு உள்ளே நுழைந்தாள். குசினிக்குள்ளே பேச்சுக்குரல் கேட்டது. அம்மாவின் குரல்தான்.

"ஏனப்பா உமாவுக்கு இந்தப் பேச்சுக்கால் சரிவரும் தானே!"

"…கனகம்! இவ்வளவு நாளும் உனக்குத் தெரியாத விஷயத்தை இப்ப சொல்லிறன். உமாவுக்கு நான் சம்பந்தம் பேசினாத்தானே…."

"… அப்ப நீங்கள் சொன்னதெல்லாம்..?"

"அது ஊரைப் பேக்காட்ட. இஞ்சை பார் கனகம். அவள் உமா சுளையா ஏழாயிரம் உழைக்கிறாள். எங்களுக்கு உதை விட்டால் வேறை வரும்படியில்லை. என்ரை பார்ச் செலவுக்கே கனக்க வேணும். அவளுக்கும் கலியாணத்தைச் செய்து வைச்சிட்டா பேந்து எங்கட நிலமை?"

"நீங்கள் சொல்லிறதும் ஞாயம் தான். இனி ஆர் உவளைக் கட்டப் போறாங்கள்? மூத்தவள் ஓடினமாதிரி ஓட உவளுக்குத் துணிவில்லை. இருக்கட்டும் எங்களுக்கும் துணைதானே… "

கனகத்தின் குரலிலே பூரணதிருப்தி இருந்தது.

உமா சட்டென்று திரும்பினாள். தளர்ந்த நடையுடன் தன் அறைக்குள்ளே புகுந்து கட்டிலில் விழுந்தாள். தலையணையினுள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளது உடலோடு உள்ளமும் குலுங்கியது. அவளுடைய உள் மனதிலிருந்த ஆசைகள், கற்பனைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து கொண்டு கண்ணீர் பெருக்கெடுத்தது.

தன் மனதிலுள்ள காதலை வெளிப்படுத்தவோ, தனக்கென்று ஒரு வாழ்க்கையைச் சுயமாக அமைத்துக்கொள்ளவோ துணிவில்லாத அந்தப்பேதைக்கு இனி அழுவதைத்தவிர வேறு வழி?

○ சஞ்சீவி 22.11.97

# 3

# துணை

மழை கொட்டிக்கொண்டிருந்தது.

நீண்டநாள் தாகத்தைத் தணித்துக்கொள்ளுமாப் போல பூமியும் விடாமல் உறுஞ்சிக் கொண்டுதானிருந்தது. முற்றத்து மண்ணிலே மழைத்துளிகள் வரைகின்ற கோலத்தை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தேன்.

குமிழிகள் உருவாவதும் உடைவதும் ......!

மனித வாழ்க்கையும் இப்படித்தானே! வாழ்விலே நிறைந்த சந்தோஷம் இருந்தாலும் ஆத்மதிருப்தி ஏற்படாது. இடையிடையே துன்பத்தின் சாயலும் தென்பட வேண்டும்.

அப்போதுதான் இன்பம் என்பது உயர்வானதாக அதிகப் பெறுமதியுடையதாக இருக்கும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. எனக்கு ஓய்வுநாள். பிள்ளைகள் இருவரும் ரியூசனுக்குப் போய்விட்டார்கள்.

மழை பெய்வதனால் பரிபூரணமான ஓய்வினை இன்றுதான் அனுபவிக்க முடியும்.

கால்களை நன்றாக நீட்டிச் சாய்ந்து கொண்டேன்.

"தம்பி! தேத்தண்ணியைக் குடி"
நிமிர்ந்து பார்த்தேன்.

அக்கா கையிலே தேநீர்க் கோப்பையுடன் நின்றாள்.

எனது கண்களைச் சந்தித்ததும் அவளது முகத்திலே புன்முறுவல் நெளிந்தது.

".....என்னடா கடும் யோசனை?......"

"....ஒன்றுமில்லையக்கா சும்மா மழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறன்..." என்றவாறு தேநீரை வாங்கினேன்.

அக்கா என்னைவிட ஐந்து வயது மூத்தவள். நல்ல கறுப்பு. ஆனாலும் அவள் அணிந்துள்ள மூக்குமின்னியும், சிரிக்கும்போது பளீரிடும் பல்வரிசையும் அவளுக்கு பேரழகைத் தரும்.

மிகுந்த அமைதியானவள். மனத்திலுள்ள துயரங்களை இலேசில் வெளிப்படுத்தத் தெரியாதவள். அவள் அழுவதை நான் ஒருநாளும் கண்டதில்லை. எனது மனைவியும் அலுவலகம் போய் விடுவாள் பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று விடுவார்கள். அப்போது அக்கா வீட்டிலே தனியாகத்தான் இருப்பாள். ஒருவேளை, தனிமைதான் அவளது துன்பங்களை வெளிப்படுத்தச் சரியான நேரமாயிருக்குமோ?

இருக்கலாம்.......!

இருபது வருடங்களுக்கு முன் அத்தான் கை விட்டுப் போனபின் எனது ஆதரவிலேதான் வாழ்கிறாள். திருமணம் முடித்துச் சரியாக ஐந்தாவது நாள் அத்தான் நுணாவிலுக்குப் புறப்பட்டவர்தான். பிறகு ஐயா தேடிச் சென்றபோது அவர் கூறிய காரணம் ஏற்கத்தக்கதாக இல்லை.

"...அக்கா சரியான சண்டைக்காரியாம். அவளுடன் வாழ்க்கை நடாத்துவதிலும் பார்க்கப் பேயுடன் வாழலாமாம்..."

சிலர் திருமணப் பொன்விழாக் கண்டும் கூட இன்னும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாத இந்தக் காலத்தில் ஐந்து நாள்களில் மனைவியைப் புரிந்து கொண்ட 'வின்னன்' எனது அத்தானாகத்தானிருக்கும்.

ஐயா ரோசக்காரன்.

வீண் சர்ச்சைகளுக்கு இடங்கொடுக்காமல் திரும்பி வந்து விட்டார்.

அத்தானும் இன்றுவரை மணவிலக்குப் பெற்றுக் கொள்ளவுமில்லை. எதற்காக அக்காவை நிராகரித்திருப்பார்?

இன்றுவரை என்னால் விடைகாணமுடியாத கேள்வியது.

தேநீரைக் குடித்துக்கொண்டே அக்காவைப் பார்த்தேன். மேசையில் வைத்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

எழுதி முடித்ததும் என்னை நோக்கித் திரும்பினாள்.

"....தம்பி தூள் திரிக்க வேணும். உவள் கீதா நாலு கட்டுக்கொப்பி கேட்டவள். நீயும் தலைமயிர் வெட்ட வேணும் எண்டு சொன்னாய். கெதியிலை இந்தச் சாமான்களை வாங்கித்தந்து போட்டுப்போய் வெட்டு."

இந்த வீட்டிலே நிர்வாகம் பெரும்பாலும் அக்காவின் கையிலேதான் இருக்கும். பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

"அக்கா செல்லப்பொடி வந்தாநிக்கச் சொல்லுங்கோ. தேங்காய் புடுங்க வேணும். மழை காலத்திலை ஆக்களைப் பிடிக்கேலாது" என்றவாறு சைக்கிளை எடுத்தேன்.

மழை இலேசாகத் தூறியது. குடையை மடித்துப் பையினுள்ளே வைத்துக் கொண்டு சைக்கிளை உழக்கத் தொடங்கினேன்.

கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

என்போன்ற அரச ஊழியர்கள் ஞாயிற்றுக்கிழமையிலே தான் பொருள்கள் வாங்குவார்கள். அவ்வேளைகளிலே கடைகள் பூட்டப்படுவது எனக்கு எரிச்சலை ஊட்டும்.

வல்லிபுரம் கடை இன்று திறந்திருக்கும் என நினைத்துக் கொண்டு அந்தப்பக்கம் சைக்கிளைத் திருப்பினேன்.

வல்லிபுரம் கடையில் எல்லாப் பொருள்களும் இருந்தாலும் அறாவிலையாக இருக்கும். நிறைகளில் வெட்டுவதில் அவருக்கு நிகரில்லை. தராசிலுள்ள காட்டி வேறு விற்பனைப் பொருள்களால் மறைக்கப்பட்டிருக்கும். பதினைந்து நாளாக நாறிய பாணைக்கூட யாரையாவது ஏமாற்றி விற்றுவிடுவார்.

கலியாணம், செய்யாத தனிநபர். அறுபது அறுபத்தைந்து வயதிருக்கும். யானைக்குட்டி மாதிரி இருப்பார். சின்னம்மா வீட்டுக் கசிப்பிலே வளர்ந்த தேகம். எனினும்

அளவு கணக்கில்லாமல் சாப்பிடுவதால் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்.

யாருக்காக இவ்வளவு காசையும் சேர்க்கிறாரோ?

கடைவாசலை அண்மித்தேன். வழக்கம் போல வாடிக்கையாளர் எவருமில்லாமல் வெறுமையாக இருந்தது.

வல்லிபுரத்தார் வாய் நிறைய வெற்றிலையைப்போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தார். என்னைக்கண்டதும் வரவேற்றார்.

“எட நாதன்! வாடாப்பா வா. நீ என்னைக் கவனிக்கிறதுமில்லை.” அவரது குரலிலே ஆதங்கம் தெரிந்தது.

“ஏனண்ணை?”

“மற்றக் கடைகள் பூட்டியிருந்தா மட்டும் இஞ்சை வருவாய். சரி... அதுகிடக்கட்டும். இப்ப என்ன சாமான் வேணும் சொல்லு. இஞ்சைபார். எத்தினை ஸ்பெசல் அயிட்டம் எல்லாம் எடுத்துப்போட்டிருக்கிறன். கப்பலாலை லொறி நேர இஞ்சை வந்திட்டுத்தான் ரவுணுக்கே போறது.”

வல்லிபுரத்தாரின் வார்த்தைகளில் வியாபாரத் தந்திரம் தெரிந்தது.

“எனக்கு இப்ப ரெண்டு கிலோ செத்தல், ரெண்டு கிலோ மல்லி வேணும். நல்ல சிவப்புச்செத்தல் இருக்கோ...?”

“பின்னை இல்லாமல்...! இஞ்சை பார்......”

அவர் காட்டியது சிவப்புச் செத்தல் தான். எனினும் நிறுப்பது கலப்புச் செத்தல் என்பது எனக்குத் தெரியும். என்றாலும் அவசரத்தேவைக்கு வேறு என்ன செய்வது?

வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டேன். மிகுதிக் காசைத் தரும்போது இலேசாகச் சிரித்தார்.

“பின்னைச் சொல்லன் நாதன்”

“என்னத்தையண்ணை?”புரியாமல் வினவினேன்.

"உன்ரை கொக்காவும் பாவம் கலியாணம் கட்டி ஆறாவது நாளே அவன் ராஸ்கல் விட்டிட்டு ஓடிட்டான். இவ்வளவு காலமும் நீ அவளுக்கு ஆரையாவது பார்த்துச் செய்து வைக்கவும் யோசிக்கேல்லை..." அவசரமாக இடை மறித்தேன்.

"அண்ணை உதென்ன கதை கதைக்கிறீங்கள்? நான் எத்தனை தரம் கேட்டுப் பாத்திட்டன். அக்காவுக்குத்தான் விருப்பமில்லை..."

"சனம் என்ன கதைக்குது தெரியுமே? நீ தான் குழப்பிக் கொண்டு நிக்கிறாயாம். உன்ரை வீட்டு அலுவலைப் பாக்க வேலைக்காறி மாதிரி வைச்சிருக்கிறாயாம். அது மட்டுமில்லை".

நான் திகைத்துப்போய் எதுவும் பேசாதிருந்தேன்.

".... வீடுவளவு அக்காவுக்குப் பிறகு உனக்குச் சேருமெண்டு..."

"அண்ணை! என்ன சொல்லிறீங்கள்? நான்..."

எனக்கு எல்லாம் வெறுத்து விட்டது. நான் கனவிலும் நினைக்காதவற்றை ஊரார் பேசுகிறார்கள் என்னும் போது....

'சே! இந்த ஊர்வாயை மூடமுடியாது' என எண்ணிக் கொண்டேன்.

வல்லிபுரத்தார் ஆறுதல் கூறுவது போலப் பேசினார்.

"நாதன் நீ ஒண்டுக்கும் யோசியாதை. என்னைப்பார் அறுபத்தைஞ்சு வயதிலையும் கம்பு மாதிரி இருக்கிறன். உன்ரை கொக்காவுக்கும் களக்க வயது இல்லை. ஒரு அம்பது தானே. அவள் டிவோஸ் எடுத்துக் கொண்டு வரட்டும். நான் கட்டிறன். என்னை மாதிரி ஒரு நல்ல மாப்பிள்ளை அவளுக்குக் கிடைக்காது...".

'எளிய ராஸ்கல்! இதுக்குத்தான் இவ்வளவு கதை போட்டனீரோ? ஊரெல்லாம் மேஞ்சு கொண்டு... உமக்கு இப்ப

சாகிற வயதிலை துணை தேவைப்படுகுதோ? உமக்கு அக்காவைத் தூறநேரம் கிணத்துக்க பிடிச்சுத் தள்ளலாம்...'

மனதினுள்ளே திட்டினேன்.

வதந்திகளின் பிறப்பிடம் வல்லிபுரத்தாராக இருக்கும் போது எப்படி என்னால் வெளிப்படையாகத் திட்ட முடியும்? பிறகு மனிசன் எக்கச்சக்கமாகக் கதையைக் கிளப்பிவிடும். இவரிடம் 'நைசாகத்' தான் பேச வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

"அண்ணை! நீங்கள் சொல்லிறதும் சரிதான். எண்டாலும் அக்காவை ஒரு சொல்லுக் கேக்க வேணும். அவவின்ர விருப்பத்தோட தான் எதுவும் செய்யலாம்..."

வல்லிபுரத்தாரின் வாயெல்லாம் பல்லாகியது.

"ஆ பேந்தென்ன? இந்தா! கொக்காவுக்குக் கொண்டு போய்க் குடு ..." என்றவாறு இனிப்புப் போத்தலைத் திறந்து ஒருபிடி அள்ளி நீட்டினார்.

இனிப்பைத்தந்து அக்காவை வளைக்கும் எண்ணமோ? சின்னப்பிள்ளை என நினைத்து விட்டார் போலும். அவசரமாக மறுத்தேன்.

"...வேண்டாமண்ணை பிறகு... பாப்பம்....."

விடைபெற்றுக் கொண்டு சைக்கிளில் ஏறினேன்.

எனது உழக்கலில் என்கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்பது தெரிந்தது. யாராயிருக்கும் என எண்ணமிட்டவாறே வீட்டினுள் நுழைந்தேன்.

"வாரும் நாதன்!" அமர்ந்திருந்தவர் வரவேற்றார்.

இவர்...?

யாரென்று நினைவுக்குக்கொண்டுவர முயன்று தோற்றேன்.

"...என்ன மறந்து போனீரோ..."

வந்தவர் முகத்திலே சிரிப்பிருந்தது. என் தலையை தடவிக் கொண்டேன்.

"....அவரின்ர மச்சானடா தம்பி..."
அக்கா பதிலளித்தாள்.

அவரின்ர என்று சொல்லும்போது அக்காவின் குரலிலிருந்த பரவசம் என்னை நிமிர வைத்தது.

"ஓ...! சிவபாதம்! நான் மறந்துதான் போனன். அது சரி... நேர இங்கதான் வாறீரோ? அல்லது யாழ்ப்பாணம் வந்த இடத்திலை..."

"இங்கதான் வாறன். ஒரு முக்கியமான அலுவல் கதைக்க வேணும்..." என்றவாறு சிவபாதம் அக்காவைத் திரும்பிப் பார்த்தார்.

"நீங்கள் கதையுங்கோ வாறன்"

அக்கா உள்ளே போய்விட்டாள்.

"....சரி சொல்லும் என்ன பிரச்சனை?" எனது குரலில் ஆவல் தொனித்தது.

".....என்னெண்டு தொடங்கிறதெண்டு தெரியேல்லை நாதன். நீர் என்னைப் பிழையா நினைக்கக்கூடாது. நான் இடையிலை இருக்கிற ஆள். என்னோடை சண்டை பிடிக்கக் கூடாது..." என்று சிவபாதம் இழுத்தார்.

"இதென்ன கூத்து? மனிசன் நல்லாப்பீடிகை போடுது ஒருவேளை அத்தான் 'டிவோஸ்' எடுக்கிற அலுவலா அனுப்பி இருப்பாரோ?...." சிந்தனை வசப்பட்டவாறே,

"விஷயத்தைச் சொல்லுமன் பாப்பம்" என்றேன்.

"....ஒண்டுமில்லை.... உவர் அத்தான் என்னை அனுப்பினவர். பழசை எல்லாம் மறக்கட்டாம். செய்த பிழைக்கு மன்னிப்புக் கேக்கிறாராம். அக்காவை வந்து தன்னோடை வாழட்டாம்..."

சட்டென்று என் உள்ளம் குளிர்ந்து போவதை உணர்ந்தேன்.

வல்லிபுரத்தாரிடம் கதைத்துவிட்டு எரிச்சலுடன் வந்த எனக்கு இந்த வார்த்தைகள் அமுதம் போல இருந்தன. கடைசிக் காலத்திலாவது அக்கா சந்தோஷமாக வாழப் போகிறாள் என்ற பூரிப்பு எனக்கிருந்தாலும், அத்தான் வந்து அழைக்காதது. பெரிய குறையாகப்பட்டது. ஒருவேளை முகத்தில் விழிக்க வெட்கப்பட்டிருக்கலாம்.

"சிவபாதம் உண்மையாகவே சொல்லிறீர்? எனக்கு என்ன சொல்லிறதெண்டு தெரியேல்லை. அத்தான் ஏன் வரேல்லை? "

"அவர் என்னெண்டு வருவார்? பாரிசவாதம் வந்து வலது கைகால் இழுத்துப் போட்டுது. ஆள் படுத்தபடுக்கை தான்"

என் தலையில் இடி இறங்குவது போல உணர்ந்தேன்.

"எளிய மனிசன்! இவ்வளவு காலமும் ஏன் நாயே எண்டு கூடக்கேக்காதவருக்கு இப்ப கழுவித்துடைக்க மட்டும் அக்கா தேவைப்படுதாக்கும். இப்ப மட்டும் அக்கா சண்டைக்காறி இல்லையாமோ? போய்ச்சொல்லும் சிவபாதம். அக்கா வரமாட்டா. அவ கடைசி வரை என்னோடை தான் இருப்பா எண்டு."

கோபத்திலே துள்ளிக்குதித்தேன். கதவினூடு என் மனைவி கூட எட்டிப்பார்த்தாள். எனது வார்த்தைகளிலிருந்த நியாயத்துக்குக்கட்டுப்பட்டுச் சிவபாதம் அமைதியாக இருந்தார்.

அக்கா சரேலென வெளிப்பட்டாள்.

"தம்பி! கொஞ்சம் பொறு. நான்..... அவரோட போய் இருக்கிறதா முடிவு செய்திட்டன்......"

"அக்கா......! திகைத்துப் போனேன்.

அக்கா கண்களிலே துளிர்த்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

"இப்பிடி எல்லாம் கதைக்கிறன் எண்டு உனக்குக் கோபமாயிருக்கும். இவ்வளவு காலமும் என்னை ஆதரிச்சாய் அதுக்கு நான் என்ன செய்தாலும் ஈடாகாது. இந்த சந்தோஷ மான குடும்பத்திலையிருந்து பிரிஞ்சுபோறது எனக்குக் கவலை தான். எண்டாலும்.... அவர் இப்பிடிக்கைகால் வழங்காமல் கிடக்கேக்க என்னாலை போகாமல் இருக்கேலாதடா...." கேவினாள் அக்கா.

ஐந்து நாள் வாழ்க்கை அத்தானின் மேல் இவ்வளவு பிடிப்பைக் கொண்டு வருமா? பிரமிப்புடன் அக்காவையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

"......கலியாணத்தின்ர முக்கிய நோக்கம் சந்ததி யைப் பெருக்குகிறது மட்டுமில்லை. இப்படி வயதான காலத் திலை... நோய்வாய்ப்பட்ட நேரத்திலை ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையாக இருக்கிறதுதான். அது அவருக்கு இப்ப தான் விளங்கியிருக்கு. தயவு செய்து என்னைத்தடுக்காதை. நான் நான்....." மேற்கொண்டு எதுவும் பேச இயலாதவளாய் முகத்தைப் பொத்திக்கொண்டு உள்ளே ஓடினாள் அக்கா.

வரவேற்பறையிலே கனத்த மௌனம் நிலவியது.

உள்ளே அக்கா அழுவது கேட்டது. ஒருநாளும் அழா தவள் இன்று எதற்காக அழுகிறாள்?

இழந்துவிட்ட சந்தோஷங்களை நினைத்து அழுகி றாளோ?

அவள் போக விரும்பும்போது நான் தடையாக இருக்கக் கூடாது!

பாவம் அக்கா!
இனியாவது வாழட்டும்.!

○ சஞ்சீவி 27.12.97

# 4

# பிரசவம்

பத்திரிகையைப் படித்தபடியே தூங்கிவிட்டிருந்த சுகுமாரைத் திடீரெனக் கேட்ட மணியொலி தட்டியெழுப்பியது. மேசையில் வைத்துவிட்டு விரைவாக நடந்து போனான். பதிவுத்தபால் வந்திருந்தது. கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்டு பிரிக்கத் தொடங்கினான்.

வன்னியிலிருந்து அப்பா எழுதிய கடிதம் அது. பின் வீட்டுப்பரமசிவம் மலேரியாவால் இறந்ததிலிருந்து, ஷெல் வீச்சுக்களால் தாம் இடம்பெயர்ந்து ஓடியது வரை சகலதும் எழுதியிருந்தார்.

இங்கு வரும்படி சுகுமார் எத்தனையோ தரம் எழுதி விட்டான். இருப்பினும்,மகனை வன்னியில் விட்டுவர அவருக்கு விருப்பமில்லை. சுகுமாரும் இனி வற்புறுத்துவதில்லை என்று நினைத்து விட்டான்.

"வன்னியிலையிருந்து கடிதம் வந்தாக்காணும் உங்களுக்கு வேறை ஒண்டுமே தேவையில்லை. பாருங்கோவன் வெய்யிலுக்கை நிண்டு காயிறதை" திரும்பிப் பார்த்தான் சுகுமார். மைதிலி நிலையோடு சாய்ந்தபடி நின்றிருந்தாள். அவள் முகத்திலே சிரிப்பிருந்தது.

"என்னட்ட இருக்கிற மாத்தேலாத குணம் அது. லெற்றர் வந்தா வாசிச்சுப் போட்டுத்தான் உள்ளுக்க வருவன்" பதிலளித்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான். மைதிலி பின் தொடர்ந்தாள்.

"என்னவாம் மாமா? ..."

"வழக்கம் போலத்தான். வன்னி நிலைமை எழுதியிருக்கிறார். முக்கியமா மருமகளின்ர சுகத்தைப் பற்றித்தான் விசாரிச்சிருக்கிறார்" என்றவாறு கதிரையிலே சாய்ந்து கொண்டான் சுகுமார்.

"மாமாவுக்கு பேரப்பிள்ளையைக்காண ஆசை இருக்கும் தானே!" செல்லமாகச் சிரித்தபடி மைதிலி கூறுவதை கேட்டபடி அவளை ஏறெடுத்து நோக்கினான்.

வயிறு பெருத்திருந்தது. இருந்தபோதிலும் நன்றாக வேலை செய்வதனால் அளவான தோற்றப்பொலிவோடு இருந்தாள். வீணாகக் கஷ்டப்பட வேண்டாம் எனச் சுகுமார் சொன்னாலும் அவள் கேட்பதில்லை. அவனுக்குப் பிடிக்குமேயென்று சிரமப்பட்டு அதை இதைச் செய்து வைத்து விட்டு ஏச்சு வாங்குவதும் உண்டு.

மைதிலி ஐந்து பெண்களுடன் கூடப்பிறந்தவள். கரவெட்டியிலே நன்றாகக் கஷ்டப்பட்ட குடும்பம். அவளுடைய தந்தை சுகுமாருக்குக் கல்வி கற்பித்தவர். அதன் காரணமாக அவளுடைய குடும்பத்துடன் பழகச்சந்தர்ப்பம் ஏற்பட்டது. மைதிலியின் அமைதியான குணமும், அழகும் சுகுமாரைக் கவர்ந்தமையினால் சீதனம் ஒன்றும் வாங்காமல் விரும்பி மணமுடித்திருந்தான். கஷ்டப்பட்ட குடும்பத்திலே பெண்ணெடுத்தால் வாழ்க்கை பெரும்பாலும் இன்பமாக இருக்கும் என்பதை அனுபவத்திலே உணர்ந்திருந்த சுகுமார், அதனை எல்லோருக்கும் சொல்லிப் பெருமைப்படுவதுண்டு. இருப்பினும் ஐந்து வருடங்களாகக் குழந்தைகள் ஏதுமில்லை.

சிறு குழந்தைகள் என்றால் மைதிலிக்குக் கொள்ளைப் பிரியம். எங்கு கண்டாலும் உடனே தூக்கிக் கொஞ்சுவாள்.

இவ்வேளைகளில் சுகுமார் தன்னுடைய மனவேதனையை அடக்க இயலாமல் திணறுவான்.

இவர்களுடைய இந்த ஏக்கத்தைத் தீர்ப்பது போல இப்போதுதான் குழந்தை உருவாகியுள்ளது.

".....என்ன இண்டைக்கு ஒரு மாதிரிப் பார்க்கிறீங்கள்?..." மனைவியின் கேள்வி சுகுமாரை உணர்வுக்குக் கொண்டு வந்தது..

"...ம்... என்ன கேட்டனீர்?..."

"விழுங்கிற மாதிரிப் பார்த்துக்கொண்டிருக்கிறியள். அது தான் ஏனென்டு கேட்டனான்"

"இல்லை மைதிலி! இந்த ஒன்பது மாதமா நீர் எவ்வளவு கஷ்டப்படுகிறீர். கால்பிடிப்பு அது இதெண்டு...! ஆம்பிள்ளைகள் வலு 'கூலாத்' திரிவினம். பொம்பிளைகளுக் குத்தான் சரியான கரைச்சல்"

அவனது குரலிலிருந்த பரிதாப உணர்வு மைதிலியின் உள்ளத்தை இளக வைத்திருக்க வேண்டும்.

"இதிலை என்ன கரைச்சல்? நாங்கள் விருப்ப மில்லாமலே சுமக்கிறம்? "

"எண்டாலும் இவ்வளவு பெரிய வயிறோடை திரியிற தெண்டா!"

"இன்னும் ஒரு கிழமை தானே பிறகு பெடியனைத் தூக்கிக் கொண்டு திரியேக்க நான் இருக்கிறதையே மறந்து போயிடுவீங்கள்"

"பெடியனோ? உம்மை மாதிரி வடிவான பெட்டை தான் பிறப்பாள்..."

"ஊகும்... உங்களை மாதிரிக் குழப்படிக்காரன் தான் பிறப்பான்..."

"... நான் குழப்படிக்காரனோ? குட்டினன் எண்டாப் பிடிச்சு" என்று கூறியபடி விளையாட்டாகக் கையை ஓங்கிக் கொண்டு எழுந்தான் சுகுமார்.

"... நீங்கள் சரியான குழப்படிதானே?" என்றவாறு உள்ளே ஓடினாள் மைதிலி.

"மெல்லமாப் போமப்பா..." என்று அவளது நீண்ட கருங்கூந்தல் அசையும் அழகை இரசித்தபடி கூறினான்.

'டொக்டர் வாற வெள்ளி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரச் சொன்னவர். குணத்திட்டைக்காருக்குச் சொல்ல வேணும். கொஞ்ச நாளைக்கு ஸ்கூல் லீவு போட்டாத்தான் சரிவரும்..." என எண்ணிக் கொண்டான். அவசரமாக எழுந்து உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

"மைதிலி! சிவராசாவிட்ட தொட்டிலுக்கு ஓடர் குடுத்திட்டு அப்படியே குணத்திட்டையும் போட்டு வாறன். கிணத்தடிப்பக்கம் போயிடாதையும்" என்றவாறு சைக்கிளை எடுத்தான்.

"தொட்டிலோ? இன்னும் பிள்ளையே பிறக்கேல்லை. அதுக் கிடையிலை..." மைதிலியின் குரலிலே கேலி இருப்பது தெரிந்தது.

"பின்னைப் பிறந்தாப் பிறகே செய்யிறது? நான் உடனை வாறன். தனிய விட்டுட்டுப்போகவும் பயமாக் கிடக்கு..."

"... சின்னப்பிள்ளை மாதிரிப் பயந்து சாகிறியள். இன்னும் ஒரு கிழமை கிடக்குத்தானே..."

விடைபெற்றுக் கொண்டு வீதிக்கு வந்து சைக்கிளில் ஏறினான் சுகுமார்.

அன்றிரவு.
பத்துமணியிருக்கும்.

இடுப்பில் இலேசாக வலியிருப்பதாக மைதிலி சொன்னபோது பதறிப்போனான் சுகுமார். கார் பிடிக்க கிளம்பியவனைத் தடுத்தாள் மைதிலி.

"வேண்டாம். போகாதையுங்கோ. கேவியூ நேரம். எனக்குப் பயமா இருக்கு. என்னோடை இருங்கோ..."

"இல்லை மைதிலி. குணத்திட்டைச் சொன்னான் தானே. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிட்டாப் பிரச்சினை இல்லை. நான் உடனை வாறன்"

"... ஐயோ! போக வேண்டாம். அவங்கள் சுட்டுப் போடுவாங்கள்." அழத்தொடங்கி விட்டாள்.

"பயப்படாமல் இரும். விளக்குப் பிடிச்சுக்கொண்டு போட்டு வாறன்..." என்றவாறு இலாம்பையும் தூக்கிக்கொண்டு ஓடினான்.

வீதி இருண்டிருந்தது. ஒரு கையில் விளக்கைப் பிடித்தபடி சைக்கிளை மிதிமிதியென்று மிதித்தான்.

"கடவுளே! ஒருத்தனும் குறுக்கை வரக்கூடாது" என்று பிரார்த்தித்துக்கொண்டு குணம் வீட்டை வந்தடைந்தான்.

"குணம்! குணம்!" என்று அவன் போட்ட சத்தத்தில் நாய்கள் குரைக்கத் தொடங்கின. வீடு நிசப்தமாக இருந்தது. சுகுமார் கேற்றைப் படபடவென அடித்தான். சற்று நேரத்தில் வீட்டுக் கதவு திறப்பது தெரிந்தது.

"ஆரது?" குணத்தின் மனைவி.

"...நான் சுகு. குணத்தை ஒருக்கா வரச்சொல்லுறீங் களோ? " குணம் ஆடி அசைந்து வந்தான்.

"சுகு!என்னடாப்பா இந்த நேரத்திலை வந்து குழப்பிறாய்?"

"குணம்! என்ரை மனிசிக்கு இருந்தாப் போலக் குத் தெழும்பி விட்டுது. அதுதான் மந்திகைக்குக் கொண்டு போக வேணும். டக்கெண்டு காரை எடு..."

பதற்றத்துடன் சுகுமார் சொன்னான்.

"காரோ? இப்பவோ? உனக்கு விசரே பிடிச்சிருக்கு? அவன் சுட்டுத்தள்ளிப் போடுவானெல்லே..."

"டேய் குணம்! உன்னைக் கும்பிடுறனெடா. தயவு செய்து காரை விடு. விளக்கோட போனா அவங்கள் ஒண்டும் செய்ய மாட்டாங்கள்" கெஞ்சினான் சுகுமார்.

இதற்குள் குணத்தின் மனைவி வந்து கத்தத் தொடங் கினாள்.

"அவரைக் கொண்டு போய்க் கொல்லவே போறியள். இஞ்சருங்கோ! நீங்கள் உள்ளுக்க வாங்கோ"

"சுகு! குறைநினைக்காதையெடா" என்றவாறு குணம் உள்ளே போய்விட்டான். சுகுமார் இடிந்து போய் நின்றான்.

"கடவுளே இப்ப என்ன செய்யிறது? அங்க மைதிலி என்ன பாடோ தெரியேல்லை. வேறை ஆரிட்டக் கார் நிக்குது?... ஆ! செல்லத்துரை அண்ணையிட்டப் போய்ப் பாப்பம்..." என எண்ணிய வாறே சைக்கிளைத் திருப்பினான். உடலெங்கும் வியர்வை வெள்ளமாக ஊற்றியது.

ஒருவாறு செல்லத்துரையின் வீட்டை வந்தடைந்தான்.

"செல்லத்துரையண்ணை!" குரல் கொடுத்தான்.

"ஓமோம் ஆரது?"
செல்லத்துரையின் குரல் தான். வெளியே வந்தார்.

"அது நான் அண்ணை" என்றவாறு சுகுமார் விடயத்தைச் சொன்னான். "நீர் போம் தம்பி. நான் இப்ப வாறன். போய் ஆயத்தங்களைச் செய்யும்" என்று கூறிக் கொண்டே உள்ளே ஓடினார் செல்லத்துரை.

கடவுளுக்கு ஆயிரம் நன்றிகளைச் சொல்லிக் கொண்டான் சுகுமார். திரும்பி விறுவிறு என்று உழக்கி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வாசற்படி ஏறும்போதே மைதிலி யின் அழுகைக்குரல் கேட்டது. இரண்டெட்டில் அவளை அடைந்தான்.

மைதிலி கட்டிலிலே கிடந்து துடித்துக் கொண்டிருந் தாள்.

"மைதிலி! இப்ப அஞ்சு நிமிசத்திலை கார் வந்திடும். உடனை மந்திகைக்குப் போகலாம்" என்று சொல்லியபடி அவளுடைய வயிறை மிருதுவாகத் தடவிக் கொடுத்தான்.

வெளியே கார்ச் சத்தம் கேட்டது.

மெல்ல அவளைத் தூக்கிக் கொண்டு விரைந்தான். செல்லத்துரையர் கார்க் கதவினைத் திறந்து விட்டார். பின் சீற்றிலே இருக்க வைத்தான். வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டு ஓடிவந்து ஏறி அமர்ந்து கொண்டான்.

கார் சீறிக்கொண்டு கிளம்பியது.

மைதிலியின் அலறல் அதிகமாகத் தொடங்கியது. அவளுடைய தலையைத் தன் தோளிலே சாய்த்துக் கொண்டான் சுகுமார். கார் மந்திகை ஆஸ்பத்திரிக்குப் போகும் பாதையிலே விரைந்தது.

பிரதான சந்தியிலே மறித்தார்கள்.

"யண்ட பா" என்றார்கள்.

காலையில் நடந்த சம்பவத்தின் எதிரொலியாக இருக்க லாம். சுகுமார் வாதாடிப்பார்த்தான். செல்லத்துரையரும் தனக்குத் தெரிந்த சிங்களத்திலே பெரியவருடன் கதைக்கப் போவதாகக் கேட்டுப்பார்த்தார். போக விடவில்லை.

நேரம் ஒரு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. மைதிலி யின் குரல் வரவரக் கூடியது.

"அண்ணை! உவங்களைப் பார்த்துக் கொண்டிருக் கேலாது. வாங்கோ யாழ்ப்பாணத்துக்கு விடுவம். இதுக்குமேல கடவுள் விட்ட வழி" என்றவாறு சுகுமார் காரினுள்ளே ஏறி அமர்ந்தான்.

கார் திரும்பிக்கொண்டு புறப்பட்டது. வழியிலே சின்னச் சின்னத்தடைகளைச் சமாளித்துக்கொண்டே கப்பூது வெளியை அடைந்தார்கள்.

திடீரெனப் பெரிதாக வீறிட்டாள் மைதிலி.

'ஐயோ அண்ணை! பிள்ளை பிறந்திட்டுது போலக் கிடக்கு. கெதியாய்ப் போங்கோ" சுகுமார் குளறினான்.

செல்லத்துரையர் 'அச்சிலேற்றரை' ஏறி மிதித்தார். அந்தப் பிரதான முகாமிலே தடுத்தார்கள். சுகுமார் பதற்றத்து டன் விடயத்தைச்சொன்னான். காவலுக்கிருந்தவர்களில் ஒரு வன் உள்ளே ஓடினான்.

மைதிலி புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். சுகுமாரின் காலடியிலே இரத்தம் பிசுபிசுத்தது. குனிந்து பார்த்தான். துடிப்பேயில்லாமல் ஒரு அழகான ஆண் குழந்தை.

"மைதிலி உம்மட விருப்பப்படி ஆம்பிளைப்பிள்ளை ஆனா உயிரில்லாமல்... போகட்டும், உம்மை நான் எப்படியாவது காப்பாற்றுவன்..." சுகுமாரின் உள்ளம் ஓலமிட்டது. காத்திருக்கும் ஒவ்வொரு கணமும் நரக வேதனையாக இருந்தது.

சற்று நேரத்திலே பொறுப்பானவர் ஒருவர் விரைந்து வந்தார். உள்ளே எட்டிப் பார்த்தார்.

"ஓ..! மகே அம்மே! யண்ட! யண்ட! நா சொல்லி விடுறன். ஒங்களைத் தடுக்க மாட்டாங்க..."

சுகுமாரின் மனம் இலேசாகியது. நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டான். வழியில் ஒரு முகாமிலேகூட அவர்களைத் தடுக்க வில்லை. தகவல் அனுப்பப்பட்டிருக்கும்.

கார் கைதடிச் சந்தியைத் தாண்டியது.

நேரம் அதிகாலை மூன்று மணி.

நாவற்குழி நெருங்கிக்கொண்டிருந்தது.

'கடவுளே! யாழ்ப்பாணம் வந்திட்டுது. இனிப்பயமில்லை' என எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டான் சுகுமார்.

மைதிலி திடீரெனத் துவண்டு சரியத்தொடங்கினாள். திடுக்கிட்டுப் போய் அவளுடைய தலையை நிமிர்த்தினான் சுகுமார்.

மைதிலியின் கண்கள் மெல்ல மூடிக் கொண்டன.

"மைதிலீ.....!"

சுகுமாரின் நீண்ட அலறல் ஒலி காரின் சத்தத்தையும் மீறிக்கேட்டது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற அந்தப் பரந்த வெளியிலே வீசிக்கொண்டிருக்கும் உப்புக் காற்றுக்கூட ஒருகணம் நிதானித்து மீண்டும் பயணித்தது.

❍ **சஞ்சீவி 24.01.98.**

# 5

# போலி

அந்தச் சாமியாரின் ஆச்சிரமத்தைத் தேடிப்பிடிப்பதற்குள் சிவபாதத்துக்குப் போதும் என்றாகிவிட்டது. அத்தனை 'சென்றி'களையும் இறங்கி ஏறிக்கடந்தது காணாதென்று, மோட்டார் சைக்கிள் வேறு தொந்தரவு கொடுத்தது. தனிப் பெற்றோலில் ஓடுவதென்றால் இப்போதைய விலைக்குக் கட்டாது. மண்ணெய் கலந்து ஓடுவதென்றால் சிக்கனமாகச் செலவழித்த பழக்கம் விடுவதில்லை. எனவே தனி மண்ணெயி லேயே ஓடித்திரிகிறார்.

சிவபாதம் உரும்பிராய் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர். சங்க அலுவலாகச் சாமியாரைச் சந்திக்க வேண்டும் என்று பக்கத்து வீட்டுக் கதிரமலையையும் இழுத்துக் கொண்டு புறப்பட்டவர், ஒருவாறு சாமியாரின் ஆச்சிரமத்தை கண்டுபிடித்து விட்டார். வாசலில் நின்று உற்றுப் பார்த்தார். உள்ளே ஆள்கள் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. அத்துடன் புனிதமான இடமாக அவருக்குத் தோன்றவில்லை. ஒரே பற்றைக்காடாகக் காட்சியளித்தது.

திரும்பிக் கதிரமலையைப் பார்த்தார்.

"கதிரமலை ஆக்கள் இல்லையோ? கதவும் பூட்டிக் கிடக்கு!"

"சிலவேளை பின்னுக்கு நிப்பினம். எதுக்கும் ஹோனை ஒருக்கா அமத்திப் பாருங்கோவன்."

கதிரமலை மதிலுக்கு மேலால் எட்டிப்பார்த்து விட்டுச் சொன்னான். சிவபாதம் "ஹோணை" ஒலிக்கச் செய்தார். சற்று நேரத்தின் பின் ஆச்சிரமத்தின் கதவு திறக்கப்பட்டது. பெண்மணி ஒருவர் வெளியே வந்தார். சுமார் நாற்பது வயதி ருக்கும். நெற்றியிலே குங்குமப்பொட்டு இருந்தது. விலையுயர்ந்த சேலை அணிந்திருந்தார். கழுத்து நிறைய நகைகள் மினுங்கின.

"ஆரைத் தேடுறியள்?" கிட்ட நெருங்கி வந்ததும் கேட்டார்.

"சாமியாரிட்டை வந்தனாங்கள்" சிவபாதம் குரலில் மிகுந்த பணிவை வரவழைத்துக் கொண்டு சொன்னார்.

"அவர் இல்லையே"

"அவர்" என்றதும் சிவபாதம் திகைத்துப் போய்க் கதிரமலையைத் திரும்பிப் பார்த்தார். கதிரமலையின் முகத்திலே சிரிப்பு அப்பட்டமாகத் தெரிந்தது.

"நாங்கள் சாமியாரைச் சந்திக்கவேணும் அம்மா. ஒரு முக்கிய அலுவல். உரும்பிராயிலை இருந்து வாறம்"

"இப்ப வாற நேரம்தான். உள்ளுக்கவந்து இருங்கோ. வந்திடுவார்" என்று கூறிக்கொண்டு அந்தப் பெண்மணி கேற்றை நன்றாகத் திறந்து விட்டார்.

சிவபாதம் மோட்டார் சைக்கிளை உள்ளே உருட்டினார். கதிரமலை பின்தொடர்ந்தான்.

ஆச்சிரமத்தின் படிகளிலே ஏறி உள்ளே நுழைந்தார்கள். கோயில் போன்ற புனிதமான இடங்களிலே காணப்படும் தனித்துவமான நறுமணம் அங்கு வீசவில்லை. அந்த நீண்ட மண்டபம் நிறைய சுவாமிப்படங்கள் காட்சியளித்தன. எல்லாப் படங்களிலும் தூசி படிந்திருந்தது.

அந்தப் பெண்மணி இரண்டு பாய்களைக்கொண்டு வந்து விரித்து விட்டுப்போனார். இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

கதிரமலை சிவபாதத்தை மெல்லச் சுரண்டினான்.

"உது சாமியாரின்ர மனிசியோ..."

சிவபாதம் கதிரமலையின் தலையிலே ஓங்கித் தட்டினார்.

"எட விசரா! மெல்லக் கதையடா. அவர் முற்றும் துறந்த பெரிய மகானடா. உந்த எளிய வேலை செய்யார்."

"இல்லையண்ணை. இந்த ஆச்சிரமத்திலை வேறை ஆக்கள் இருக்கிறதாத் தெரியேல்லை அதோட இந்த மனிசி 'அவர் இவர்' எண்டு கதைக்குது."

"உனக்கு எல்லாத்திலையும் சந்தேகம்தான். ஒரு வேளை நந்தவனத்தைப் பராமரிக்கிற ஆளாயிருக்கும்" சிவபாதம் சமாதானம் சொன்னார்.

"நந்தவனமோ? ஒரே பத்தைக்காடாக்கிடக்கு. அண்ணை! நான் இயமனுக்கு இடியப்பம் தீத்தினனான். என்னைப் பேக்காட்டேலாது"

திடீரென கேற்றடியில் ஆரவாரம் கேட்க எட்டிப் பார்த்தார்கள். சாமியார் உதவியாளுடன் வந்து கொண் டிருந்தார்.

"டேய்! டேய்! எழும்படா சாமியார் வாறார்."

சிவபாதம் துடித்துப்பதைத்துக் கொண்டு எழுந்தார். கதிரமலை சாவதானமாக எழுந்து நின்றான்.

சாமியார் வாயிற்படியிலேறியதும் சிவபாதம் அட்டாக மாக விழுந்து வணங்கினார். கதிரமலை பேசாமல் நின்றான்.

"மங்களம் உண்டாகட்டும்."

சாமியார் கையைத் தூக்கி ஆசீர்வதித்து விட்டுக் கதிரமலையை ஒரு பார்வைபார்த்தார். சிவபாதம் கைகளைக் குறுக்கே கட்டிக் கொண்டு குறுகி நின்றார்.

"ரமணி!"

உள்ளே திரும்பிக் கூப்பிட்டார் சாமியார்.

"ஓமோம். வாறன்" உள்ளிருந்து பதில் வந்தது.

கதிரமலை சிவபாதத்தை ஏளனமாகப் பார்த்துப் புன்ன கைத்தான். ரமணி எனப்படுகின்ற அந்தப் பெண்மணி வெளியே வந்தார்.

"நல்லாக் களைச்சுப்போனன். நாலுபேருக்குத் தண்ணி கொண்டா." சாமியார் சொல்லிவிட்டுச் சிவபாதத்தைத் திரும்பிப் பார்த்து, "அமருங்கள்" என்றார்.

சாமியார் அமர்ந்த பின் இவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள்

சாமியார் கொஞ்ச நேரம் இருவரையும் பார்வை யால் அளந்தார். பிறகு கேட்டார். "என்ன அலுவலாக வந்தீர்கள்?"

"அது ஐயா. நாங்கள் உரும்பிராய் கிராம முன்னேற் றச் சங்கத்திலை இருந்து வாறம்" சிவபாதம் பணிவுடன் பதிலளித்தார்.

"உரும்பிராய் கிராம முன்னேற்றச்சங்கம். ஓமோம் கேள்விப்பட்டிருக்கிறேன். நல்ல நல்ல பணிகள் செய்கிறீர கள்..."

"ஓம் ஐயா. எல்லாம் உங்கட அருள்தான். ஒரு பாலர் பாடசாலை நடத்துறம். ஐம்பது பிள்ளையள் படிக்குதுகள். கலை வகுப்புக்களும் நடத்துறம்"

"எனக்கு எல்லாம் தெரியும் அப்பனே! நீ வந்த விடயமும் அறிவோம். இருப்பினும் விவரமாகக் கூறு!"

சாமியார் கண்களை மூடிக் கொண்டு சொன்னார்.

"பாத்தியே?" என்பதுபோல் சிவபாதம் கதிரமலையை ஏளனமாகப் பார்த்தார். கதிரமலை அப்போதும் தனது சிரிப்பை விடவில்லை.

"ஐயா எங்கட சங்கத்தின்ர மூண்டாம் ஆண்டு விழா வாறமாதம் வருகுது. அதிலை இந்தப் பிள்ளையள் எல்லாத் துக்கும் குடுக்கிறதுக்கு ஏதாவது புத்தகங்கள் தந்து உதவினியளெண்டா...."

சிவபாதம் இழுத்தார்.

"புத்தகம்.. இப்பதரக் கூடியதாக ஒன்றுமில்லையே. ம்... ஒரு நூறு புத்தகமெண்டாலும் வேணும் என்ன? "சாமியார் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு யோசித்தார்.

அப்போது ரமணி வந்து எல்லோருக்கும் தேநீர் கொடுத்து விட்டுத் திரும்பிப் போனார்.

"ஐயா! இந்த அம்மா ஆரையா? " கதிரமலை இவ்வாறு கேட்டவிதம் பிடிக்கவில்லையோ என்னவோ சாமியார் ஒருமாதிரிப் பார்த்தார். பிறகு சமாளித்துக்கொண்டு சொன்னார்.

"இது என்னுடைய சீடப்பெண். என்னில் மிகுந்த பக்தி உடையவள்"

"பெரிய பக்தி இருக்கிறமாதிரித் தெரியவில்லையே! உங்களோடை கதைக்கிற முறை ஒரு மாதிரிக்கிடக்கு?"

சாமியார் தேநீர் கோப்பையைப் பட்டென்று வைத்தார். அதில் அவருடைய கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது.

சிவபாதம் அவசரமாகக் குறுக்கிட்டார்.

"ஐயா இவனின்ர கதையளை ஒரு பொருட்டா எடுக்காதையுங்கோ. இவன் சரியான பனித்தண்ணி.. உப்பிடித் தான் விசர்க்கேள்விகள் கேட்பான்."

"அப்பனே இவ்வளவு புனிதமான இடத்துக்கு இவனைப் போன்றவர்களை அழைத்து வரக்கூடாது."

"ஓம் ஐயா. பிழைதான். மன்னிச்சுக் கொள்ளுங்கோ."

"சரி, அந்தக்கதையைவிடு. உன்ர சங்க ஆண்டு விழாவை எப்படி.. பெரிசாச் செய்வியோ?" சாமியார் கண்களை மூடிக் கொண்டு கேட்டார்.

"நல்ல பெரிசாச் செய்வம் ஐயா. பேப்பரிலை போட்டு.. நோட்டீஸ் அடிச்சு.."

"ஆ! அதுதான் நல்லது. பெரிய பெரிய ஆக்களுக் கெல்லாம் சொல்லுவியோ?"

"கட்டாயம் சொல்லுவம் ஐயா. நீங்கள் புத்தகம் தருவீங்கள் தானே?"

சிவபாதம் மிகுந்த ஆவலுடன் கேட்டார்.

"பின்னைத் தராமல்...? இப்படியான பொதுப்பணிகளுக்கு உதவத்தானே நாங்கள் இருக்கிறம். வாற புதன்கிழமை

காலமை வந்து புத்தகங்களை வாங்கிக் கொண்டு போ. நான் இல்லாட்டியும் ரமணி தருவாள்."

"அப்ப ஐயா நாங்கள் வரப்போறம். ஆண்டு விழாவுக்குக் கட்டாயம் வரவேணும்." சிவபாதம் வணங்கியபடி எழுந்து நின்றார்.

"நான் வராமல் விடமாட்டேன். நீ தாராளமாகப் போட்டு வா. நான் கொஞ்சநேரம் தியானம் செய்யவேணும்" என்றவாறு சாமியார் கண்களை மூடிக்கொண்டார். சிவபாதம் கதிரமலையுடன் வெளியேறினார். கேற்றடிக்கு வந்து மோட்டார் சையிக்கிளை உயிர்ப்பித்துக் கொண்டார்.

"பாத்தியே கதிரமலை. சாமியாரைப்பற்றி என்னவோ கதைச்சாய். இப்பபார், அந்தாள் எவ்வளவு உதவி செய்யுதெண்டு. உனக்குக் கதைக்கப்பேசத் தெரியாது" சிவபாதம் போகும் போது சொன்னார்.

"அண்ணை! நான் என்னத்தைச்சொல்லுறது? என்னைப் பனித்தண்ணி எண்டியள். எனக்கு உந்தாளின்ரை பாம்புப் பார்வை பிடிக்கேல்லை அண்ணை. எங்கட முருகன் கோவில் சாமியாரின்ரை செந்தளிப்பான முகத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம். உந்தாளை மாதிரிக் கள்ளச்சாமிமாராலை எங்கட சமயத்துக்கு மதிப்பே இல்லை. அந்த ரமணியோ என்னவோ அதை பாத்தாச் சீடப் பெண்மாதிரியே கிடக்கு? சே!"

"உனக்கு உலக அனுபவம் போதாது கதிரமலை" சிவபாதம் வேகத்தைக் கூட்டிக் கொண்டே சொன்னார்.

"எனக்கோ உலக அனுபவம் போதாது? நான் பழமும் தின்டு கொட்டையும் போட்டனான் அண்ணை. சரி இப்ப என்னத்துக்குத் தேவையில்லாத கதையை? ஒரு காலத்திலை உணருவியள்" அத்துடன் அவர்களின் பேச்சு திசைமாறியது.

★ ★ ★

ஆண்டுவிழா முடிந்து ஒரு கிழமையாகிவிட்டது. சிவபாதம் வீட்டிலே ஓய்வாகப் படுத்திருந்தார். ஆண்டுவிழா அலுவல்களில் ஓடித்திரிந்து நன்றாகக் களைத்துப்போயிருந்தார்.

இருந்தாற்போல கேற்றடியிலே மோட்டார் சைக்கிள் ‘ஹோண்’ ஒலித்தது.

“கமலா! ஆரோ வந்திருக்கினம்போல கிடக்கு. ஆரெண்டு பாரும்” எழுந்து போய்ப் பார்க்க அலுப்பில் படுத்தி ருந்தபடி குரல் கொடுத்தார். அவரது மனைவி கேற்றடிக் குப்போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தாள்.

“ஆரது” சிவபாதம் கேட்டார்.

“ஆரெண்டு தெரியேல்லை. சாமியாரின்ர உடுப்பு நடப் பாகக் கிடக்கு. அந்தாளின்ர பார்வையும் சரியில்லை”

“சாமியாரோ?” சிவபாதம் துள்ளியெழுந்தார்.

“இஞ்சேரும் டக்கெண்டு ஒழுங்குபடுத்தும். அவர் பெரிய மகான். நான் கூட்டிக்கொண்டு வாறன்”

கூறிவிட்டு கேற்றடிக்கு ஓடினார். கேற்றடியில் சாமியா ரும், உதவியாளரும் நிற்பது தெரிந்தது.

“வணக்கம் ஐயா. உள்ளுக்க வாங்கோ. இருந்தாப் போல வந்திட்டியள்.” சிவபாதம் பூரிப்புடன் உள்ளே அழைத்தார்.

“நான் உன்னோட கதைச்சுப் பொழுதுபோக்க வரவில்லை”

“ஐயா..!”

“என்ன காணும்? நான் அண்டைக்கு உந்த வெய்யி லுக்குள்ளாலை கஷ்டப்பட்டு உன்ரை சங்க ஆண்டு விழா வுக்கு வந்தன். விழா நோட்டீசிலை என்ரை பேரை ஒரு மூலேக்கை கொண்டுபோய்ச் சின்னதாப் போட்டாய்..”

“அது ஐயா அச்சகக்காரர்தான் இடமில்லையெண்டு...”

“சரி அதைவிடு. இஞ்சைபார். இண்டைப் பேப்பரிலை என்ன வந்திருக்கெண்டு பாத்தனியே? அவன் வந்தான். இவன் பேசினான் எண்டெல்லாம் குடுத்திருக்குது. நான் வந்து பேசினன் எண்டு ஒரு சொல்லு எழுதினியே? ஆ!” சாமியார் துள்ளிக் குதித்தார்.

“நான் பேப்பருக்குக் குடுக்கேல்லை ஐயா, ரிப்போட்டர் தான் வந்து குறிப்பெடுத்தவர். அவர் குடுத்திருக்கலாம்.”

“கண்டறியாத மசிர்! நீர் தலைவர் எண்டு இருக்கிற னீர். உதுகளைக் கவனிக்கவேணும். உமக்கு ஆளுமை இல்லைக் காணும்”

“கோவியாதையுங்கோ ஐயா. எழுதிக்குடுக்கிற எல்லாத் தையும் போடச் சொல்லலாமே? தகுந்ததைத் தானே அவை போடுவினம்! எங்களுக்கும் அந்தச் செய்திக்கும் எந்தச் சம்பந் தமும் இல்லை ஐயா”

மிகுந்த பணிவுடன் கூறினார் தலைவர் சிவபாதம்.

“இஞ்சை பாரும். எனக்கு உம்மோடை நிண்டு அத்தாட்பிச்சுக் கொண்டிருக்க நேரமில்லை. எனக்கு எவ்வ ளவோ பணிகள் கிடக்கு. நான் தந்த நூறுபுத்தகங்களுக்கும் ஐம்பது ரூபாப்படி கணக்குப் போட்டு, காசைக் கெதியிலை ஆச்சிரமத்துக்கு அனுப்பி விடும்.”

சாமியார் கூறிவிட்டுத் திரும்பி நடந்தார்.

சிவபாதம் வாயடைத்துப் போய் நின்றார். அவரது மனம் கதிரமலை சொன்னவற்றை மீட்டுக் கொண்டிருந்தது.

“எங்களுடைய சமயத்தின் பெயரைக் கெடுக்கவென, சிலபேர் சாமி வேடம் போட்டு உண்மையான சமய நெறியா ளர்களுக்கும் மாசு உண்டாக்கி வருகினம். நெல்லுக்குள்ளே வந்து சேரும் பதர் போன்றவர்களை இனங்கண்டு அவர்களை அதற்கேற்றால் போல நடத்த வேண்டும். மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது சாமியார் விஷயத்திலும் பொருந்தும் என்பதனை என்னைப்போன்றோர் மறந்து போவதும் போலிகள் உருவாகக் காரணம் தான்” என்று மனதால் எண்ணிப் பெருமூச்சு விட்டார் சிவபாதம்.

○ சஞ்சீவி 16.05.98

# 6

# விமோசனம்

மூன் விறாந்தையிலே சரிந்து படுத்திருந்த சங்கரப்பிள்ளை "லொக்கு லொக்" கென்று இருமினார். இந்த இருமல்... கடந்த ஐந்து வருடங்களாக அவர் திரும்பத் திரும்பப் பாடமாக்கிய ஒன்று. பனிக்காலத்தில் இளம் வயதினரையே ஆட்டிப்படைக்கும் இருமல், தள்ளாத வயதுக்காரரரைச் சும்மா விட்டு வைக்குமா?

சங்கரப்பிள்ளைக்கு இப்போது எழுபத்தைந்து வயதாகி றது. குரும்பசிட்டியிலே தரகர் சங்கரப்பிள்ளை என்றால் தெரி யாதவர்கள் இல்லை. அந்தளவுக்குப் பிரபல்யம். வெள்ளை உடையணிந்து சந்தனமும் பூசிக்கொண்டு வெளியே புறப்பட்டா ரென்றால் ஒரு திருமணத்தை ஒப்பேற்றி விட்டுத்தான் திரும்பி வருவார். நிரம்பின வாய்ச்சாதுரியம்படைத்தவர். தரகர் வேலைக்கு அது கட்டாயம் தேவை. இத்தனை இலட்சத்துக்கு இத்தனை ஆயிரம் என்று தரகுப் பணத்தைச் சுளையாகக் கறந்துவிடுவார். இந்த விடயத்தில் அவர் நியாய அநியாயங் களைப் பற்றி யோசிப்பதேயில்லை.

மூன்று பெண்களுக்கும் மூன்று பெரிய வீடுகளைக் கட்டி வைத்திருந்தவர். பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் குரும்பசிட்டிப்பகுதி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது எல்லோரும் இடம்பெயர்ந்து ஓட, இவரும் மனைவி, பிள்ளை களை உடுத்த உடையுடன் கூட்டிக்கொண்டு கொக்குவிலுக்கு வந்தார். அளவான வாடகையுடன் ஒரு வீடு கிடைத்தது. மூன்று மாளிகைகளில் மாறிமாறி வாழ்ந்த சங்கரப்பிள்ளை குடும்பத்துக்கு அது ஒத்துவரவில்லை என்றாலும், வெறுங்கை யுடன் ஓடி வந்தமையினால் சமாளித்துக்கொள்ள ஓரளவு பழகிக்கொண்டார்கள். முதலில்லாத தொழிலான தரகு வேலை சங்கரப்பிள்ளைக்குக் கைகொடுத்தது. பெரிய வருமானம் என்று இல்லாவிட்டாலும் அன்றாடம் போதுமாயிருந்தது. இடையில் அவரது மனைவி காலமான போதிலும் மூன்று பெண்பிள்ளை

களின் துணையிருப்பதால் பெரிய இழப்பாக அவருக்குத் தோன்றவில்லை.

பேச்சுவார்த்தை ஏற்பட்ட காலத்திலே குரும்பசிட்டிக் குப் போய்ப்பார்த்தார். மூன்று வீடுகளும் இருந்த இடம் தெரிய வில்லை. இடிந்து போய்த்திரும்பியவர், மூன்றாம்நாள் கைகால் இழுத்துக் கொண்டு படுத்த படுக்கையாகிவிட்டார். செய்த அநியாயங்களுக்கு இப்போது அனுபவிப்பதாக அடிக்கடி கூறிக் கொள்வார்.

இது இறுதிக்காலத்தில் எல்லோருக்கும் வரும் சுடலை ஞானம் தானே!

மூன்று பெண்களும் திருமணம் செய்யாத நிலையில் கனவுகளில் மட்டும் வாழ்ந்து வருகிறார்கள். முன்பு வசதியுட னிருந்த போது முன்னும் பின்னும் கலைத்துத்திரிந்த பையன் கள் இப்போது எட்டியும் பார்க்கிறார்களில்லை எனச் சங்கரப் பிள்ளை வருத்தப்படுவார். அப்படித் துரத்தியவர்களை அவர் ஆள் வைத்து அடித்தது எல்லாம் பழங்கதை.

இப்போது . மூத்தவள் சுகுணாவுக்கு முப்பத்தைந்து வயதாகிறது. அடுத்தவள் சரோவுக்கு வயது முப்பத்திரண்டு. கடைக்குட்டி சுமதிக்கு முப்பதுவயது. மூவரும் ஓ.எல் பரீட்சை யிலே குண்டடித்தவர்கள். சுகுணாவாவது தையல் வகுப்பு என்று போய் வந்தவள். மற்ற இருவருக்கும் அது கூடத்தெரி யாது. தாய் இறந்த பின்னர்தான் சமைக்கவே கற்றுக்கொண் டார்கள்.

"அப்பா இதைக்குடியுங்கோ"

யோசித்துக்கொண்டே படுத்திருந்த சங்கரப்பிள்ளையை சுகுணாவின் குரல் தட்டியெழுப்பியது. ஒரு கையை ஊன்றிக் கொண்டு எழுந்து அமர்ந்தார். சுகுணா எலுமிச்சை இரசத்தை நீட்டினாள். வாங்கி ஒரு மிடறு குடித்த சங்கரப்பிள்ளையர் வாயைச் சுழித்தார்.

"என்னடி பிள்ளை! சீனி போடேல்லையே?"

"சீனியோ? சலரோகம் அது இதெண்டு சகல வருத் தமும் வாங்கி வைச்சிருக்கிறீங்கள். நான் என்னெண்டு சீனி போட்டுத் தாறது?"

"உந்தப்புளிப்பைக் குடிக்கிறநேரம் சாகலாம்."

சங்கரப்பிள்ளையர் சிரித்துக் கொண்டே மிகுதியைக் குடித்து விட்டுக் கோப்பையைக் கொடுத்தார்.

"சுமதி எங்கை போட்டாள்?" வினவினார்.

"இண்டைக்கு நிவாரணம் குடுக்கிறாங்கள். அதுதான் வெள்ளெணவே போனவள்... பதினொண்டாகுது. இன்னும் காணேல்லை"

சுகுணா திரும்பிக் கேற்றடியைப் பார்த்தாள்.

"நோகாமல் கொள்ளாமல் எப்பிடியெல்லாம் இருந்தியள். அறுவார் வீடு வாசலெல்லாம் தரைமட்டமாக்கி... உங்களுக்கு எப்ப விடிவு வரப்போகுதோ? " அதற்கு மேலே எதுவும் பேச இயலாமல் சங்கரப்பிள்ளைக்கு தொண்டை அடைத்தது.

"அதுக்கென்னப்பா செய்யிறது? விதி எண்டு விடவேண்டியதுதான்" பெருமூச்சுவிட்டாள் சுகுணா.

"பார்த்தியே! நான் மறந்து போய் என்னவோ எல்லாம் கதைக்கிறன். உவன் ஆறுமுகம் உனக்கொரு பெடியனைப் பேசிக்கொண்டு வந்தவன். வாத்தியா இருக்கிறான். பொம்பிளை மட்டும் தந்தாப் போதும் எண்டவனாம். உன்ரை குணத்துக்கு நீ நல்லா இருப்பாயடி பிள்ளை."

"எனக்கென்னத்துக்கு அப்பா கலியாணத்தை? சரோவுக்கு அதைச் செய்யுங்கோவன். அவள் பாவம். ஒரு தொழிலும் தெரியாது. நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ளுவன்."

பொங்கி வரும் கண்ணீரை மறைக்க மறுபுறம் திரும்பிக் கொண்டாள் சுகுணா.

"சும்மா இரு பிள்ளை. உனக்கு அவனைச் செய்து விட்டா நீங்கள் ரெண்டு பேருமே மிச்ச அலுவல்களை ஒப்பேத்திப் போடுவியள். நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவன்".

"அவர் அவ்வளவு நல்லவரே அப்பா? அப்படி யெண்டாச் செய்யுங்கோ. எனக்குப் பூரண சம்மதம்." என்றவள், கேற்றடியில் ஏதோ ஆரவாரம் கேட்கப்போய் எட்டிப்பார்த்தாள். ஒரு துள்ளலுடன் திரும்பி வந்தாள்.

"அப்பா ஆறுமுகம் மாமா வாறார்" முகமெங்கும் மகிழ்ச்சித் தீற்றல்களுடன் கூறிவிட்டு உள்ளே ஓடினாள். அவள் ஓடுவதை மனநிறைவுடன் பார்த்துவிட்டு வாசலுக்குத் திரும்பினார் சங்கரப்பிள்ளை.

இலேசான தள்ளாட்டத்துடன் உள்ளே வந்தார் ஆறுமுகம். இவர் சங்கரப்பிள்ளையின் சீடன். தரகு வேலை யில் குருவை மிஞ்சிய குள்ளநரி.

"ஆறுமுகம் வா" வரவேற்றார் சங்கரப்பிள்ளை. ஆறுமுகம் கிட்டத்தட்ட நிறைவெறியில் இருந்தார். கதிரையில் அமர்வதற்குப் பெரிதும் சிரமப்பட்டு ஒருவாறு உட்கார்ந்து கொண்டார்.

"அண்ணை நல்லாத் தளர்ந்து போனியள். என்ன மாதிரித் திரிஞ்ச மனிசன்! காஞ்ச பயித்தங்காய் மாதிரி... சே!"

"அதுக்கென்னடாப்பா செய்யிறது? நான் செய்த அநியாயம் கொஞ்சநஞ்சமே! கிடந்து அனுபவிக்கிறன்." அலுத்துக் கொண்டார் சங்கரப்பிள்ளை.

"தரகுவேலை அநியாயமே அண்ணை? நாங்கள் எத்தினை பெண்புரசுகளைக் கரைசேக்கிறம். நீங்கள் என்ன மாதிரியோ தெரியாது. நான் தொண்டு செய்யிறன் அண்ணை ... தொண்டு"

"தொண்டோ...?" சங்கரப்பிள்ளையர் நக்கலாக இழுத்தார்.

"பின்னை? பாருங்கோவன். அவன் செல்லையாவின்ர பெட்டை நாப்பது வயதாகியும் கரைசேராமல் இருந்தாள். நான் எங்கையெல்லாம் திரிஞ்சு ஒரு திறம் மாப்பிள்ளையைப் பாத்து முடிச்சு வைச்சன்."

"ஆறுமுகம், நீ ரெண்டு பக்கமும் சுளையா ஐயாயிரம் வாங்கினாய் எண்டெல்லே கேள்வி."

"நான் வாங்கேல்லை அண்ணை. அவைதான் விரும்பித்தந்தவை. என்னைச் சொல்லுறியள். நீங்கள் கமலசேகரத்தின்ர பெட்டையின்ர காரியத்தைத் தாலி கட்டுறநேரம் குழப்பேல்லையே? தரகுக்காசு தரேல்லை எண்டு இல்லாதது பொல்லாதது சொல்லி..."

"ஆறுமுகம் அந்தக் கதையை விடு. கிடந்து உலையிறன் காணாதே?... வெய்யிலுக்குள்ளாலை வந்திருக்கிறாய். குளிர ஏதாவது குடி. சுகுணா! எப்பன் தண்ணி கொண்டா" சங்கரப்பிள்ளை கதையைத் திசைமாற்றினார்.

"வேண்டாமண்ணை! என்னைப் பாக்கத்தெரியேல்லையே. நல்லா அடிச்சுப் போட்டுத்தான் வந்திருக்கிறன். வைரமுத்தன்ர பெண்டில் 'கிபிர்' விக்கிறாள். சோக்கான வடி. ஒரு கொஞ்சம் அடிச்சா சொர்க்கம் தான்? உங்களுக்கும் வாங்கித்தரட்டோவே? உசாரா இருப்பியள்"

வாயைச் சுழித்தபடி ஆறுமுகம் சொன்னார்.

"நான் உதெல்லாம் விட்டிட்டன். ஆறுமுகம்! இப்ப விஷயத்துக்கு வா... சுகுணாவின்ர பேச்சுக்கால் என்ன மாதிரி? பாவம் பெடிச்சி " சங்கரப்பிள்ளை பேசிக்கொண்டிருக்கும்போது சுகுணா வந்தாள்.

"வேண்டாமடி பிள்ளை. நான் இப்பதான்... சரி கொண்டா குடிப்பம்" ஆறுமுகம் கோப்பையை வாங்கிக் கொண்டார். திரும்பிப் போகும் சுகுணாவையே பார்த்துவிட்டுச் சொன்னார்.

"அண்ணை! சும்மா சொல்லக்கூடாது, குரும்பசிட்டியிலும் சரி. இஞ்சையும் சரி. உங்கட மூண்டு பெட்டையளின்ர வடிவுக்கு ஒருத்தியும் முன்னுக்கு நிக்காளவை."

"வடிவு இருந்து என்ன செய்யிறது ஆறுமுகம்? காசெல்லே வேணும். நானும் பேய்த்தனமா ஊருக்க அறா

வட்டிக்குக் குடுத்து எல்லாத்தையும் துலைச்சுப் போட்டன்... சரி. பழைய கதை என்னத்துக்கு? இப்ப சுகுணாவின்ர அலுவலைச் சொல்லு "

"அது அண்ணை... சரிவராது போல கிடக்கு" இழுத்தார் ஆறுமுகம்.

"ஏன்? " சங்கரப்பிள்ளை திகைத்துப் போய்க்கேட்டார்.

"அவங்கள் நாய்ச்சாதியள் அண்ணை. சரியான காசாசை பிடிச்சதுகள்."

"ஆறுமுகம்! நீதானே சொன்னாய் நல்ல குடும்பம் எண்டு"

"அப்பிடித்தான் நினைச்சன் அண்ணை. பேந்து குழப்பிப் போட்டாங்கள். சரி... என்ன செய்யிறதெண்டு அந்தப் பெடிக்கு நான் டுபாய் மணியத்தின்ர பெட்டையை முற்றாக்கிப் போட்டன்"

"ஆறுமுகம் நான் தரகு வேலையிலை கரை கண்டனான். நீ என்னட்டையே விளையாட்டுக் காட்டிப்போட்டாய் என்ன? இந்தப் பேச்சை நீ தான் குழப்பியிருக்கிறாய்." சங்கரப்பிள்ளையின் குரல் உயர்ந்தது.

"இல்லையண்ணை நானேன் குழப்பிறன்? எனக்கேன் அந்தப் பழியை? "

"தேவையில்லாத கதைகளை விட்டுப்போட்டு ஏன் குழப்பினாய் எண்டு சொல்லு." ஆறுமுகம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"அண்ணை! இந்தத்தரகு வேலையின்ர நுட்பங்களெல்லாம் உங்களோடை திரிஞ்சு பழகினது. நீங்கள் செய்யாத ஒண்டையும் நான் செய்யேல்லையே! இந்தச் சம்பந்தத்தை முற்றாக்கினா மாப்பிள்ளை பகுதியாலை ஒரு ரெண்டாயிரம் வந்தாலும் உங்கட பக்கம் ஒரு சதம் பெயராது. டுபாய் மணியம் பத்தாயிரம் தாறான். ஆரன் விடுவினமோ? சொல்லுங்கோ பாப்பம்"

சங்கரப்பிள்ளை மலைத்துப்போய் அமர்ந்திருந்தார்.

“அண்ணை! ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. நான் இன்னொரு சம்பந்தம் கொண்டு வந்தனான். மாப்பிள்ளை கச்சேரியிலை கிளார்க். வாற வரியம் பெஞ்சன் எடுக்கிறான். வலு குணமான பெடியன் ... ஒரு சதம் கேக்கான்”

“டேய் ஆறுமுகம்! வெளிக்கிடடா வளவாலை. இந்தப் பக்கம் கால் வைச்சியெண்டா நடக்கிறது வேறை”

சங்கரப்பிள்ளைக்குக் கோபத்தால் உடம்பெல்லாம் பதறியது. சுகுணா ஓடிவந்தாள்.

“அப்பா சும்மா இருங்கோ. எனக்குக் கலியாணமும் வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம். நீங்கள் பேசாமல் இருங்கோ” அழத்தொடங்கினாள்.

ஆறுமுகம் எழுந்து ஓசைப்படாமல் நழுவினார்.

அன்று முழுவதும் சங்கரப்பிள்ளையர் எவருடனும் பேசவில்லை.

இரவு நன்றாக யோசித்துக்கொண்டு படுத்தவர் மறு நாள் எழும்பவேயில்லை. அவர் தான் செய்த பாவங்களுக்கு இறப்பின் மூலம் பரிகாரம் தேடிக்கொண்டு விட்டார்.

சரோவும், சுமதியும் அவரை உலுக்கி உலுக்கி அழுது கொண்டிருக்க, சுகுணா விறைத்துப்போய் நின்றாள்.

— சஞ்சீவி 28.03.98 —

# 7

# ஒளம்

முடிவற்று நீண்டிருந்த அந்த வீதியை எனது விழிகள் மிகுந்த ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தன. இன்று... நேற்றல்ல.... கடந்த இரு மாதங்களாகவே இந்த நோக்குத் தொடர்கிறது. இருப்பினும், இரண்டு மூன்று நாள்களாக எனது பார்வையிலே அபரிமிதமான எதிர்பார்ப்பு பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது?

எதற்காக இத்தனை எதிர்பார்ப்பு?

காரணத்தைச் சொல்ல முன்னர், எனது உள்ளத்தைத் தாக்கிய அந்தச் சம்பவத்தினைக் கூறுவது மிகவும் பொருத்த மானது என நினைக்கிறேன். அதன் மூலம் என்னை... ஓரளவிற் குப் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

இதோ நன்றாகக் கிளை பரப்பி நிற்கிறதே இந்த ஆலமரம்! இதுதான் எனது நிரந்தர இருப்பிடம். எவனோ ஒரு புண்ணியவான் என்றோ கட்டிவைத்த பஸ்தரிப்பிடம் அருகில் உள்ளது. மழைக்காலங்களிலும், இராப்பொழுதுகளிலும் அதனுள்ளே தங்கிக்கொள்வேன். இந்த ஆலமரத்தடி பல்வேறு விதமான வரலாறுகளைக் கொண்டது. மாலைநேரம் ஊர்ப் புதினங்களை ஆராய்வோரால் களைகட்டும். அத்துடன், விடலைப்பருவப் பையன்களின் ‘காத்திருப்பு’ மையமாகவும் விளங்கிப் பிரபலம் பெற்றது. அருகிலே இராசனின் தேநீர்க் கடை அமைந்திருப்பது பலருக்கும் வசதி. இராசனின் தாராள குணத்தினால் எனக்கும் மூன்றுவேளை உணவு கிடைத்தது.

கதையோடு கதையாக என்னைப்பற்றியும் கொஞ்சம் சொல்லிக்கொள்கிறேன். எனக்கு சுமார் முப்பது வயதிருக்கும் என எண்ணுகிறேன். காலத்தை எப்படியாவது ஓட்டிவிட வேண்டும் என்ற அக்கறை இருக்குமளவுக்கு எனது வயதை எண்ணுவதில் துளிகூட நாட்டம் எனக்கில்லை. பதினைந்து வருடங்களுக்கு முன்னர் விமானக்குண்டுவீச்சிலே எனது தாய்,

தந்தை, சகோதரங்கள் கொல்லபட்டபின் எதிலுமே பிடிப்பில் லாமல் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறேன். அந்தப் பிடிப்பற்ற தன்மை எனது புறத்தோற்றத்திலும் வெளிப்பட்டது.

எண்ணெய்படாத பரட்டைத்தலை. நன்கு கிழிந்த ஒரு சாரம்: உடலில் ஒரு இஞ்சித் தடிப்பிலே அழுக்கு. போதாக் குறைக்கு வீதிகளிலே கிடக்கின்ற தகரப்பேணிகள், கயிறுகள் போன்றவற்றைப் பொறுக்கி ஓர் உரப்பையிலே அடைத்துக் கொண்டு திரிவேன். அவை எதற்காகவென்று நானறியேன்!

இவ்வளவும் காணாதா எங்கள் ஊர்ச்சிறுவர்களுக்கு? 'விசர்' என்று அழகான பட்டமும் சூட்டி அடிக்கடி என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருப்பார்கள். சின்னப்பிள்ளைகள் தான் அறியாமல் செய்கிறார்கள் என்றால் வம்பளக்கக்கூடும் பெரியவர்களைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் எவ்வித உணர்ச்சிகளையும் வெளிப் படுத்துவதில்லை. ஊமையாக மனதுக்குள் அழுவேன். இராசன் தான் தேற்றுவான். துப்பரவாக இருக்கும்படி என்னை வற்புறுத்துவான். அவனது சொல்லுக்கு மதிப்பளித்து, குளத்துப்பக்கம் போய் நன்றாகக் குளிப்பேன் அவன் தரும் பழைய சாரத்தையும் உடுத்திக்கொள்வேன். மறுநாள் எல்லாம் சரி. புழுதியெல்லாம் உருண்டுபுரண்டு சாரத்தையும் கிழித்துக் கொண்டு நிற்பேன். இராசன் என்னைப் பரிதாபத்துடன் பார்த்துச் சிரிப்பான். நானும் பதிலுக்குச் சிரிப்பேன்.

சுத்தமாக இருக்கவேண்டும் என எனது மனம் விரும் பினாலும் என்னை அறியாமல் ஏதோ ஒரு சக்தி அவ்வாறு செய்யவிடுவதில்லை. அது ஏன் என்று எனக்குப் புரிவதில்லை. இப்படி எல்லோராலும் பழிக்கப்படுமளவுக்கு நான் என்ன தவறு செய்தேன்? எல்லாவற்றையும் மனதுக்குள்ளேயே போட்டு அமுக்கிக் கொண்டிருந்த எனது வாழ்விலே அந்தச் சம்பவம் நடந்தபோதுதான் நானும் வாழவேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அதனை இப்போது சொல்கிறேன்.

ஒருநாள் காலை ஒன்பது மணியிருக்கும். இராசன் தந்த ஐந்து தோசைகளையும் சாப்பிட்டுவிட்டு நீண்ட ஏப்பம் ஒன்றையும் விட்டுக்கொண்டு எழுந்தேன். ஆலமரத்தடிக்கு எதிரே வீதியோரம் பொதுக்குழாய்க்கிணறு அமைக்கப்பட்டி ருந்தமையால் வீதியைக்கடந்து சென்றே தண்ணீர் குடிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு. அக்கம்பக்கம் பார்க்காமல்

விரைவாகக் கடந்தேன். எனது தோற்றமே வருபவர்களை விலகிச்செல்ல வைத்து விடுவதால் யார் என்னில் மோதிக் கொள்ளப் போகிறார்கள்?

தண்ணீரைக் குடித்துவிட்டு நிமிர்ந்த எனது பார்வையில் சிவராசாவின் கடை வாசலில் நின்றிருந்த அந்தப் பெண் சிக்கினாள். வாங்கிய நாலைந்து கொப்பிகளை சைக்கிளிலிருந்த பையிலே வைத்துக்கொண்டிருந்தாள். எனக்கு அவளுடைய முகம் தென்படவில்லை. சேலைத்தலைப்போடு போட்டியிட்டுக் கொண்டிருந்த நீண்ட பின்னல் மட்டும் தெரிந்தது.

திடீரென அவளது பையிலிருந்து கறுப்புநிற மட்டையொன்று கீழே வீழ்ந்தது. அவள் இதனைக் கவனிக்காமல் சைக்கிளில் ஏறிப்புறப்பட ஆயத்தமானாள். நான் கத்திக் கொண்டு அவளை நோக்கி ஓடினேன். மருண்டு போய்த் திரும்பிய அவள் என்னைக் கண்டதும் வீறிட்டுக் கத்தியபடி சைக்கிளை விரைவாக உழக்கினாள். நானும் அந்தக் கறுப்பு நிறமட்டையை எடுத்துக்கொண்டு இயலுமான வரை அவளைத் துரத்திப் பார்த்தேன். அவள் சிட்டாய்ப் பறந்து விட்டாள். இளைத்தபடி நின்றேன். இராசன் தந்த தோசை நிச்சயம் சமித்திருக்கும். மௌனமாக நின்றபடி கையிலிருந்த மட்டையைப் பிரித்துப் பார்த்தேன். மிக அழகான அவளுடைய படம் ஒட்டப்பட்டிருந்தது. கீழேயிருந்த பெயரைச் சிரமப்பட்டு எழுத்துக் கூட்டி வாசித்தேன்.

“சி.... வ.... ர.... ஞ்.... சனி....”

அதற்கும் கீழே அவள் கற்பிக்கும் பாடசாலையின் பெயர் காணப்பட்டது. அந்தப் பாடசாலை இருக்குமிடம் எனக்குத் தெரியும். எதுவும் பேசாமல் அந்தப் பாடசாலையை நோக்கி நடந்தேன்.

பாடசாலையை அடைந்தேன். உள்ளே நுழைய முயற்சித்தபோது வாசலில் நின்ற காவலாளி என்னைத் தடுத்தான். “டேய்! வெளியிலை போடா விசரா!” இந்த வார்த்தைகள் என்னை முள்ளாகக்குத்தின. நான் மௌனமாக எனது கையிலிருந்த அடையாள அட்டையை விரித்துக் காட்டினேன். அதைப் பார்த்ததும் அவனது முகம் மாறியது.

“டேய்! உனக்கு இது எங்கையடா கிடைச்சது?”

நான் எனது வழக்கமான சிரிப்பை வெளிவிட்டேன். அவனால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லையோ என்னவோ இரண்டெட்டில் என்னை அடைந்து எனது கையிலிருந்த அடையாள அட்டையைப் பறிக்க முற்பட்டான். நான் கொடுத்தால் தானே.

அவனுக்கும் என்னோடு சண்டையிடத் துணிவில்லை. ஏனென்றால், விசரர்களின் அடிகள் மோட்டுத்தனமானவை என்பது எல்லோருக்கும் தெரியுமே! ஒரு சிறு கூட்டமே கூடி விட்டது. நான் அந்தக் கூட்டத்தினுள்ளே எனது கண்களாற் துளாவினேன். சிவரஞ்சனி ஒருபுறம் ஒதுங்கி நிற்பது தெரிந்தது. மறுகணம் எனது முகம் பிரகாசமடைந்தது. கையிலிருந்த அடையாள அட்டையை அவளை நோக்கி நீட்டியபடி நடந்தேன். கூட்டம் விலகி வழிவிட்டது. அவளை நெருங்கினேன். மருண்ட விழிகளுடன் என்னைப் பார்த்தாள். மைதீட்டிய அவளது விழிகள் தான் எவ்வளவு அழகு!

பயப்படுகிறாளா?

ஏன் பயப்படவேண்டும்?

“ம்” என்றேன். நடுங்கும் கரங்களுடன் பெற்றுக்கொண்டாள். திரும்பி நடந்தேன். சிறிதுதூரம் சென்ற பின் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னையே பார்த்தபடி நிற்பது தெரிந்தது. மனம் நிறைந்த பூரிப்புடன் உலகை வென்ற திருப்தியுடன் நடக்கத் தொடங்கினேன்.

இச்சம்பவம் நடந்த பின் அந்தப்பெண் பாடசாலைக்குப் போகும்போது என்னைப்பார்த்து முறுவலித்துவிட்டுப் போவாள். அந்தப் புன்முறுவல் ஒன்றே எனது வாழ்நாள் முழுமைக்கும் போதும் போல உணர்வேன். என்னைப் பார்த்து புன்னகைக்கும் முதற்பெண்ஜீவன் சிவரஞ்சனிதான். அவளைக் காணாவிட்டால் எனக்குச் சாப்பாடு இறங்காது. அந்தளவுக்கு அவளை என் மனதில் நன்றாகப் பதித்துக் கொண்டேன்.

இவ்வளவு காலமாக அர்த்தமற்றுக் கழிந்து கொண்டிருந்த என் வாழ்வில் அன்றுதொட்டு ஒரு பிடிப்பு ஏற்பட்டது. புற அலங்கரிப்புக்களில் ஓரளவு அக்கறை செலுத்தத்தொடங்கினேன். இராசனிடம் கேட்டு ஒரு சாரமும், சேட்டும் வாங்கிக் கொண்டேன். அடிக்கடி குளித்தேன். தலையை ஒழுங்காகச்

சீவினேன். எனினும், 'விசர்' என்ற பட்டம் மட்டும் மறையவே யில்லை.

இராசன் என்னை வியப்பாகப் பார்ப்பதுண்டு. ஒரு நாள் வாய்விட்டும் கேட்டுவிட்டான்.

"என்னடாப்பா சிவம்! இருந்தாப்போல மாறிப்போனாய். ஏதும் விசேசமே?" அவனது கேள்வியில் நிறைந்த ஆவல் தொனித்தது. என்னை நன்கு புரிந்துகொண்ட அவனைப் பொய் சொல்லி ஏமாற்ற எனக்கு மனம் வரவில்லை. தயங்கித் தயங்கி எனது உள்ளக்கிடக்கையை அவனுக்குச் சொன்னேன்.

அவன் என்னைப் பரிதாபமாகப்பார்ப்பது போலப்பட்டது.

நானும் சிவரஞ்சனியிடம் பேசவேண்டும் என்று அடிக் கடி நினைப்பேன். அதற்கான சந்தர்ப்பம் வாய்ப்பதேயில்லை. சந்தர்ப்பம் கிடைத்தாலும் துணிவு வரவேண்டுமே! சிவரஞ்சனி எதிர்ப்படும்போது நான் என்னையே மறந்து விடுவேன். பிறகு எப்படி அவளுடன் கதைப்பதாம்?

இதெல்லாம் நடந்துமுடிந்த கதை. சரி இனி விடயத் துக்கு வருவோம்.

கடந்த ஓரிரு நாளாக சிவரஞ்சினி என் பார்வையிலே தட்டுப்படவில்லை. ஏன் என்று யோசித்து யோசித்து உறக் கத்தைத் தொலைத்தேன்.

அவளுடைய புன்னகை பூத்த முகத்தைக் காணாமல் என்மனம் படும் வேதனை எவருக்குத் தெரியும்?

இன்று காலையிலேயே ஆலமரத்தடிக்கு வந்துவிட் டேன். இன்றாவது என் காதலி வருவாளா? எனது விழிகள் அவள் வரும் பாதையைப் பார்த்தபடியிருந்தன. இராசன் தேநீர் கலக்கும் ஒலியோ வீதியில் வாகனங்கள் விரையும் ஒலிகளோ என்னைச் சலனப்படுத்தவில்லை. எனக்கு முன்னே இராசன் தந்த இடியப்பம் இலையான் மொய்த்தபடி கிடந்தது. இன்று சிவரஞ்சனியிடம் எப்படியாவது பேசிவிட வேண்டும் என்ற ஊக்கமே என்னுள்ளே கிளர்ந்து நின்றது. எனது இதயத்தில் இருப்பவற்றையெல்லாம் கொட்டிவிடவேண்டும் என்று ஆசைப் பட்டேன்.

அதோ!

அவளா? அவளேதான் என் சிவரஞ்சனியேதான்.

சட்டென்று என் உடலெங்கும் உற்சாகம் பரவுவதாய் உணர்ந்தேன். துடிப்புடன் எழுந்து நின்றேன்.

அவளது சைக்கிள் எனது இருப்பிடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. சிவரஞ்சனி வழக்கம்போலப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகை எனக்குத் துணிவேற்ற விரைந்து சென்று இரு கைகளையும் நீட்டி அவளை மறித்தேன். அவள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லைப்போலும். திடுக்கிட்டுப்போய்ச் சைக்கிளை நிறுத்தினாள். கலவரப்படுத்திவிட்டேனோ? நானொரு விசரன்! மென்மையாக அணுகியிருக்க வேண்டாமா? நான் என்னையே நொந்து கொண்டேன். என்றாலும் அவள் முகத்திலே பழைய முறுவல் மிளிர்ந்தது. எனக்கும் மீண்டும் துணிவு வந்தது. தட்டுத்தடுமாறிக் கொண்டு உடலை நன்றாக நெளித்து வெட்கப்பட்டுக்கொண்டு சொன்னேன்.

"நான்....உங்களை ...கலியாணம்... நீங்கள் என்னை... கலியாணம் ... ஹி! ஹி!"

குனிந்திருந்த என் தலை நிமிரவில்லை. 'அடமடையா! நீயொரு ஆண் அல்லவா? ' என்று என் மனம் இடித்துரைக்க நிமிர்ந்தேன். அவளது கண்களிலே பரிதாப உணர்வு நிரம்பி யிருப்பது போல எனக்குப்பட்டது.

"இதென்ன விசர்க் கதை?"

சிவரஞ்சனி மெதுவாகக் கூறிவிட்டு என்னை விலத்திக் கொண்டு சைக்கிளில் ஏறிப்போய்விட்டாள். திக்பிரமை பிடித் துப்போய் நின்றேன். இவள் கூட என்னைப் 'பைத்தியம்' என்று நினைக்கின்றாளா? இந்தப் பைத்தியத்துக்குக் காதல் வாய்க் கக்கூடாதா? எனக்கும் மற்றவர்களைப் போல உணர்வுகள் உண்டு என்பதை எவர்தாம் ஏற்றுக்கொள்வார்? எனக்கு எல்லாமே வெறுத்தது. தளர்ந்து போய்த்திரும்பி நடந்தேன்.

"டேய் விசர்!"

நடந்து கொண்டிருந்த என்கால்கள் தடைப்பட்டன. நெஞ்சு நிறைந்த கோபத்துடன் திரும்பினேன். பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த சிறுவர்கள் சிலர் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். என்னைக் கட்டுப்படுத்த இயலாமல் அருகிலே கிடந்த கற்களைப் பொறுக்கி எறிந்தபடி துரத்தத் தொடங்கினேன். அவர்கள் சிட்டாகப் பறந்து விட்டனர்.

வீதியோரம் மண்ணிலே புரண்டு உடைகளைக் கிழித்தபடி ஓங்கிய குரலெடுத்து அழ ஆரம்பித்தேன்.

நீங்களே சொல்லுங்கள்!

எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?

○ சஞ்சீவி 13.06.98

# 8

# பொருத்தம்

எனக்கு ரமணனின் போக்கு வெகு விசித்திரமாக இருந்தது. கல்லூரிக்கு வந்ததும் 'மச்சான்' என்று என் தோளைத் தட்டும் அவன் இன்று ஒன்றும் பேசாமல் போய் விட்டான்.

இவனுக்கு என்ன நடந்தது? வீட்டிலே குடும்பப் பிரச்சினை என நினைக்கலாம் என்றால் அவனுக்கு இன்னமும் திருமணமாகவில்லை. போதாக்குறைக்கு நன்கு வசதியானவனும் கூட. அவனது தகப்பனார் பெரிய வியாபாரப்புள்ளி பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் திகைப்பவர் அவர். ரமணன் ஒரேயொரு பிள்ளை. இதனால் அவர் அவனைப்பற்றி அவ்வளவாக அக்கறை கொள்வது கிடையாது. அவன் போக்கிலேயே விட்டுவிடுவார்.

நானும், ரமணனும் சிறு வயதிலிருந்து ஒன்றாகப் படித்து ஒன்றாகவே பல்கலைக்கழகம் புகுந்து நாம் கற்ற கல்லூரியிலே கற்பிக்கும் பேறுபெற்றவர்கள். நான் பௌதிகம் கற்பிக்கிறேன். அவன் கணிதம் கற்பிக்கிறான். அவ்வளவுதான் வித்தியாசம்.

ரமணன் கல்லூரிக்குக் காரிலே வந்துபோவான். காரணம் கேட்டால், பொழுதுபோக்கிற்காகக் கற்பிக்கிறேன் என்பான். கல்லூரியிலே சக ஆசிரியர்களுடன் கலகலப்பாகப் பழகுவான். அப்படிப்பட்டவன் இன்று 'உம்மென்று' போனால் காரணம் இல்லாமல் இருக்காது.

பிரார்த்தனை முடிந்ததை உணர்த்தும் மணியொலி கேட்டது. யோசனையுடன் எழுந்து வகுப்பை நோக்கி நடந்தேன். வகுப்புக்குள் நுழைந்ததும் மாணவர்கள் எழுந்து 'குட்மோணிங்' சொன்னார்கள். பின்வரிசை மாணவர்கள் எழாமல் அமர்ந்திருப்பதைக் கண்டேன். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. இதே கல்லூரியில் இதே வகுப்பில் ஆசிரியர்களுக்கு

நாம் செய்ததை இப்போது இந்த மாணவர்கள் எமக்குச் செய்கிறார்கள்.

காலம் எவ்வளவுதான் மாறினாலும் கல்லூரிப் பண்பாட் டுக் கோலங்கள் மாறாமல் அப்படியே தொடர்கின்றன. வியப் பான பின்பற்றல் தான்!

சிந்தித்துக்கொண்டே கரும்பலகையில் 'கவுசின்' தேற் றத்தை எழுதி விளங்கப்படுத்திவிட்டு, ஒரு கணக்கினையும் செய்யக்கொடுத்துவிட்டு அமர்ந்து கொண்டேன்.

வாசலில் நிழலாடியது. திரும்பிப்பார்த்தேன். ரமணன் நின்று கொண்டிருந்தான். எழுந்து அவனருகே சென்றேன்.

"மச்சான் உன்னோட கொஞ்சநேரம் கதைக்க வேணு மடா" தலையைச் சொறிந்தான்.

"போச்சுது; நான் நினைச்சது சரிதான். சீமானுக்கு மனம் சரியில்லை. அதுதான் அப்போதை அப்பிடிப்போனவர் போல...." என்று எண்ணியபடி இப்ப பாடமடா அடுத்தது ப்ரீ. அப்ப கதைப்பம்" வகுப்பினுள் எட்டிப் பார்த்துக்கொண்டே சொன்னேன்.

"டேய் உனக்கு என்ரை மனநிலை கொஞ்சமும் விளங்குதில்லை! சரி கன்ரீனிலை இருக்கிறன் வா" என்றவாறு திரும்பி நடந்தான். நான் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

"என்ன பிரச்சனையாயிருக்கும்? வழியிலை ஏதும் சிக் கலிலை மாட்டுப்பட்டானோ? படிப்பிக்க மனமில்லாமல் போற அளவுக்கு.....!"

வகுப்பில் ஆரவாரம் கேட்க திரும்பிவந்து பாடத்தைத் தொடர்ந்தேன். பாடம் முடிந்ததும் 'கன்ரீனை' அடைந்தபோது ரமணன் காத்திருப்பது தெரிந்தது. என்னைப் பார்த்ததும், "இரு மச்சான்" என்றவன் உள்ளே திரும்பி "நல்லையா அண்ணை ரெண்டு ரீ" என்று சொன்னான். பிறகு என்னை ஊடுருவினான். நான் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தேன்...... கொஞ்சநேரம் மௌனமாக இருந்தவன், ஒருமுறை செருமிவிட்டுச் சொன்னான்.

"மச்சான் இண்டைக்கு காலமை நான் வரேக்க ஒரு விஷயம் நடந்ததடா"

"என்ன விஷயமடா? "

"காரை நிட்பாட்டிப் பெற்றோல் அடிச்சுக்கொண்டு நிண்டன். ஆமி சென்றியால பைன் ஆட்ஸ் பெட்டையள் நடந்து வந்தாளவை..." என்று கூறிவிட்டு இடை நிறுத்தினான்.

"பிறகு ....?"

நான் ஆவல் தாங்கமுடியாமல் கேட்டேன். 'மனித மனம் ஒரு குரங்கு' தானே! எனது மனம் அதற்குள் எத்தனையோ விடயங்களைக் கற்பனை செய்துவிட்டது. அப்போது நல்லையா அண்ணை ரீ கொண்டு வந்து வைத்தார். ரமணன் ஒன்றை எடுத்து என்னிடம் நீட்டினான்.

"குடி மச்சான்."

'இவனொரு மடையன்! விஷயத்தைச் சொல்லாமல்...' மனத்தினுள்ளே திட்டிக்கொண்டு ரீயைக் குடிக்கத் தொடங்கினேன்.

"அதுக்குள்ள ஒருத்தி... கடவுளே! என்ன வடிவு மச்சான்! கொஞ்சநேரம் எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லையடா. டான்ஸ் பழகிறவளோ என்னவோ அந்த மாதிரிக் கொடி உடம்படா."

ரமணனின் கண்கள் எங்கோ வெறித்தபடியிருக்க வாய் மட்டும் அசைந்து கொண்டிருந்தது. நான் சிரிப்பை அடிக்கிக் கொண்டு,

"'பிறகு....?' என்றேன்.

"காரைக் கடக்கேக்க ஒரு வெட்டு வெட்டிப்போட்டுப் போனாள் பார். நான் நிலத்திலை இல்லை மச்சான்..."

"பொறு பொறு." என்று இடைமறித்தேன்.

'என்ன சொன்னனீ? வெட்டிப்போட்டுப் போறாளோ? உன்னையோ அல்லது உன்ரை காரையோ?'

"டேய் பாத்தியே உடனை ஏதாவது குறுக்குக் கதை கதைச்சுப் போடுவாய்"

"கோபியாதை மச்சான். நான் என்ன சொல்லவாற னெண்டா..... இண்டைக்கு நீ ஒரு ஊத்தைச்சாரமும் கட்டிக் கொண்டு வெறும் மேலோடை, தலையிலை கத்தரிக்காய்ச் சாக்கோடை நிண்டிருந்தா இந்த வெட்டு வெட்டியிருப்பாளோ?"

"போடா. உனக்கு எல்லாத்திலையும் நொட்டை சொல் லாட்டி நித்திரை வராது... அவளுக்கும் விருப்பம் இருக்கு மச்சான்"

ரீயை முழுவதும் குடித்துவிட்டுக் கோப்பையை வைத்தேன்.

"டேய் ரமணன்! இஞ்சைபார் அவளுக்கு விருப்பம் இருக்குதோ இல்லையோ அது வேற விஷயம். முதலிலை ஆளின்ரை செயற்பாடுகளை நல்லா நோட் பண்ணவேணும் மச்சான். அப்பதான் இயற்கையான குணங்களைப்பற்றி அறிஞ்சு கொள்ளலாம். அதிலை உன்ரை குணங்களோட ஒத்துப்போற நல்ல குணங்கள் இருக்குமெண்டா நீ உன்ரை மனதை வெளிப்படுத்தலாம். உனக்குப் பிடிச்சதுகளை அவள் தானாச் செய்யிறாள் எண்டா அதே ஒரு நல்ல குணமடா. அதைவிட வேற எதுவும் தேவையில்லைய்டா".

நிறுத்திவிட்டுச் சற்று மூச்சு வாங்கினேன். ரமணன் விழி இமைக்காமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ரை மனிசியைப் பார் மச்சான். நாங்கள் எல்லாம் ஒண்டாப் படிச்சனாங்கள் தானே. அவளின்ர அமைதியான குணத்துக்கு ஈடா, அப்ப எந்தப்பெட்டையாவது நிண்டிருப்பாளே வையே? கிட்டத்தட்ட ஒரு வருசம் நோட்பண்ணிப்போட்டுத் தானே மச்சான் நான் என்ரை மனதை வெளிப்படுத்தினான். இப்ப நான் வாழ்க்கையிலை சந்தோஷமா இருக்கிற மாதிரி எவன் இருக்கிறான் சொல்லு பாப்பம்? முதலிலை மனப்பொருத் தத்தைப் பார்க்கவேணும் மச்சான். என்ரை அனுபவத்திலை சொல்லுறன்."

"நீ சொல்லுற மாதிரியே அவள் இருக்கட்டுமன். நான் அவளை அனுசரிச்சுப் போனால் சரிதானே மச்சான்? "

ரமணன் கேட்டான்.

"அனுசரித்துப் போகத்தான் வேணும். அது ஒரு பக்கம் மட்டும் இருக்கக் கூடாது."

"நீ எதை வேணுமெண்டாலும் சொல்லு. நான் இதை ட்ரை பண்ணிறதெண்டு முடிவு செய்திட்டன்." ரமணன் முடிவாகச் சொல்லிவிட்டு எழுந்தான்.

"அப்ப என்னத்துக்கடா என்னட்ட அட்வைஸ் கேட் டனீ?... சரி. என்னவோ நான் சொல்லுறதையும் சொல்லிப் போட்டான். இனி உன்ரைபாடு" எழுந்து அவனுடன் நடந்தேன்.

★ ★ ★

சரியாக ஆறுமாதத்தில் ரமணன் நினைத்ததைச் சாதித்துவிட்டான்.

அவனது திருமணத்துக்குப் போயிருந்தபோது அந்தப் பெண்ணைப் பார்த்தேன். ரமணன் மயங்கியதில் வியப்பில்லை என்று தோன்றியது.

கல்லூரியில் இருமாத 'லீவு' எடுத்துக்கொண்டு ரமணன் இந்தியா, சிங்கப்பூர் என்று சுற்றிவந்தான்.

என்னிடம் வந்து பேசும்போது 'சேட் கொலரைத்' தூக்கி விடுவான்.

"'பாத்தியே மச்சான்! என்னவோ சொன்னாய்! அவள் அப்படியில்லையடா" என்டான்.

நான் மௌனமாகச் சிரிப்பேன்.

காலம் தனது கடமையைச் செய்யத் தவறுவதில் லையே! அது தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது.

என்னைப் போலவே ரமணனுக்கும் இரண்டு பிள்ளைகள். இப்போதெல்லாம் ரமணன் பழையபடி கலகலப்பாக இருப்பதில்லை. அவனது குடும்ப வாழ்வைப் பற்றிக் கேட்கவேண்டும் என நினைப்பேன். பிறகு அவனாகவே சொல்லட்டும் என விட்டுவிடுவேன்.

ஒருநாள் மதியம் 'ரீ' குடிக்க கன்ரீனுக்குள் நுழைந்தேன். ஐந்து வருடங்களுக்கு முன் அமர்ந்திருந்த அதே நாற்காலியில் ரமணன் அமர்ந்திருந்தான். அருகே சென்று மெதுவாகத் தோளைத்தட்டினேன். நிமிர்ந்து என்னைப் பார்த்தான். மறுகணம் மேசையிலே கவிழ்ந்து கொண்டான்.

"நான் தோத்துப்போனன் மச்சான்!" அவனது உடல் இலேசாகக் குலுங்கியது.

"அவள் என்னைப்போட்டு மிதிக்கிறாளடா. பிள்ளைகளையும் தன்ரை பக்கம் இழுத்து வைச்சுக் கொண்டு....! ஒவ்வொரு நாளும் சண்டையடா."

நான் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து என்னை நிமிர்ந்து பார்த்தான். கண்கள் நன்றாகச் சிவந்திருந்தன.

நான் தொண்டையைச் செருமிக்கொண்டு சொன்னேன்.

"நான் அப்ப சொன்னதைக் கேட்டிருந்தா இவ்வளவும் வந்திராது. இந்த விஷயத்திலை வெள்ளம் வர முன்னமே அணை போடவேணும். எங்களைப்பார். நாங்கள் கணவன் மனைவி எண்ட கட்டுப்பாட்டை நினைக்கிறேல்லை. நாங்கள் இப்பவும் லவர்ஸ்தான். சரி... நடந்ததை நினைச்சுக் கொண்டிருக்காமல் உன்ரை மனிசி அமைதியாயிருக்கிற நேரம் இதமாகச் சொல்லிப்பார். சிலவேளை மாற்றம் ஏற்படலாம்."

ரமணன் மெதுவாக எழுந்து வெளியே நடக்கத் தொடங்கினான்.

தள்ளாடியபடி நடக்கும் அவனைப் பரிதாபத்துடன் பார்த்தபடி, ஆறிப்போன ரீயை எடுத்துக் குடிக்கத்தொடங்கினேன்.

○ சஞ்சீவி 22.08.98

# 9

# மாற்றம்

சில்லென்றிருந்த தண்ணீரை அள்ளித் தலையில் ஊற்றிக் கொண்டிருந்தான் சிவகுமார். சூரியன் இலேசாக எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்த இளங்காலைப் பொழுது அது. கிணற்றடி வேலியிலிருந்த காகமொன்று இடையிடையே கரைந்து தான் இருப்பதை நினைவூட்டிக் கொண்டிருந்தது.

இவற்றையெல்லாம் இரசித்தபடி உடலைத்துவட்டினான்.

சிவகுமார் வைத்தியனாகப் பணிபுரிகின்றான். முப்பது வயது. அவனது பெற்றோர் அவனுக்காகப் பெண் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் சரி வந்தாலும், சீதன விடயத்தில் இவனது பிடிவாதத்தினால் திருமணம் இழுபட்டு வருகிறது.

"சிவா கெதியிலை வா. முருகேசண்ணை குறிப்புகளோடை வந்திருக்கிறார்" தாயின் குரல் உற்சாகத்துடன் ஒலித்தது. அவசரமாக உடைமாற்றிக் கொண்டு கூடத்துக்கு வந்தான். முருகேசு கதிரையிலே நன்றாகச் சாய்ந்து அமர்ந்தபடி பத்திரிகையைத் தூக்கிப்பிடித்திருந்தார். சிவகுமாரைக் கண்டதும் பத்திரிகையைக் கீழே பதித்து விட்டு மூக்குக் கண்ணாடியினூடாக உற்றுப்பார்த்தார். பிறகு தொண்டையை இலேசாகச் செருமிக்கொண்டார்.

"இந்தா பாரும் தம்பி! நாலு பெட்டையளின்ர படங்கள் கிடக்கு. எல்லாம் பெரிய இடங்கள். இவளவை வெளிநாட்டுக் காசிலை குளிக்கிறாளவை கண்டீரோ! உம்மட விருப்பப்படி சீதனம் தாராளமாகக் கிடைக்கும்" என்றவாறு, அருகில் அமர்ந்திருந்த சிவகுமாரின் தந்தை இராசதுரையைப் பார்த்துப் புன்னகைத்தார். பின்பு, தனது பையிலிருந்து நான்கு புகைப் படங்களை எடுத்து முன்னே வைத்தார்.

சிவகுமார் அவற்றைக் கையில் எடுத்துப்பார்த்தான். நால்வரும் முகம் நிறைந்த ஒப்பனைகளைத் தேக்கியபடி 'போஸ்' கொடுத்திருந்தார்கள். நான்கினுள்ளேயும் ஒரு பெண்ணின் தோற்றம் அவனைக்கவர்வது போலிருந்தது. முருகேசர் தோளுக்கு மேலால் எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"தம்பி! இவள் தாவடிப் பெடிச்சி. பீ. ஏ. முடிச்சிட்டு அங்கினேக்க ஒரு பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிறாள். சீதனமாக பதினைஞ்சு லச்சம் தருவினம். வீடுவளவும் அவளுக்குத் தான். உம்மடபாடு கொண்டாட்டம்தான்..."

அவசரமாக இடைமறித்தான் சிவகுமார்.

"நான் எல்லே சொன்னனான் இருபதுக்கு ஒரு அஞ்சு சதமும் குறையப்படாது எண்டு."

"தம்பி அஞ்சு லச்சத்தைப் பாக்காதையும். இதைச் செய்யும். சாதகமும் வலு பொருத்தம்"

"அப்படியில்லை ஐயா! நான் கொஸ்பிற்றலுக்குப்போய் வர ஒரு கார் எடுக்கவேணும். அதோட ஒரு டிஸ்பென்சரியும் கட்ட வேணும். இதுக்கெல்லாம் காசு வேண்டாமே? "

சிவகுமார் படத்தைப் பழையபடி வைத்தான்.

முருகேசர் திரும்பி இராசதுரையைப் பாத்தார்.

"துரை! என்ன உன்ரைமோன் இப்படி நிக்கிறான்? பெடிச்சி மாதம் ஐயாயிரம் உழைக்கிறாள்தானே அது காணாதே?"

"அண்ணை! என்னவோ அவனின்ர விருப்பப்படி செய்யுங்கோ. நான் உதிலை தலையிடமாட்டன்." இராசதுரை இவ்வாறு கூறி விட்டுப் பத்திரிகையில் மூழ்கினார். முருகேசர் பையைத் தூக்கிக் கொண்டார்.

"அப்ப தம்பி! நான் கதைச்சுப் பார்க்கிறன். நீர நல்லா யோசிச்சு வையும். அப்ப.. துரை! நான் வாறன்." விடைபெற்று வெளியே நடந்தார்.

சிவகுமார் வைத்தியசாலைக்குப் புறப்பட ஆயத்த மானான். இராசதுரை பத்திரிகையைப் பதித்துவிட்டு மெல்லச் செருமினார். பிறகு தயங்கியவாறே இழுத்தார்.

"சிவா... நாளைக்கு நான் ஒருக்கா இளவாலைக்குப் போகவேணும். அவன் சுந்தரம் அந்தியேட்டிக்குச் சொன்னவன்."

அவர் எதைக்கேட்கிறார் என்பது சிவகுமாருக்குப் புரிந்தது.

"அதுக்கென்னப்பா மோட்ட சைக்கிளிலை போங்கோ"

"அப்ப நீ .......?"

"நான் சைக்கிளில போவன்"

'விசித்திரமானவன்! எதற்காக அந்த விடயத்தில் மட்டும் இத்தனை பிடிவாதம் பிடிக்கிறான்?' என எண்ணிக் கொண்டார் இராசதுரை. சிவகுமார் மோட்டார் சைக்கிளை உருட்டிக்கொண்டு வீதிக்கு வந்தபோது ராகவன் எதிர்ப்பட்டான்.

"டேய்! மச்சான் சிவா எங்கட கனகசபாபதி மாஸ்ர ரெல்லே மண்டையைப் போட்டிட்டார்;."

"என்னடா நடந்தது?" சிவகுமார் திகைத்துப் போய்க் கேட்டான்.

"அந்தாள் நெஞ்சுநோவோடை திரிஞ்ச மனுஷன். இரவு படுத்து காலையிலை படுக்கையாலை எழும்பேல்லையாம்"

"பாவமடா! நல்ல மனிசன்.. எத்தினை மணிக்காம் எடுக்கினம்?"

"பன்னெண்டுக்கெண்டு உவன் காக்கா சொன்னவன்... என்ர மனிசி பிள்ளைப்பெத்தெண்டு ஆஸ்பத்திரியிலை. ஆளை வீட்டுக்குக் கொண்டுவரவேணும். நான் வரேல்லை. நீ போட்டு வா மச்சான்." ராகவன் சைக்கிளை எடுத்தான்.

சிவகுமார் யோசித்துக்கொண்டே கனகசபாபதி மாஸ்ர ரின் வீட்டுப்பக்கம் மோட்டர் சைக்கிளைத் திருப்பினான்.

கனகசபாபதி வாத்தியார் இவனுக்குக் கணிதம் கற்பித்தவர். சிவகுமார் சுழலச்சுழல எத்தனையோ தடவை அடி வாங்கியிருக்கிறான். கணிதம் என்றாலே வேம்பாக நினைத்த இவனுக்கு 'டீ' பெறுபேறு கிடைக்க அவரே காரணமாயிருந்தார். இளமைக்காலத்திலே மனைவியை இழந்தவர் என்றும், ஒரேயொரு பிள்ளை உண்டு என்றும் அறிந்திருந்தான் சிவகுமார். மூவாயிரம் ரூபா பென்ஷனில் வாழ்க்கையை ஏதோ விதமாக நகர்த்திக் கொண்டே வந்தவர் அவர்.

சைக்கிள் புத்தூர்ச்சந்தியைக் கடந்தது. வீடு நெருங்கியதும், மேள ஒலி கேட்கும் என எதிர்பார்த்த சிவகுமார் ஏமாற்றமடைந்தான். வேலியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு தோரணங்கள் மட்டுமே கட்டப்பட்டிருந்தன. உள்ளே பெருத்த அழுகையொலி கேட்கவில்லை. ஒரேயொரு மெல்லிய குரல் மட்டும் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது.

மோட்டர் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே நடந்தான். அந்தப் பழங்காலத்து மண்வீட்டின் முன்னால் பந்தல் போட்டு வெள்ளை கட்டியிருந்தார்கள். ஐயர் செம்புகளைப் பரப்பிக்கொண்டு தனது வேலையிலே மூழ்கிப்போயிருந்தார். சனங்கள் மிகக் குறைவாகவே வந்திருந்தார்கள்.

மெல்லப் படியேறினான். உள்ளே ஒரு வாங்கிலே கனகசபாபதி மாஸ்ரர் படுத்திருந்தார். தலைமாட்டில் தரமற்ற ஊதுபத்தி ஒன்று புகைந்து கொண்டிருந்தது.

சிவகுமார் கைகளைக் கட்டியபடி அமைதியாய் நின்றான்.

முழங்கால்களுக்கிடையே முகத்தைப் புதைத்தபடி ஒருபெண் அழுதுகொண்டிருந்தாள். பரந்து விரிந்த கூந்தல் அவள் முதுகையும், கைகளையும் முழுமையாக மூடியிருந்தது. அக்கம்பக்கமிருந்த பெண்கள் ஊர்க்கதைகளை அளந்து கொண்டிருந்தார்கள்.

சிவகுமார் மௌனமாகத் திரும்பி வந்தான். வெளியே ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டான். பக்கத்திலே அமர்ந்திருந்தவர் இவனை ஏற இறங்கப் பார்த்தார் பிறகு, வாயிலிருந்த வெற்றிலைச்சாற்றை அருகிலே துப்பிவிட்டுக் கேட்டார்.

"தம்பி ஆரெண்டு தெரியேல்லையே!"

"நான் சேரிட்டைப் படிச்சனான்."

"ஆ! மிச்சம் நல்லம். நான்அவரின்ர தம்பிதான். என்ரபேர் சண்முகநாதன்."

"நீங்கள்தான் செலவெல்லாம் ஏற்றுச் செய்யிறியள் போல?" சிவகுமார் அசுவாரசியமாகக் கேட்டான்.

"ஓமோம் நான் தான்! வேறை ஆர் இருக்கினம்? அண்ணி செத்ததோடை அவவின்ர ஆக்களின்ர உறவும் விட்டுப்போச்சுது. அண்ணையும் அஞ்சு சதம் சேர்த்து வைக் கேல்லை."

"அப்ப இனி சேறின்ர மகளை நீங்கள்தான் பொறுப்பெடுக்கப் போறீங்கள் போல."

"ஆர் வானதியையோ? வேறை வேலையில்லையே? எனக்கும் ஒரு பெட்டை இருக்கிறாள். அவளின்றை தமயன்மார் வெளியிலை இருந்து அனுப்பின காசில ஒரு டாக்குத்தர் மாப்பிள்ளையைப் பார்த்து வைச்சிருக்கிறன். பிறகு இவளுக் கும் அனுப்பெண்டால் அவங்கள் ஓமாமே? வேணுமெண்டால் ஒரு அம்பதாயிரத்தைச் செலவுக்கு குடுத்துவிடுவமெண்டு பாக்கிறன்"

சிவகுமாரின் மனதிலே ஏதோ பொறிதட்டியது.

"நீங்கள் எங்க இருக்கிறனீங்கள்?" ஆவலுடன் கேட்டான்.

"ஏன் கேக்கிறீர்? நான் தாவடி..."

"ஓ...!"

சட்டென்று மௌனமானான் சிவகுமார். ஐயர் மணியைக் குலுக்கத்தொடங்க சண்முகநாதன் எழுந்து நடந்தார். தொடர்ந்து காரியங்கள் மளமளவென நடந்தன. கனகசபாபதி மாஸ்ரர் குளிப்பாட்டப்பட்டுப் பந்தலின் கீழ் வைக்கப்பட்டார். அப்போது அந்தப்பெண் வானதி நடந்து

வந்தாள். அவளது அழகான விழிகள் கண்ணீரிலே தோய்ந் திருந்தன். பளீரிட்ட மூக்குத்தி அந்த நிலையிலும் அவளுக்குப் பேரழகை ஊட்டியது.

கிரியைகள் நடைபெறத்தொடங்கின. ஐயரே தேவாரத் தையும் பொற்சுண்ணத்தையும் பாடிமுடித்தார். பெட்டியை மூடியபோது வானதி ஓங்கிய குரலெடுத்து அழுதாள்.

சனங்கள் கொஞ்சம்கொஞ்சமாக நழுவத்தொடங்கினார் கள். நின்றிருந்த சிலருடன் சேர்ந்து பெட்டியைத் தூக்கிகொண் டான் சிவகுமார். கனகசபாபதி மாஸ்ரரின் இறுதி யாத்திரை ஆரம்பமானது. பாடை இல்லாமலே பயணம் தொடர்ந்தது. இறுதியாக மயானத்தை அடைந்தபோது பெட்டியைக் காவிய நான்கு பேரையும், சண்முகநாதனையும் தவிர எவருமில்லை.

இந்தக்காலத்தில் பணமே எல்லாவற்றையும் தீர்மானிக் கிறது. ஓர் ஏழை இறந்தால் மற்றவருக்குத் தெரியாமலே சாம்பராகிவிடுகிறான். பணக்காரன் இறந்தால் பெருத்த எடுப்பு டன் அவனுடைய பயணத்தை முடித்து வைக்கிறார்கள்.

வீட்டிலே வானதி வைத்துவிட்ட கொள்ளியில் கனக சபாபதி மாஸ்ரர் கரைந்துபோனார். அவர் எரிவதைக் கொஞ்ச நேரம் பர்த்துக்கொண்டு நின்றான் சிவகுமார். சற்றுநேரம் கழித்துத் திரும்பியபோது சண்முகநாதனைக் காணவில்லை. யாருடைய சைக்கிளிலோ தொற்றிக்கொண்டு போய்விட்டார். வேறு சைக்கிள்கள் இல்லாததால் இவனும் மற்றைய மூவரும் நடக்கத் தொடங்கினார்கள். இடைவழியில் அவர்கள் விடை பெற்றுப்போக இவன் மட்டும் மாஸ்ரரின் வீட்டைச்சென் றடைந்தான்.

உள்ளே சண்முகநாதன் சத்தமிடுவது வீதிவரை கேட்டது. இடையிடையே வானதியின் கேவல் ஒலியும் மெது வாக ஒலித்தது. வேலிக்கு மேலால் எட்டிப்பார்த்தான் சிவகுமார். வீட்டின் முன்புறம் சண்முநாதனும் மனைவியும் நின்றிருந்தார்கள். வேறு உறவினர்கள் எவராவது இருப்ப தாகத் தெரியவில்லை.

"இஞ்சை பார் வானதி, செத்தவீட்டுக்கு பத்தாயிரம் சிலவழிச்சனான். இனி செலவு அந்தியேட்டி ஒண்டும் வைக் கேலாது. என்ன பாடுபட்டெண்டால் என்ன அந்த காசைத்தந்து போடு. சரியே? "

'மனிசன் இதுக்குத்தான் விழுந்தடிச்சுக்கொண்டு முன்னுக்கு ஓடி வந்திருக்கு' சிவகுமாரின் மனம் எரிந்தது.

"சித்..த.ப்பா! நான் நான் காசுக்கு எங்க போறது.."

"எனக்கு உதுகளைப் பற்றித்தெரியாது. உன்ரை கொப்பர் கோமணத்துண்டோட போய்ச்சேர்ந்தார். அதால எனக்குத் தான் மரியாதையில்லைக் கண்டியோ? இந்தா பார்! உந்தக்காசை நீயே வைச்சுக்கொள்ளு. ஆனா இண்டையிலை யிருந்து நீ எங்கட வீட்டுப்பக்கம் தலை வைச்சுப்படுக்கக் கூடாது. இனி உனக்கும் எங்களுக்கும் எந்த உறவும் இல்லை. நினைச்சுக்கொள்... பாக்கியம்! வா போவம்"

சண்முகநாதன் மனைவியை இழுத்துக்கொண்டு வாசலை நோக்கி விரைந்தார்.

"சித்...த..ப்.பா! என்னைத் தனிய விட்டிட்டுப் போகா தையுங்கோ சித்...தப்பா!" வானதியின் அழுகையொலி அவர் களைத் தொடர்ந்தது. வாசலுக்கு வந்த சண்முகநாதன், சிவகுமாரைக் கண்டதும் சற்றுத் திடுக்கிட்டாற்போல நின்றார். பிறகு விறுவிறென்று மோட்டார் சைக்கிளை உயிர்ப்பித் துக்கொண்டு போய்விட்டார்.

சிவகுமார் வாசலிலே சற்றுநேரம் பேசாமல் நின்றான். வானதி வீட்டுத் திண்ணையில் அமர்ந்தபடி முழங்கால்களுக் கிடையில் தலையைப் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுவது தெரிந்தது.

துணைக்கு எவருமற்ற தனிமையானது தற்கொலைக் குத் தூண்டும் காரணி என்பது உளவியல் பற்றி அறிந்த அவனுக்கு நன்கு தெரியும். மன அழுத்தத்தினைச் சொல்லி யழ எவருமில்லாத நிலையில் வானதி என்ன முடிவை எடுப்பாள் என்பதைக் கற்பனை செய்யவே அவனுக்குக் கலக்கமாயிருந்தது.

தயங்கியபடி உள்ளே நடந்தான்

நெருங்கியவன் மௌனமாக நின்றபோதும் இவன் வந்ததை அறியாத வானதி குலுங்கிக் கொண்டிருந்தாள்.

"வானதி"

இவன் மெதுவாக அழைத்த குரல் கேட்டதும் அவள் திடுக்கிட்டுப்போய் நிமிர்ந்து பார்த்தாள். அவளது முகத்திலே பயம், கோபம், வியப்பு உட்பட அனைத்து உணர்ச்சிகளும் ஓடின. விருட்டென்று எழுந்து தூணின் பின் ஒதுங்கினாள்.

"பயப்பட வேண்டாம் வானதி! நான் உம்மட அப்பா விட்டப்படிச்சனான் இண்டைக்கு நடந்தது எல்லாத்தையும் பார்த்துக்கொண்டுதான் நிண்டனான்"

வானதியின் தலை கவிழ்ந்தது

"யாருமேயில்லாமல் அனாதையாகிப்போன உமக்கு நல்ல துணையாக இருக்கவிரும்பிறன். உம்மை வற்புறுத் தேல்லை. உமக்கு விருப்பமிருந்தா......"

வானதி சட்டென்று நிமிர்ந்தாள். கண்ணீரிலே தோய்ந்திருந்த அவளுடைய விழிகளிலே இலேசான புன்னகை எட்டிப்பார்த்தது. சிவகுமாரின் மனதைப் பீடித்திருந்த பணம் பற்றிய ஆசைகள் அனைத்தும் அந்தப் புன்னகையின் முன் உடைந்து சிதறின.

மரணத்தில் ஒருவர் பிரிந்துபோக அங்கு புதிய இணைப் பால் ஓர் உறவு ஜனனித்தது.

○ சஞ்சீவி 19.09.98

# 10

# ஊடல்

எங்கோ நீண்ட தொலைவில் ஒரு சேவலின் குரல் விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. இலேசான இரைச்சலுடன் பெய்துகொண்டிருந்த மழையானது அதன் குரலை இடையிடையே அமுக்க முயற்சித்தாலும், சேவல் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை.

இந்த வேளையில் நான் மட்டும் தூங்காமல் புரண்டபடியிருந்தேன். மழை பெய்வதனால் ஏற்பட்ட குளிர் என் காதோரங்களைச் சில்லிட வைத்தது.

'ஒரு சிகரட்டினைப் பற்றினால் நன்றாக இருக்கும்' என என்மனம் எண்ணமிட்டது.

மெல்ல எழுந்து தீப்பெட்டியைத் தேடினேன். இருட்டு என் கண்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டதால் தேடுவது கடினமாக இருக்கவில்லை. குச்சியைத்தட்டி விளக்கைக் கொளுத்தினேன். இலாச்சியைத் திறந்து சிகரெட்டை எடுத்து வாயில் வைத்த போது மாலதியின் நினைவு வந்தது.

திரும்பிப்பார்த்தேன். மாலதி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். அவளை அலட்சியம் செய்தபடி சிகரெட்டைப் பற்றவைத்து ஒருமுறை புகையை ஆழமாக இழுத்து விட்டேன். நுரையீரல்கள் இரண்டும் உஷ்ணமான புகையினால் நிரம்பி உற்சாகம் பொங்கியது. அந்தக் கணத்தில் மாலதி கூட ஒரு பொருட்டாக எனக்குத் தோன்றவில்லை.

கதிரையை இழுத்து அமர்ந்துகொண்டேன். எனது மனக்குதிரை கட்டவிழ்த்துக் கொண்டு பின்நோக்கிப் பாயத் தொடங்கியது.

வாழ்க்கையில் ஒரேயொரு விடயத்துக்கு மட்டும் அவசரப்படக்கூடாது. அது நல்லதொரு துணையைத் தேடுவதற்கு

மட்டுமே. நல்லதுணை கிட்டினால் எதிலும் நிதானமாகச் செயற்படும் தன்மை தானாக வந்துசேரும்.

என்னைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் நான் வெற்றி பெற்றவன். மாலதியை மணமுடித்த இந்த ஐந்து வருட காலப்பகுதியில் ஒருநாள் கூட எமக்குள்ளே மனக்கசப்பு உருவானதில்லை இருப்பினும், நேற்று நடந்த சம்பவம் இருக் கிறதே! அதை நினைக்கும்போது மாலதியைப் பற்றிய ஒரு மதிப்புக் குறைவு எனக்குள் ஏற்பட்டதில் நியாயம் இல்லாம லில்லை. அது பக்கச் சார்பான நியாயம் என்பதும் எனக்குத் தெரியும்.

நடந்தது இதுதான்.

நேற்றிரவு சாப்பிட்ட பின் முன்விறாந்தையில் அமர்ந்து பழைய நாவல் ஒன்றினை வாசித்துக்கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் ''கல்கி' எழுதி மிகப்பிரபலமான 'பார்த்திபன் கனவு' அது. எத்தனைமுறை படித்தாலும் சலிக்காத ஒன்று. என் முன்னே சிறு மேசையில் சிகரெட் பக்கற்றொன்று திறந்து கிடந்தது. ஒரு சிகரட் எனது வாயிலே புகைந்தபடியிருந் தமையால் என்னைச் சுற்றிப் புகைமண்டலம் பரவிப் போயிருந் தது. தூர இருந்து பார்ப்பவர்களுக்கு நான் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருப்பதைப் போன்ற எண்ணம் தோன்றக் கூடும். இதை வைத்துக்கொண்டு நானொரு ''செயின் ஸ்மோக்கர்' என நினைத்து விடாதீர்கள். ஆக ஒரு நாளைக்கு ஒரு பக்கற் மட்டும்தான் குடிப்பேன்.

சற்றுத்தள்ளி 'ஈசிச்செயாரிலே' மாலதி சரிந்திருந்தாள். அவளது கையிலே பத்திரிகை கிடந்தது. சனிக்கிழமை என்றபடியால் நன்றாக முழுகியிருந்தாள். கூந்தல் விரிந்து சென்று நிலத்தைத் தடவிக்கொண்டிருந்தது. பாதங்களிலே கொலுசுகள் நெளிந்து கிடந்தன. எனது பார்வை அவளது பாதங்களிலே சிக்கிக் கொண்டது.

“என்ன பாக்கிறீங்கள்? “

மாலதியின் கேள்வி என்னை நிமிர வைத்தது.

“உம்மட காலுக்கு இது எவ்வளவு வடிவாயிருக்கு! அதுதான் பாக்கிறன்”.

மெல்லச் சிரித்தாள். தலையைச் சரித்துக்கொண்டு சொன்னாள்.

"உங்களுக்குப் பிடிக்கும் அதுதான் வடிவாயிருக்கு."

உண்மையில் மாலதி ஒரு தனிப்பிறவிதான். எனக்கு என்னென்ன பிடிக்கும் என்பதை உணர்ந்து செய்வதில் அவளுக்கு ஒரு ஆத்ம திருப்தி. அவ்வாறு செய்வதை அவள் ஒருநாளும் குறைவாக எண்ணியதில்லை. இந்த விடயத்தில் நான் கொடுத்து வைத்தவன்.

"இந்த கட்டுரையை வாசிச்சனீங்களே? "

மாலதி பத்திரிகையின் நடுப்பகுதியைக் காட்டினாள். புகைபிடித்தலால் ஏற்படும் தீமைகள் பற்றி ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

"ஓ! அதுக்கென்ன? "இலேசான சிரிப்புடன் கேட்டேன்.

"அதுக்கென்னவோ? எக்கச்சக்கமாகக் குடிச்சா என்ன நடக்குமெண்டு எழுதியிருக்கு தெரியுமே? "

"அது சும்மா மாலதி. உவங்கள் உப்பிடித்தான் இல்லாதது பொல்லாதது எல்லாம் எழுதுவாங்கள். ஆனா ஒருத்தரும் சாகிறேல்லை." சிகரற் சாம்பலைத் தட்டிக் கொண்டே சொன்னேன். நான் சொல்லும் சமாதானம் ஏற்புடையதல்ல என்பதை உணர்ந்திருந்தும். இவ்வாறு சமாளிப்பதைத் தவிர வேறு வழிகள் எனக்குத் தெரியவில்லை. மாலதி ஐந்து வருடங்களாக யோசிக்காத ஒன்றினை இப்போது கிளறுகிறாளே என்பதையிட்டு என்மனம் சலித்தது.

"ஆளைப் பாருங்கோவன்.... கரிக்கோச்சி மாதிரிப் புகைவிட்டுக்கொண்டு.... அது கிடக்கட்டும். இதிலை பாருங்கோ ஒரு விஷயம் கிடக்கு. புகைப்பிடிக்கிற ஆக்களுக்கு வாற பாதிப்பு மாதிரி எண்பது வீதமான பாதிப்பு அக்கம்பக்கத்து ஆக்களுக்கு ஏற்படுமாம்."

"அப்ப நான் சிகரற் பத்திறநேரம் கிட்ட நில்லாதையும்."

"உங்களுக்குப் பகிடியாக்கிடக்கு. இண்டையோட சிகரற் குடிக்கிறதை விடுங்கோ. இனி வேண்டாம் என்ன? " கெஞ்சும் பாவனையில் கேட்டாள்.

"என்னெண்டுவிடுகிறது? பழகினதை விடேலாது" எனக்குள் இலேசாகச் சினம் துளிர்த்தாலும் மறைத்துக்கொண்டேன்.

"ஒவ்வொரு நாளைக்கு ஒண்டாகக்குறைச்சுக் கொண்டு வாங்கோ. கொஞ்ச நாளிலை விட்டிடுவீங்கள். உங்களுக்கும் கூடாது. அதோட வீண் காசெல்லே! ஒரு நாளைக்கு எண்பது ரூபாப்படி முப்பது நாளுக்கும் பாருங்கோவன்."

எனக்குக் கோபம் உச்சந்தலைக்கு ஏறிவிட்டது.

"மாலதி! நான் உழைக்கிறன். நான் செலவழிக்கிறன். இஞ்சை உம்மட கொப்பர் தந்த சீதனக்காசிலை ஒண்டும் செலவழிக்கேல்லை சரியே!"

சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டேன். இந்த வார்த்தைகளை நான் ஒருநாளும் பிரயோகித்ததில்லை. இவ்வளவு காலமும் அவை என் அடிமனத்தில் அமுந்திப் போயிருந்தனவோ?

மாலதி விக்கித்துப்போய் என்னைப் பார்த்தாள். நான் அவளது விழிகளைச் சந்திக்கத் திராணியற்று வேறெங்கோ பார்த்தேன்.

"நீங்கள்.... நீங்கள்தானே.... அப்பா தரவும்.... ஒண்டும் வேண்டாமெண்டு...." அதற்குமேல் எதுவும்பேச இயலாதவளாய் அறைக்குள் ஓடினாள்.

'கடவுளே! நானொரு மடையன்' என்னை நானே திட்டிக்கொண்டேன். நான் அப்படிச் சுட்டிக்காட்டிப் பேசியிருக்க வேண்டாம். உள்ளே மாலதி அழுவது கேட்டது. போய்ச் சமாதானம் செய்யலாம் என்றால் எனது தன்மானம் இடங் கொடுக்கவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தேன்.

சற்றுநேரம் கழித்து நான் அறைக்குள்ளே போனபோது மாலதி உறங்கிப்போயிருந்தாள்.

மேசையிலிருந்த மணிக்கூடு ஆறுமுறை அடித்து என்னை உலுப்பியபோது சுயநினைவுக்கு வந்தேன். திரும்பிக் கட்டிலைப் பார்த்தேன்.

மாலதியைக் காணவில்லை. சமையலறையில் ஆரவாரம் கேட்டது. எனக்குப்பிடித்த கத்தரிக்காய் பொரித்த கறியின் வாசனை மூக்கைத்துளைத்தது. வெளியே வந்தேன். மேசையிலே தேநீர் மூடிவைக்கப்பட்டிருந்தது.

'ஓகோ! நாச்சியாருக்குக் கோபமாக்கும். அவவுக்கு இந்தளவுக்குக் கோபம் வருமெண்டா எனக்கு எப்பிடிவருமெண்டு காட்டிறன்'.

நான் எனக்குள்ளே எண்ணிக் கருவியபடி கிணற்றடிக்கு விரைந்தேன். சற்றுநேரம் கழித்துத் திரும்பி வந்தபோது மேசையில் தேநீரைக் காணவில்லை. அறைக்குள்ளே நுழைந்தபோது உள் மேசையில் அநாதையாகக் கிடந்தது.

நான் என்பாட்டில் அலுவலகத்துக்கு வெளிக்கிடத் தொடங்கினேன். வெளியேவந்து சைக்கிளுக்குக் காற்றடித்தேன். மாலதி கதிரையில் அமர்ந்து என்னைக் குறுகுறுவென்று பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் இலேசாகச் சிவந்திருந்தன. ஏதோ பேசத் துடிப்பது போன்ற முகபாவனை தெரிந்தது. பார்க்கப் பாவமாயிருந்தாலும் நான் ஒன்றும் பேசாமல் சைக்கிள் 'ஸ்ராண்டைத்'தட்டினேன். மாலதி எழுந்து நடந்து வருவதை மெல்லிதாகக் கேட்ட கொலுசுச்சத்தம் மூலம் உணர முடிந்தது. சாதாரண வேளைகளில் இந்த ஒலியைக் கேட்டவுடன் குளிர்ந்துபோகும் என்னால் இன்று மட்டும் அவ்வாறிருக்க இயலவில்லை. சைக்கிளை விரைவாக உருட்டினேன். கேற்றைச் சாத்துவது போன்ற பாவனையில் திரும்பிப் பார்த்தபோது மாலதி கதவு நிலையோடு சாய்ந்தபடி என்னைப் பார்த்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. அவளை அலட்சியம் செய்தபடி சைக்கிளில் தொற்றிக் கொண்டேன்.

'நான் முன்கோபக்காரன்தான். என்றாலும் இவ்வளவு காலமும் அதை வெளிப்படுத்தாமல் நேற்று என்னையறியாமல் அப்படிச் சொன்னதற்காக என்னுடன் கதைக்காமல் விடுமளவுக்கு மாலதியின் வீம்புத்தனம் அதிகம்' இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டு ஆத்திரத்துடன் சைக்கிளை ஏறி மிதித்தேன்.

மதியவேளை...

நான் ஒருநாளும் கன்ரீனில் சாப்பிடுவதில்லை. மாலதி காலையிலேயே உணவினைக் கட்டித்தந்து விடுவாள். சாப்பாட்டுப் பார்சலை நான் பிரிக்கும்போது கிளம்பும் வாசனை அலுவலகத்தையே ஒரு கலக்குக் கலக்கும்.

இன்று நான் கன்ரீனுக்குப் போனபோது குழுமியிருந்த நண்பர்கள் என்னை வியப்பாகப் பார்த்தார்கள்.

"என்ன மச்சான். மனிசியோடை கொழுவலோ? "

குமார் இவ்வாறு என்னைப் பார்த்துக்கேட்டான். இந்தக் கேள்வியிலே பொதிந்துள்ள உண்மையை எண்ணி வியந்தேன். ஆணின் நிறைவான வாழ்விற்கு ஒரு பெண்ணின் பங்களிப்பு நிச்சயம் அவசியம் என்பதை அனுபவத்திலே கண்டுகொண்டேன்.

"அப்படியொண்டுமில்லை. இண்டைக்குக் கொஞ்சம் வெள்ளண வெளிக்கிட்டிட்டன். அதுதான் கொண்டு வரேல்லை." சிரித்துச் சமாளித்தேன். பொருந்தக்கூடிய பொய்தான். காலையிலும் சாப்பிடாதபடியால் எனக்கு நல்லபசி. நண்பர்களின் ஆரவாரத்துடன் உணவை ஒரு பிடிபிடித்தேன். கையைக் கழுவியதும் சிகரட் ஒன்றினை உருவி வாயில் வைத்தேன். மறுபடியும் மாலதியின் நினைவு என்னையுமறியாமல் தலைகாட்டியது. புகையை ஊதியபடி நடந்தேன். அலுவலக அறைக்குள் வந்ததும் மிகுதிவேலைகளில் மூழ்கிப் போனேன்.

நான்கு மணிக்கு அலுவலகம் ஓய்ந்து போனது.

சைக்கிளை எடுத்துக்கொண்டு இருபது நிமிட உழக்கலில் வீடு வந்துசேர்ந்தேன். கேற் சாத்தியபடியேயிருந்தது. முன்கதவு இலேசாகத் திறந்திருந்தது. சைக்கிளை நிறுத்தி விட்டுப்படியேறினேன். வீடு நிசப்தமாகக் கிடந்தது. முன் விறாந்தையில் மாலதியைக் காணவில்லை. விரைவாக நடந்து போய் சமையலறையினுள் எட்டிப்பார்த்தேன். காய்கறிகள் நறுக்கப்பட்டபடி அரைகுறையாகக்கிடந்தன. காலை உணவு அப்படியேயிருந்தது. எனக்குத் திக்கென்றது.

என்மனதிலே பல்வேறுபட்ட விபரீதக்கற்பனைகள் ஓடின. என்னைக் கட்டுப்படுத்த இயலாமல் "மாலதி" என உரத்து அழைத்தபடி முன்விறாந்தைக்கு ஓடிவந்தேன். நடு அறைக்குள்

லிருந்து கேட்ட கொலுசுச்சத்தம் மாலதி இருப்பதை உறுதிப் படுத்தியமையால் நிம்மதிப் பெருமூச்சுவிட்டேன். உள்ளே நுழைந்தேன். அறைவாசலை நோக்கி வந்து கொண்டிருந்த மாலதியின் கண்கள் சிவந்திருந்தன. கன்னத்திலே கண்ணீர்க் கோடுகள். தலை நன்றாகக் கலைந்திருந்தது. அவள் அணிந் திருந்த இளநீலநிறமான ஆடை கசங்கிப்போயிருந்தது.

என்னருகே வந்ததும் துவண்டு சரிந்தாள். தாங்கிக் கொண்டேன். மறுகணம் விக்கிவிக்கி அழத்தொடங்கினாள்.

"சாப்பிட்டனீங்களே?"

அழுகையினூடு அவள் கேட்ட கேள்வி எனக்குப் பிடரியில் அடிப்பது போலிருந்தது. பதில் சொல்ல இயலாமல் மௌனமாக இருந்தேன்.

'கடவுளே! நான் எவ்வளவு பெரிய அயோக்கியன். வீட்டிலை இவள் சாப்பிடாமல் கிடந்து காய நான் அங்க கன்ரீனிலை வெட்டிப்போட்டு வந்திருக்கிறன்'

இதுவரை இல்லாமல்போய் இப்போது தலைகாட்டத் தொடங்கியிருந்த மனச்சாட்சி என்னை இடித்தது.

'எனக்குப் பிடித்ததையெல்லாம் இவள் செய்யும்போது இவளுக்குப் பிடிக்காத இந்தப் புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று ஏன் எனக்குத் தோன்றவில்லை? நான் ஏன் அந்தக் கோணத்தில் சிந்திக்கவில்லை?'

நான் என்னையே நொந்துகொண்டேன்.

எனினும், ஒரேயொரு விடயத்தை உணர்ந்து கொண் டேன். அது இரு இதயங்களின் இறுக்கமான பிணைப்புக்கு ஊடலும் அவசியம் என்பதே. அதுவே அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துவது என்பதை அறிந்துகொண்டதால் எனது மனமும் முகமும் தெளிவாகின.

இனி எக்காலத்திலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் எமக்குள்ளே சண்டை ஏற்பட வாய்ப்பிருக்காது என்ற நம்பிக் கையில், எனது சேட் பொக்கற்றினுள்ளே உறுத்திக்கொண்டி ருந்த சிகரற் பக்கற்றினை எடுத்து யன்னலினூடாக வீசியெறிந் தேன்.

○ சஞ்சீவி 31.10.29

# 11

# இணைவு

பரந்து விரிந்து கிடந்த பூநகரிக் கடல் மாலை வெயிலில் பளபளத்தபடி கொள்ளை அழகை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக பறந்து திரிந்த வெண் கொக்குகள் சட்டென்று கடலினுட் பாய்வதும் பின் மேலெழுந்து பறப்பதுமாக ஆரவாரப்பட்டபடியிருந்தன. இது போதாதென்று அலைகளின் அட்டகாசம் வேறு. ஆழங் குறைந்த அந்தக் கடலில் இடையிடையே தலை காட்டிய பாறைகளை அவை மோதியடித்து முன்னேற முயற்சித்தன. இந்தக் கடல் எத்தனை அவலங்களைக் கண்டிருக்கும்! அவற் றையெல்லாம் சொல்லத் துடித்துத்தான் இப்படி வந்து கரை யில் மோதுகின்றனவோ?

இவற்றையெல்லாம் இரசிக்கும் மனநிலை சுகந்திக்கு இல்லை. இலேசான ரீங்காரத்துடன் வீசிக்கொண்டிருந்த உப்புக்காற்றுக்கூட அவளது மன உளைச்சலைத் தணிக்க வில்லை. நேற்று அவளுடைய குடும்பத்திற்கு ஏற்பட்டிருந்த இழப்பு அவளை வெகுவாகப் பாதித்து விட்டது.

அதிகாலை உறக்கம் கலைவதற்கு முன்பே ஓட்டு சுட்டானை நோக்கிக் கூவத் தொடங்கிய 'ஷெல்' மழையி லிருந்து தப்புவதற்கிடையில் அவளுடைய கண்களின் முன்னாலேயே தம்பி பகீரதன் துண்டு துண்டாகச் சிதறிப் போனான்.

★ ★ ★

புன்னாலைக்கட்டுவனில் சங்கக்கடை மனேச்சர் சிவநாத னின் பெயரை அறியாதவர் எவருமில்லை. சம்பளம் சொற்ப மாய் இருந்தபோதும் பணத்தை என்னென்ன வழிகளிலே சுருட்ட முடியுமோ அவ்வாறு மடக்கி உழைத்தவர். தொண் ணூற்று ஐந்து இடம் பெயர்வுக்குமுன் அவர் இறந்தபோது ஒரு

பெரிய வீட்டையும் ஏக்கர்க்கணக்கிலே தோட்டங்களையும் மட்டும் தனது மனைவிக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் விட்டுவிட்டுப் போனார். திரண்ட சொத்துக்களை அப்படியே விட்டு வெறுங்கையுடன் வன்னிக்கு ஓடினார்கள். அங்கு சென்ற பின்தான் அவர்களுடைய வீடுகள், தென்னந்தோட்டங்கள் அழிக்கப்பட்ட சேதி எட்டியது. எந்தவித உழைப்பும் இல்லா மல் நிவாரணத்தை மட்டும் நம்பி வாழவேண்டிய நிலை.

இடம்பெயர்ந்து ஓடி வந்தபோது சுகந்தியால் அவளு டைய அன்புக்குரியவனின் இதயத்தை மட்டுமே கொண்டுவர முடிந்தது. இத்தனை துன்பங்களிலிருந்தும் அவளை உற்சாகப் படுத்துவது அவளுடைய உள்ளத்திலே குடியிருக்கும் சபேச னின் சுகமான நினைவுகளே.

மாதம் ஒருமுறை வந்து சேரும் சபேசனின் கடிதத் துக்காக அவள் காத்திருப்பதும், கடிதத்தைக் கண்டதும் களிப்படைவதும் வழமை. கடந்த மூன்று வருடங்களாக அவனை விட்டுப்பிரிந்திருக்க முடிந்தது எவ்வாறு என்றெண்ணி வியப்படைவதுமுண்டு.

கொடுத்து மீளப்பெறும் போதுதான் உண்மையான அன்பின் ஆழம் அதிகரிக்கும் என்பது அவளைப் பொறுத்த வரை சரியாகவேயிருந்தது. சபேசனுடன் பழகிய அந்த இரண்டு வருட அனுபவ அலைகளின் பதிவே இதற்குச் சாட்சி என அவள் உறுதியாக நம்பினாள்.

எனினும், கடந்த மூன்று மாதங்களாக அவள் எழுதும் கடிதங்களுக்கு சபேசனிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரா தது அவளைப் பெரும் சங்கடத்தில் ஆழ்த்தி விட்டிருந்தது. வேறு எவரிடமாவது விசாரிக்க முடியாத நிலை, ஏனென்றால், இந்தத் தொடர்பு அவர்கள் இருவரைத்தவிர வேறெவரும் அறியாத ஒன்று.

'என்னில் ஏதாவது கோபமோ? அல்லது கடிதம் எழுத நேரமில்லையோ? ஒருவேளை என்னை மறந்து வேறுயாரை யாவது ......!' என்றெண்ணி வேதனைப்படுவாள். மறுகணம் அவளது ஆழ்மனமே அவளை இடித்துரைக்கும்.

'சபேசன் மீது உனக்கிருக்கும் காதல் இவ்வளவு தானா? அவன் உன்மீது வைத்திருக்கும் அன்பு எத்தன்மை

யானது என்று உனக்கே தெரியும். பிறகு எதற்காகச் சந்தேகப் படுகிறாய்? ' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்வாள்.

ஒருவரில் ஒருவர் வைத்திருக்கின்ற நம்பிக்கையிலே தான் காதலின் வெற்றியே தங்கியுள்ளது. அதனுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் மிக அவசியம். சந்தேகத்தின் சாயை ஒரு மருந்துக்குக்கூட வரக்கூடாது இவற்றை மனதிலே கொள்பவர்களாலேயே மட்டும்தான் இனிமையான இல்லறத்தை உருவாக்கிக்கொள்ள முடியும்.

தனது தோளை யாரோ தட்டுவது போன்றிருக்கவே சட்டென்று சுயநினைவுக்கு வந்தாள் சுகந்தி.

கன்னங்களில் கண்ணீர்க் கோடுகளுடன் அம்மா.

'பாவம் அம்மா! என்னாலாவது இறுகிப்போன இதயத்தை சபேசனின் ஞாபகங்களால் இளகவைக்க முடி கிறது. அம்மாவால் என்ன செய்ய இயலும்? '

காணச்சகிக்காமல் திரும்பிக் கடலை வெறித்தாள். கடற்கரையில் ஒன்றிரண்டு படகுகள் கட்டப்பட்டிருந்தன. கரையெங்கும் சனக்கூட்டம் நிறைந்திருந்தது. இடையிடையே இழப்புக்களை வெளிப்படுத்தும் அழுகைக்குரல்கள் இன்னமும் கேட்டுக்கொண்டிருந்தன. 'ஒவ்வொரு மூலை முடுக்கிலும் மற்ற வர்களுக்குத் தெரியாமலே நடந்தேறுகின்ற இவ்வாறான நிகழ் வுகளை யார் பதிவு செய்வார்கள்? வர்க்க பேதங்களாலும், வரட்டுப்பிடிவாதங்களாலும், போலி கௌரவங்களாலும் பீடிக்கப் பட்டு ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடங்கியதைத் தவிர நாம் என்னத்தைப் பெரிதாகச் சாதித்து விட்டோம்? '

தனக்குள் நினைத்து ஆதங்கப்பட்ட சுகந்தி, தாயை தேற்றும் நோக்கில் ஓரிரு வார்த்தைகள் கூற முற்பட்டாள்.

"அம்மா, அழாதையுங்கோ கஷ்டப்பட்டுப் பழகிப்போச் சுது. இதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளுவம்.... நான் இருக்கிறன் தானே!" சுகந்தியின் ஆறுதல் வார்த்தைகள் தாயின் அழுகையை அதிகப்படுத்தினவே தவிரக் குறைக்க வில்லை.

திடீரெனக் கேட்ட ஆரவாரத்தில் நிமிர்ந்தாள் சுகந்தி. கும்பலாகக் கூடியிருந்தோர் எழுந்து கரையை நோக்கி ஓடுவது தெரிந்தது. படகிலிருந்த ஒருவன் உரத்தகுரலில் சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

“எண்பது பேர் மட்டும் ஏறலாம். ஆளுக்கு ரெண்டாயிரம் ரூபா. பெரியமூட்டை முடிச்சுக்கள் கொண்டு வரேலாது. ஆக்களை மட்டும்தான் போடலாம். ஓடியாங்கோ!”

சனங்கள் முண்டியடித்தார்கள். இவ்வளவு பேரையும் மூன்று படகுகளில் ஏற்றமுடியுமா என்பது பற்றிப் படகோட்டிகள் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை.

சுகந்தி அவசரப்பட்டாள்.

“அம்மா கெதியிலை தோட்டைக்கழட்டுங்கோ. இதை விட்டா வேறை வழியில்லை” என்றவாறு தன்னுடைய தோடுகளையும் கழற்றிக்கொண்டாள். ஒருவாறு இடித்துத் தள்ளிக் கொண்டு பணத்துக்குப் பதிலாக தோடுகளைக் கொடுத்துவிட்டு அவர்கள் இருவரும் படகில் ஏறியபோது நன்றாக இருட்டி விட்டது. நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டார்கள்.

படகு இன்னமும் கிளம்புவதாக இல்லை. காலடியிற்கூட ஆள்கள் அமர்ந்திருப்பதை அந்த இருட்டிலும் சுகந்தியால் உணரக் கூடியதாக இருந்தது.

‘எல்லோரும் எதைத்தேடிப்போகிறோம்? நிம்மதியையா? போகுமிடத்தில் அது கிடைக்குமா? அல்லது இங்கு கிடைத்த கொஞ்சநஞ்சச் சுதந்திரமும் அங்கு பறிக்கப்பட்டு விடுமா?’ சுகந்தியின் மனம் பல்வேறு விதமாகக் கற்பனை பண்ணி வேதனைப்பட்டுக்கொண்டது. படகு இரைச்சலிட்டுக் கொண்டு புறப்பட்டபோது மனம் இலேசாகியது போல உணர்ந்தாள். இருப்பினும், ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழப்பது போன்ற உணர்வு நெஞ்சை உறுத்தியது. திரும்பிக் கரையைப் பார்த்தாள். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்த வெளிச்சப்புள்ளிகள் வரவரச் சிறிதாகிக்கொண்டு வந்தன. இருட்டுப் போர்வையால் மூடப்பட்டுக்கிடந்த காட்டுமரங்கள் எல்லாம் மௌனம் சாதித்தன. வானத்திலே நிலவைக் காணோம். சில்லென்று வீசிய கூதற்காற்று காதோரங்களைத் தடவிக்

கொண்டு போனது. படகை மீறி எட்டிப்பார்த்த நீர்த்திவலைகள் குளிரை மேலும் அதிகரித்தன.

சுகந்தியின் மனப்பறவை படகை முந்திக்கொண்டு ஊருக்குப் பறந்துவிட்டது.

'இந்நேரம் அவர் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருப்பார். வன்னியிலே பிரச்சினை என்றதும் என்னை நினைத்துக் கலங்கியிருப்பார். பாவம்! என்மீது நல்ல பிடிப்பு அவருக்கு... இனி என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் அவருக்காகவே செலவழிக்கப்போகிறேன்'

மனதிலே இவ்வாறெல்லாம் எண்ணிக் குதூகலித்த சுகந்தியின் சிந்தனையோட்டம் படகோட்டியின் பலத்த சத்தத்திலே பட்டென்று தடைப்பட்டது.

"டேய் ராசன்! எஞ்சினை நிப்பாட்டடா! போட்டொண்டு வருகுது." உரத்த குரலில் குழறினான் அவன்.

எஞ்சின் அணைந்தது. 'சளக் சளக்'கென்று மோதுகின்ற அலையின் ஓசையையும் மீறி அந்தப்புதிய படகின் உறுமலொலி கேட்டுக்கொண்டிருந்தது. படகோட்டியின் எச்சரிக்கைக்கு அடங்கி அனைவரும் அமைதியாகக் கிடந்தனர். நடக்கப்போகும் பயங்கரம் எல்லோருடைய நெஞ்சுகளிலும் உறைந்துபோயிருந்தது. கடந்தகாலச் சம்பவங்கள் ஏற்படுத்திவிட்ட பாதிப்பு அவர்களுடைய பயத்தை அதிகப்படுத்தியது.

கும்மிருட்டினுள்ளே நெருங்கிவந்த அந்த ஒலி அவர்களைக் கடந்து போனபோதுதான் நிம்மதி மூச்சு விட்டார்கள். மறுபடியும் படகு இயங்கத் தொடங்கியபோது நேரம் அதிகாலை ஐந்து மணியை நெருங்கிக்கொண்டிருந்தது.

வானமெங்கும் இலேசான ஒளிப்பரவல்கள்.

'இந்த விடிவுதான் ஒவ்வொரு நாளும் நடக்கிறதே!' உண்மையான விடிவு எப்போது கிடைக்கும்? என்று ஏங்குவது போல கடல் கறுப்புத்துணியைப் போர்த்தி எதிர்ப்புக்காட்டியது. வெகு தொலைவிலே வானம் கடலினுள்ளே கவிழுமிடத்தில் 'பளிச் பளிச்' சென்று பிரகாசமான ஒளிப்பொட்டுக்கள் தெரிந்தன. படகோட்டி எஞ்சினை நிறுத்தினான். அது ஓய்வதற்கிடையில் அவனது குரல் ஒலித்தது.

"எல்லோரும் கெதியா இறங்குங்கோ"

"எங்கையடப்பன் இறங்கிறது? நடுக்கடலுக்க படகை வைச்சுக்கொண்டு இறங்கச் சொல்லிறாய்!" ஒரு வயோதிபரின் குரல் பலவீனமாக ஒலித்தது.

"இதுக்கு மேலைபோனா அவன் பிடிப்பான். இடுப்பளவு தண்ணிதான். குழந்தைப்பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு இறங்குங்கோ. வானம் வெளிக்குது. டக்கெண்டு இறங்குங்கோ." பரபரத்தான் அவன்.

எல்லோரும் பயந்துகொண்டே இறங்கத்தொடங்கினார்கள்.

"என்ர ராசா. என்னால இறங்கேலாதடா. கொஞ்சம் கரைக்குக் கிட்டக்கொண்டுபோவன்".

"பழசு! என்ன விசுக்கோத்துக்கு ஏறினனீ? கெதியா இறங்கும் இல்லாட்டித் திருப்பிக்கொண்டு போயிடுவன்"

அந்த வயோதிபர் வேறுவழியின்றி இறங்கினார். குழந்தைகளின் வீறிடல்களும். ஆரவாரங்களுமாக அந்த இடம் அமர்க்களப்பட்டது. பெரும்பாலானோர் தமது உடமைகளைப் படகினுள்ளே விட்டுவிட்டு அடையாள அட்டைகளை மட்டும் இறுகப் பிடித்துக்கொண்டார்கள். படகு கூவிக்கொண்டு பறந்து விட்டது.

சுகந்தி தாயின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள். தண்ணீர் மட்டம் கழுத்தைத் தடவிக்கொண்டிருந்தது. காலடியில் ஊரிகளும் கற்களும் குத்தி உறுத்தின.

"பிள்ளை பயமாக்கிடக்கு. தண்ணி இப்பிடிக்குளிருது!" தாயின் முனகல் மெதுவாகக் கேட்டது.

"கொஞ்சத்தூரம்தானே! மெல்லமெல்ல நடப்பம்." சுகந்தி ஆறுதல் கூறினாலும் அவளுக்கே உதறலெடுத்தது. தண்ணீருக்கூடாக மெதுவாகக் கால்களை நகர்த்தி நகர்த்தி நடந்தபோது நாவற்குழிக் கடனீரேரி ஞாபகத்துக்கு வந்தது. இடம்பெயர்வின்போது இப்படித்தானே அவர்கள் கடலைக் கடந்தார்கள்.!

"படார்" என்றொரு சத்தம் பயங்கரமாக ஒலித்தது. அவர்களை நோக்கிச் சிவப்புத் துண்டங்கள் சீறிவரத் தொடங்கின. குப்பென்று கிளம்பி வானத்தில் நிமிர்ந்த "பராலைட்டின்" ஒளியில் கடல் மின்னியது. எல்லோருடைய அவலக்குரல்களும் கரையை எட்டும்வரை ஓங்கி ஒலித்தன. சுகந்தியைப் பயம் பீடித்துக்கொண்டது.

'சபேசனைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலில் இவ்வளவு துன்பப்பட்டு ஓடிவந்தும் கடைசியில் அவனைக் காணாமலே போய்விடப்போகிறேனோ?' என்றெண்ணித்துடித் தாள் அவள்.

சற்றுநேரத்தில் வேட்டொலிகள் அடங்கின. இருந்த போதிலும் சன்னங்களால் துளைக்கப்பட்டோரின் வேதனைக் குரல்கள் ஓயவில்லை. தானும், தாயும் பத்திரமாகத்தப்பி விட்டதை உணர்ந்து பெருமூச்சுவிட்டாலும், அடுத்து என்ன செய்வது என்ற திகைப்பு சுகந்தியை ஆட்கொண்டது.

'வருவது வரட்டும்' என்ற உறுதியுடன் கால்களை முன்னோக்கி நகர்த்த முயற்சித்தவேளை, இவ்வளவு நேரமும் அமைதியாகக் கிடந்த கடல் திடீரென உயிர்த்தது; போல அலையத்தொடங்கியது. கடற்காற்று வேகம் பிடித்துச் சுழன்று ஊவென்று உளறியது. சுகந்திக்கு இருட்டினூடு எதுவும் தெரியவில்லை. இதயம் எகிறிக் குதிப்பதை உணர்ந்தாள். இரண்டொரு தடவை அலைகள் அவளது தலையை மேவின. கரையிலே தெரிந்த ஒளிப்புள்ளிகள் அவளுடைய கண்களை விட்டு மறைந்துவிட்டன.

குப்பென்று பொங்கிய பேரலையொன்றின் தள்ளு விசையின் முன் தாக்குப்பிடிக்க முடியாமல் சுகந்தியின் கைப்பிடி நழுவியது. தொடர்ந்து நடப்பதை உணரு முன்பே பந்தாகச் சுருட்டப்பட்டு ஆழ்கடல் நோக்கி இழுத்துச் செல்லப் பட்டாள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற குண்டு வெடிப்பொன்றில் அகப்பட்டு சபேசன் இறந்து போனதை சுகந்தி அறிய நியாயமில்லை. எனினும், அவனுடன் இணைய வேண்டும் என அவள் விரும்பியது நிறைவேறி விட்டது.

○ சஞ்சீவி 03.04.99

# 12

# சந்தேகம்

வானம் மங்கிப்போய்க் கிடந்தது. வடகோடிப் பனங் கூடலுக்கூடாகத் திரண்டு வெளிக்கிளம்பிய கருமேகக் கூட்டங்கள் பொழியப்போகும் பெருமழைக்கான அறிமுகவுரையினை எழுதத்தொடங்கின. இதனை ஒப்புக் கொள்ளுமாப்போல ஒன்றிரண்டு காகங்கள் தாழப்பறந்தன. இலேசான சில்லிடலுடன் வீசிய காற்று கழுத்தின் பக்கப் புறங்களைத் தடவிக்கொண்டு போனபோது சுயநினைவுக்கு வந்தேன்.

நான் கொஞ்சநாள்களாக இப்படிப்பட்ட அநாவசியமான சிந்தனைகளுக்குள் மூழ்கி என்னையே மறந்து விடுகிறேன்.

ஏன் இப்படி? எனக்கு என்ன நேர்ந்தது.?

ஒருவேளை.... எனது வயிற்றினுள்ளே வளர்ந்து இவ்வுலகை எட்டிப்பார்க்கத் துடித்துக்கொண்டிருக்கும் அந்த உயிரைப் பற்றிய கவலையா?

அப்படிச் சொல்வதற்கில்லை. இருப்பினும், ஏதோ ஒருவித ஏக்கம், எதிர்பார்ப்பு என்மனதை வாட்டுகிறதே! தாய் மையின் தேடல் அதுவாக இருக்குமா?

“என்ன றோட்டிலை நிண்டு கடும் யோசனை? ஆரைப் பாத்துக்கொண்டு நிக்கிறீர்?”

துணுக்குற்று நிமிர்ந்தேன். வாசல் நிலைப்படியுடன் சாய்ந்தபடி என் கணவர் நின்றிருந்தார். அவருடைய கேள்வி யிலும், பார்வையிலும் தொக்கி நின்ற இன்னொரு கேள்வி என்னை வேதனைப்படுத்தியது.

“என்ன தேவகி? கேட்டது காதிலை விழேல்லையே? ஆரை எதிர்பார்த்துக்கொண்டு நிக்கிறீர்?”

"இல்லை.. மழை வரப்போகுது. அதுதான்.." இழுத்தேன்.

"நிண்டு மினைக்கெட்டாப்போல மழை வராமல் விடப் போகுதே? ஒருவேளை.. ரவியைப்பாத்துக்கொண்டு நிக்கிறீரோ?"

நான் எரித்து விடுவதுபோல நிமிர்ந்து பார்த்தேன். அவரது முகத்திலே ஒருவிதமான நக்கற்சிரிப்பு இழையோடியது. தொடர்ந்து அங்கு நிற்கப்பிடிக்காமல் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

ஒருவரின் ஏதாவது ஓர் இயல்பிலே வெறுப்பு ஏற்பட்டால் அவருடைய அத்தனை செயல்களும் விருப்பத்துக்குரியனவாக அமையாமற்போவது சிலரைப் பொறுத்தவரை உண்மைதானே! என்கணவர் என்னை நேசித்த ஆரம்ப காலங்களில் மெலிந்து அழகாக இருந்த நான், இப்போது தாய்மைப் பேற்றினைப்பெற்றதால் கொஞ்சம் அதிகமாகவே ஊதிவிட்டேன். இது அவருக்குப் பிடிக்கவில்லை. இதனை மனதிலே வைத்து, எல்லாவிதத்திலும் என்மீது குறை கண்டுபிடிப்பதையே தனது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார்.

அவர் கச்சேரியிலே கணக்காளர். நான் நகரப் பாடசாலையொன்றிலே ஆசிரியையாக இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் எனது கல்லூரியைக் கடந்தே அவர் செல்வார். திருமணமான புதிதில் என்னைத் தனது ஸ்கூட்டரில் ஏற்றிச் செல்லும் அவர் இப்போது அவ்வாறு செய்வதில்லை. காரணத்தை நான் கேட்கவுமில்லை. கேட்கப்போனால் அதுவே பெரியபிரச்சினைக்கு வழிகோலிவிடும் என்று எனக்குத்தெரியும்.

ரவி எனது கல்லூரியிலே கற்பிக்கும் சக ஆசிரியர். திருமணமாகி மூன்று பிள்ளைகளும் அவருக்குண்டு. சில வேளைகளில் பேச்சுத் துணைக்காக சைக்கிளில் அருகருகாக வருவோம். இப்படித்தான் ஒரு நாள், இருவரும் சேர்ந்து வருவதை என்கணவர் கண்டுவிட்டார். அன்று தொடங்கிய சண்டை இன்றுவரை ஓயவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் வாயைத்திறப்பதில்லை. அப்படியிருப்பது அவரது சந்தேகத்தை நான் ஒப்புக்கொண்டதாக அமையும் என அறிந்தபோதும், வீண் சச்சரவுகளைத் தவிர்க்க விரும்பியே. மௌனத்தைக் கடைப்பிடிப்பேன். எதற்காக என்மீது சந்தேகப் படுகிறார் என்றெண்ணி வருந்துவேன். அவருக்குப் பிடித்த அத்தனையையும் செய்கிறேன். அப்படிச் செய்வதை நான்

ஒருபோதும் குறைவாக எண்ணியதில்லை. இதைவிட வேறென்ன வேண்டும்?

சந்தேகம் என்பது நெருப்புப்போன்றது. மூளத்தொடங்கி விட்டால் உள்மனதை அணுவணுவாக எரித்து இறுதியில் பெருங்குழப்பத்தையே ஏற்படுத்திவிடும்.

பொலபொலவென்று கொட்டத் தொடங்கிய மழையின் தாக்கம், சிந்தனையுடன் சைக்கிள் உழக்கிய என்னை இவ்வுலகுக்குக்கொண்டு வந்தது. என்னிடமுள்ள சின்னக்குடை சுழன்றடிக்கும் பெருமழைக்கு முன் எம்மாத்திரம்? ஒதுங்கி நின்றபின் போகலாம் என்றால், விரைவாக நகரும் மணிக்கூட்டின் முட்களை இழுத்துப்பிடிக்க என்னால் இயலாதே!

நன்கு நனைந்தபடி கல்லூரியை வந்தடைந்தேன். ஒப்பமிட்டுவிட்டு எனது வகுப்பை நோக்கி நடந்தபோது ராஜினி எதிர்ப்பட்டாள். அவள் என்னுடன் கற்பிக்கும் ஆசிரியை, எனது நெடுங்கால நண்பியும் கூட.

“என்னடி தேவகி! இப்படி நனைஞ்சு போய் வாறாய்?” எனது தலையைத் தொட்டுப்பார்த்துக்கொண்டு கேட்டாள்.

“மழை வருமெண்டு எதிர்பாக்கேல்லை அதுதான்...” சமாளித்தேன்.

“எண்டாலும் பிள்ளையைச் சுமக்கிறாய் இப்படிக் கண்டபடி நனையக்கூடாது. கேக்கிறன் எண்டு குறை நினைக் காதையடி. உன்ர அவர் ஸ்கூட்டரிலை போறவர்தானே! வெள்ளெணக் கொண்டுவந்து விட்டிருக்கலாமே!”

இதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? எம் இரு வருக்குமிடையேயுள்ள பிரச்சினைகளை மூன்றாம் நபருக்குச் சொல்வது அவ்வளவு அழகல்லவே! ஒருவருக்காக இன்னொரு வர் செய்யும் நல்ல காரியங்களை வெளியே சொல்லி மகிழ் வதில் நியாயம் இருக்கிறது. மனக்கசப்புக்களை விளம்பரப் படுத்துவது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குமே தவிர, குறைக்கப்போவதில்லை. பலர் இதனை உணர்ந்து கொள்ளாத தாலேதான் குடும்ப உறவுகள் குலைந்து போகின்றன.

"நான் லக்கியடி தேவகி. எனக்கு ரெண்டுபிள்ளையும் பிறந்து இப்ப மூண்டு வருஷமாகுது. அவா் இப்பவும் என்னிலை வலு அக்கறை. எல்லாத்துக்கும் குடுத்துவைச்சிருக்கவேணும்"

பெருகிவரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த என்னால் இயலவில்லை. அதிா்ச்சியுடன் என்னைப்பாா்த்தாள் ராஜினி.

"தேவகி ஸொறியடி. நானொரு விசரி! யோசனையில்லாமல் என்னவோ எல்லாம் கதைச்சுப்போட்டன். ஒண்டையும் மனதிலை வைச்சிருக்காதை. வா வந்து தலையைத் துடை. ஈரம் சுவறப்போகுது" என்றவாறு என்னை அழைத்துக்கொண்டு அறைக்குள்ளே போனாள்.

இடைவேளையின்போது கன்ரீனில் ரவியைச் சந்திக்க நேர்ந்தது. தேநீர் அருந்திக் கொண்டிருந்தவர் என்னைக் கண்டதும் ஆரவாரமாக வரவேற்றார் "வாங்கோ மிஸ். என்ன முகமெல்லாம் காய்ந்துபோய்க்கிடக்கு?" என்றவா் உள்ளே திரும்பி இன்னுமொரு தேநீருக்கு 'ஓடர்' கொடுத்தார். நான் அவசரமாக மறுத்தேன்.

"வேண்டாம் சோ். நான் ரீ குடிக்க வரேல்லை. உங்களிட்ட ஒரு முக்கிய விஷயம் கதைக்க வேண்டும்"

"என்ன விஷயம் மிஸ்?"

தயங்கினேன்.

'எவ்வாறு ஆரம்பிப்பது? என்னுடன் இவ்வளவு கலகலப்பாகப்பழகும் இவருடைய மனதை வேதனைப்படுத்துவதாக அமைந்துவிடுமோ?"

எனது தயக்கம் அவருடைய ஆவலை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

"பயப்படாமல் சொல்லுங்கோ. என்ன பிரச்சனை?"

"இல்லை சோ். நீங்கள் என்னைப் பிழையாக நினைக்கக்கூடாது. என்ர நிலைமையைப் புரிஞ்சுகொள்ளுங்கோ சோ்"

“விஷயத்தைச் சொல்லாமல்...” அவருடைய குரலில் இலேசான சலிப்புத்தென்பட்டது.

“சேர். நீங்கள் என்னோட சேர்ந்து சைக்கிளிலை வாறது அவ்வளவு நல்லது இல்லை” மெதுவாகச் சொன்னேன். திகைத்துப்போய் என்னைப் பார்த்தார் ரவி.

“ஏன் மிஸ். ஆராவது ஏதும் சொன்னவையே?”

“........................”

“நீங்கள் ஏன் சமூகத்தைப் பற்றி வீணாகக்கவலைப் படுகிறீங்கள்? நான் ஒரு பேச்சுத் துணைக்காகத்தானே கூட வாறன். படிப்பறிவில்லாத சனம் ஆயிரம் கதைக்கும். அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனா நீங்கள் .....”

“வேறையாராவது சொன்னா அதை ஒரு பொருட்டாவே எடுத்திருக்கமாட்டேன். சொன்னது என்ர அவர்!”

“ஓ...!” ரவியின் முகம் கறுத்தது. நான் தலையைக் குனிந்துகெண்டேன். எனது உள்ளம் ஓலமிட்டுப்புலம்பியது. ‘சே! எவ்வளவு வெட்கக்கேடான நிலை இது? இப்படி இன்னொருவன் முன் குடும்ப விடயங்களைச் சொல்லி அவமானப்படும் நிலைமை இனி வரவேண்டாம்.’

“சேர் தயவுசெய்து என்னைப் பிழையா நினைக்காதை யுங்கோ. நான்.. நான்... அவரோட அநாவசியமான சச்சரவு களைத் தவிர்க்கவே விரும்பிறன்”

“எனக்கு விளங்குது மிஸ். நான் இனி விலத்தி நடந்துகொள்ளுவன். மற்றவையின்ர பழிச்சொல்லுக்கு நாங்கள் பயப்பிடத்தேவையில்லையெண்டாலும், அதுக்கு இடம் கொடுக் காமல் நடந்துகொள்ளிறதுதான் புத்திசாலித்தனம்.” இவ்வாறு கூறிவிட்டு எழுந்து வெளியேறினார் ரவி. எனக்குச் சங்கடமாக இருந்தாலும் ஏதோ ஒருவித நிம்மதி நெஞ்சிலே பரவுவதுபோல உணர்ந்தேன். தேநீர் ஒன்றை வாங்கிக் குடித்துவிட்டு வகுப்பை நோக்கி நடந்தேன்.

மாலை, கல்லூரி விட்ட பின்பும் அதிபர் ஆசிரியர் களுக்கான கலந்துரையாடல் நீண்டு சென்று நான்கு மணியள வில் முடிவுக்கு வந்தது. இவ்வாறான கூட்டங்களில் தேவை யற்ற விடயங்களைப் பேசுவதைத் தவிர்த்தால் நேரம் மீதமாகு மேயென்று நான் கவலைப்படுவதுண்டு. இதையெல்லாம் யார் சிந்திக்கிறார்கள்?

வீதிக்கு வந்து சைக்கிளில் ஏறியபோது, ரவி முன்னரே சென்றுவிட்டதை உணரமுடிந்தது. ராஜினியின் கணவன் சைக்கிளுடன் வீதியோரம் காத்து நிற்பதும் தெரிந் தது. இனம் புரியாத வேதனை நெஞ்சைப் பிசைய, வேகமாக உழக்கத்தொடங்கினேன்.

கோண்டாவில் சந்தி "சென்றி' நெருங்கியது. இறங்கு வதற்கு நான்பட்ட சிரமத்தைப் பார்த்த அவன் சோதனை யிடாமலே என்னைப் போகச்சொன்னான். மிதியிலே காலைத் தூக்கி வைத்தவேளை, பழக்கமான ஸ்கூட்டரின் ஒலி பின்புறம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன்.

என்கணவர்! கூடவே ஒரு பெண்!

அவளுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். அவர் என்னைக் கண்டதும் திடுக்கிட்டாற்போல நின்றார். அந்தப் பெண் பயந்ததுபோல விழிகளை அங்குமிங்கும் வீசினாள். நான் எதுவும் பேசாமல் சைக்கிளை எடுத்தேன்.

வீட்டுக்கு வந்ததும் உடை மாற்றி முகம் கழுவினேன். தேநீர் ஊற்றுவதற்காகத் தண்ணீரைக் கொதிக்க வைத்தபின், இரவு உணவுக்கான ஆயத்தங்களில் ஈடுபடத்தொடங்கினேன்.

அரைமணி நேரத்தின்பின் ஸ்கூட்டரின் ஓசை கேட்டது. வந்தவர் சற்றுப் பொறுத்துச் சமையலறைக்கு வந்தார். நான் தேநீரை நீட்டியதும் வாங்கிக்கொண்டு அருகிலிருந்த கதிரை யில் அமர்ந்தார். எதுவும் பேசாததிலிருந்து அவர் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். ஏதாவது பேசுவேன் என எதிர்பார்க்கிறாரோ?

இந்த மௌனம் என்பது இருக்கிறதே! அது மிகப் பொல்லாதது. சக்தி மிக்கது. மௌனம் நிலவுகின்றபோது எதிராளியின் மனப்போக்கே பெரும்பாலும் மாறிவிடும். இதனால் அது சாதிக்கின்ற வெற்றிகள் ஏராளம்.

தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு இலேசாகச் செருமினார் அவர்.

"தேவகி. அந்தப்பிள்ளை என்னோட வேலைசெய்யுது. ஐசியை துலைச்சுப்போட்டுது. ஊரெழுவிலை வீடு. இருட்டிற நேரம். பாவம். அதுதான்...."

"அதுக்கென்ன? "குரலில் எந்தவித உணர்ச்சிகளுமில்லாமல் அடுப்பினுள் விறகைத் தள்ளினேன்.

நெருப்பு மூளவில்லை.

"என்னிலை சந்தேகப்படாதையும் தேவகி"

நான் சட்டென்று நிமிர்ந்து அவருடைய விழிகளை ஊடுருவிப்பார்த்தேன். எனது பார்வையின் கூர்மையைத் தாங்க முடியாமல் தலைகுனிந்தார்.

"நான் அதைப் பிழையா நினைக்கேலையே!"

"தே..வ..கி!" அவரது குரல் இடறியது.

'யாரோ ஒரு பெண்ணுக்காக இவ்வளவு கவலைப்படுகிறீர்களே! ஆறுமாதக் குழந்தையையும் சுமந்துகொண்டு இவ்வளவு தூரம் சைக்கிள் ஓடுகிறேனே! நான் பாவமில்லையா? ஊதி பருத்துவிட்டதற்காக ஏற்றிச்செல்ல வெட்கப்படும் நீங்கள் எதைப்பாத்து என்னை நேசித்தீர்கள்?'

எனது மனம் ஊமையாக அழுதது.

அவர் மௌனமாக என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய விழகள் இலேசாக கலங்கியிருப்பதிலிருந்து உள்ளே வேதனைப்படுகிறார் என்பது புரிந்தது.

சந்தோஷமான இல்வாழ்க்கைக்கு சந்தேகத்தின் சாயல் சற்றும் அணுகாத மனம்வேண்டும் என்னும் உண்மையை அனுபவத்திலே உணர்ந்து விட்டதால், இனி எக்காலத்திலும் என்மீது சந்தேகப்படமாட்டார் என்பதை நினைத்து மெல்ல அவரைப்பார்த்துப் புன்னகைத்தேன்.

○ சஞ்சீவி 24.04.99

# 13

# தகுதி

காலைப் பிரார்த்தனை தொடங்குவதற்கு இன்னமும் அரைமணி நேரம் இருந்தது. நித்திய கல்யாணிப் பூக்கள் சிந்திக்கிடப்பதைப்போல அங்கொன்றும் இங்கொன்று மாகப் பளிச்சிட்ட மாணவர்களைப் பார்த்தபடி தனது அறை யின் முன் நின்றிருந்த அதிபர் சிவநாதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பக்கத்திலே நடுங்கியபடி நின்ற உப அதிபர் கந்தசாமியைத் திரும்பி முறைப்பதும், பின்னர் மீண்டும் நுழை வாயிலைப் பார்ப்பதுமாக, அந்தரப்பட்டுக்கொண்டிருந்தார். சற்று முன்னர் ஏழாம் ஆண்டு மாணவன் தவராசா கூறிவிட்டுப்போன வார்த்தைகள் அவரது காதுகளிலே திரும்பத்திரும்ப மோதிய படியிருந்தமையே இந்தப் பதற்றத்துக்குக் காரணம்.

அந்தப் பாடசாலை க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்களைக் கொண்டது. அந்த ஊரில் உள்ள ஒரே ஒரு பெரிய கல்விக்கூடம் அது ஒன்றுதான். அதிபர் பதவிக்கான நிர்வாக சேவைத்தரம் இல்லாதபோதிலும், சிவநாதன் கடந்த இரண்டாண்டுகளாகப் பதவி வகித்துவருகின்றார். பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படும் தகுதிச்சான்றிதழ் நிர்வாகத்திறமை இருப்பவர்களுக்குத் தேவையில்லை என அடிக்கடி கூறிக் கொள்வதன் மூலம் தனது தகுதியின்மையை மறைத்துக் கொள்ளும் வாய்வல்லமை அவருக்கு இருந்தது. கடந்த வருடம் வரை உப அதிபராகப் பணிபுரிந்த கணபதிப்பிள்ளை ஆசிரியர் இவரது தகுதியின்மையை இடையிடையே சுட்டிக் காட்டியதைப் பொறுக்கமுடியாமல் பலவழிகளிலும் அவருக்குத் தொல்லை கொடுத்து ஓய்வுபெற வைத்ததெல்லாம் ஆறிப் போன பழங்கதை. அதன் பின்னர் தனக்கேற்றவரான கந்தசாமி மாஸ்ரரை உப அதிபராக நியமித்துத் திருப்திப்பட்டுக் கொண்டார் அதிபர்.

எந்தவொரு பாடசாலையைப் பொறுத்தவரையும் நல்ல விடயங்களில் அதிபருக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பு அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதே உண்மை. எனினும்

அதிபர் தனது சுய இலாபங்களுக்கான ஒத்துழைப்பினை ஏனைய ஆசிரியர்களிடம் எதிர்பார்ப்பாராயின், அது பாடசாலையை மிகவும் பின்தங்கிய நிலைக்கே இட்டுச் செல்லும். சில பாடசாலைகள் பெயரளவில் மட்டும் பெருமைகளை தாங்கி நிற்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

கந்தசாமி மாஸ்ரர் மன்னனுக்கேற்ற மந்திரி போலச் சகல வழிகளிலும் அதிபருக்குக் கைகொடுத்து வந்ததால் ஏற்பட்ட தைரியம், ஏனைய ஆசிரியர்களை ஒரு பொருட்டாக மதிக்காத தன்மையை அவருக்கு வழங்கியிருந்தது. மாணவர்களிடமும் மிகுந்த கண்டிப்புடன் நடந்துகொள்வார். அதுவே இன்றைய பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துவிட்டது

நேற்றுக்காலை தவராசா ஏதோ குழப்படி செய்துவிட்டான் என்பதற்காக கையிலே கிடந்த சட்டத்தினால் விளாசித் தள்ளிவிட்டார் கந்தசாமி மாஸ்ரர். அதன் பலன் தவராசாவின் தந்தை இராசன் அதிபரைச் சந்திக்க வருவதாக மகனிடம் கூறியனுப்பியிருக்கிறான்.

"சேர். எதுக்கும் உள்ளுக்கபோவம். இதிலை ஏதாவது நடந்தா மரியாதையில்லை" பயந்த குரலில் அதிபரை உள்ளே அழைத்தார் கந்தசாமி மாஸ்ரர். அவருடைய அழைப்பினை ஏற்க மறுக்கும் எண்ணம் அதிபருக்கில்லை. அறையினுள் நுழைந்து தனது இருக்கையில் அமர்ந்தார். கந்தசாமி மாஸ்ரர் எதிராக உட்கார்ந்துகொண்டார்.

"நீர் சொன்னமாதிரி வாறவன் அவ்வளவு பொல்லாதவனோ? "மனக்கலக்கத்தினை வெளிக்காட்டாமல் அதிபர் கேட்டார்.

"ஓம் சேர். எனக்கு ராசனை நல்லாத்தெரியும். ஆள் வெட்டுக்கொத்திலை பேர்போனவன். நாலைஞ்சு களவுகளிலையும் பிடிபட்டு பங்கருக்க இருந்தவன். எந்த நேரமும் உச்சத்திலைதான் நிப்பான்"

கந்தசாமி மாஸ்ரரின் குரலில் நடுக்கம் தொற்றியது.

அவசரப்பட்டிட்டீர்....! எண்டாலும் நீர் உந்தமாதிரி மோட்டுத்தனமா அடிச்சிருக்கக்கூடாது காணும்."

"சேர் நீங்களொண்டு! வீணா என்ர வயித்தெரிச்சலைக் கிளப்பிறியள். அவன் பாவி என்ன சொன்னான் தெரியுமே?"

கந்தசாமி மாஸ்ரர் தனது தலையை ஒருமுறை தடவிக்கொண்டார். பிறகு ஓரிரு கணநேரத் தயக்கத்துக்குப்பின் கூறினார்.

"என்னை மொட்டை எண்டு சொல்லுறான்....."

இதைக்கேட்டதும் அதிபர் சிவநாதனால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. சத்தம்போட்டுச் சிரித்தார்.

"சேர் சிரிக்காதையுங்கோ. எனக்குவாற ஆத்திரத் திற்கு....! நான் இருக்கிற கொஞ்ச மயிரை வைச்சு எப்படி யெல்லாம் சமாளிச்சு இழுக்கிறன்!"

மனம்தான் எவ்வளவு விசித்திரமானது! ஒன்று இல்லாதபோது அதற்காக ஏங்குவதும், இருக்கும்போது சற்றேனும் சிந்திக்காததும், இழக்கும்போது மட்டும் கவலைப் படுவதும் அதனுடைய வியப்பான பண்புகள். ஆசிரியன் - மாணவன் என்ற பிணைப்பு முறை பின் தள்ளப்பட்டு கந்தசாமி மாஸ்ரரிடம் ஆழமாகப் புதைந்து கிடந்த தாழ்வு மனப்பான்மை வெளிப்பட்டு நின்றமை இதையே உணர்த்துகின்றது.

திடீரென்று வாசலிலே பலத்த ஆரவாரம் கேட்டது. தொடர்ந்து ஒலித்த உரத்த குரலைக்கேட்டதும் கந்தசாமி மாஸ்ரர் ஆடிப்போனார்.

"..........ஆரவன் கந்தசாமி எண்டவன்?"

வார்த்தைகளைத் தொடர்ந்து கசிப்பின் வாசம் அறைக் குள்ளே குப்பென்று பொங்கிப்பரவியது. நுழைந்தவன் கையிலே வைத்திருந்த கத்தியை இருமுறை அசைத்துக் காட்டினான். கந்தசாமி மாஸ்ரருக்கு 'குலைப்பன்' அடிக்கத் தொடங்க, அதிபரின் பின்னே பாய்ந்து பதுங்கினார். வந்தவன் இதை அவதானித்துவிட்டு இரண்டெட்டில் அவரை நெருங் கினான். அதிபர் தன்னை சுதாகரித்துக்கொண்டு எட்டித் தடுத்தார்.

"கொஞ்சம் பொறுங்கோ ஐயா! இப்ப ஏன் கோபிக் கிறியள்? உந்தக் கதிரையிலை நிதானமா இருங்கோ"

அதிபரின் மரியாதை நிறைந்த இந்த வார்த்தைகள் வந்த நபரைக் குளிர வைத்திருக்க வேண்டும். கப்பென்று அடங்கினான்.

"இப்ப... என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோவன்" அதிபர் இதமாக வினாவினார்.

"ஐயா, நீங்களே கேளுங்கோ. இந்தாள் நேற்று என்ர மேனை ரத்தம்கொட்ட அடிச்சிருக்கிது. இப்பிடி அடிக்கிறதுக்கு அவரே பெத்து வளத்தவராம்? ஆ? "

தன்னுடைய அணுகுமுறை வெற்றியளித்ததையிட்டு உள்ளூரச் சந்தோஷப்பட்ட அதிபர் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொல்லத் தொடங்கினார்.

"இஞ்சை பாருங்கோ ஐயா. பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிறது பாடம் படிக்க மட்டுமில்லை. நல்ல பண்பைப் பெறுகிறதுக்கும்தான். நிறையப்படிச்சும் பண்பில்லா மல் நடந்தா அதால ஒரு பிரயோசனமும் இல்லை. உங்கட மகன் நாளைக்கு நல்லவனா வந்தா உங்களுக்கு மட்டு மில்லை, பள்ளிக்கூடத்துக்கும் தான் பெருமை."

இராசன் சற்றுநேரம் மௌனமாக இருந்தான். பிறகு மெதுவாகக்கூறினான். "ஐயா. நான் படிப்பறிவில்லாத மொக் கன். எனக்கு ஒரு மயிர்மட்டையும் விளங்கேல்லை. தேவை யில்லாமல் குடிச்சுக்கூத்தாடிப் போட்டன். அப்படியிருந்தும் என்னையும் ஒரு மனிசனா மதிச்சு ஐயா எண்டு சொல்லு நீங்கள். என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ ஐயா. உங்களை மாதிரி ஒருத்தரை நான் பாக்கேல்லை..."

"அதுதான் பண்பு. நான் படிச்ச படிப்பின்ர வெளிப்பாடு. நீங்கள் போட்டுவாங்கோ" என்று அவனுக்கு விடைகொடுத்தார் அதிபர்.

இராசன் கும்பிட்டுவிட்டுத் திரும்பி நடந்தான். கந்தசாமி மாஸ்ரர் பிரமை பிடித்துப்போய் நின்றார். தனது உடலில் ஒன்றிரண்டு வெட்டுக்காயங்களாவது ஏற்படும் என எதிர் பார்த்தவருக்கு நடந்ததெல்லாம் கனவுபோலிருந்தது. சில நிமி டங்கள் நிலவிய மௌனத்தை அதிபரின் சிரிப்புக்கலைத்தது.

"கந்தசாமியர் என்ன திகைச்சுப்போய் நிக்கிறீர்?"

"இல்லை சேர். நான் என்னவோ எதிர்பார்த்தன். ஆனா நடந்தது..? "

கந்தசாமி மாஸ்ரரின் குரலில் நம்பாத்தன்மை தென்பட்டது.

"அதுதான் என்ர திறமை. இப்படியான நேரங்களிலை இப்படித்தான் நடக்கவேணும். சரி இனி அதைப்பற்றி யோசிக்காமல் இப்ப பிரேயருக்குப் போவம்" என்றவாறு எழுந்து நடந்தார் அதிபர்.

இடைவேளைக்குப் பின்னர் மேசையிலே கிடந்த அலுவலகக் கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்த அதிபர், ஒரு கடிதத்தைப்படித்ததும் அதிர்ந்துபோனார். தலை கிறுகிறுவென்று சுற்றத்தொடங்கியது. உடனடியாக வருமாறு கந்தசாமி மாஸ்ரரைக் கூப்பிட்டனுப்பினார்.

சற்றுநேரம் கழித்து உள்ளே நுழைந்த கந்தசாமி மாஸ்ரர் அதிபர் சிவநாதனின் நிலைமையைப் பார்த்ததும் பதறினார்.

"என்ன சேர் பேயறைஞ்ச மாதிரி இருக்கிறீங்கள்? அந்தக் கணக்கு வழக்கை ஒரு மாதிரிச் சரிப்பண்ணிப் போட்டன்தானே!"

குழப்பத்தினைப் போக்கும் உத்தேசத்தில் அவர்கூறிய வார்த்தைகள் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டுவிடவே சீறிப் பாய்ந்தார். அதிபர்.

"நீர் ஒண்டு. இந்தாரும் இதைப்படிச்சுப்பாரும். அப்ப விளங்கும்" அதிபர் நீட்டிய கடிதத்தை ஒன்றும் புரியாமல் வாங்கினார் கந்தசாமி மாஸ்ரர்.

'..... இந்த நிருபத்தின்படி அதிபர் பதவிக்கான கல்வி நிர்வாக சேவைத்தகுதி இல்லாத தாங்கள்...... திகதியிலிருந்து .......... பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றப்படுகிறீர்கள் என்பதை அறியத்தருகின்றேன்' என்று கல்விப்பணிப்பாளரின் ஒப்பத்துடன் கடிதம் முடிந்திருந்தது.

"சேர் இதென்ன இப்பிடி அனுப்பியிருக்கிறாங்கள்? "

"எனக்கு ஒரு கோதாரியும் விளங்குதில்லை கந்தசாமி. கிரேட் இல்லாமல் எத்தினை பிரின்சிப்பல்மார் இருக்கினம். இவங்கள்தான் புதுசா ஒண்டைக் கண்டுபிடிச்சிருக்கிறாங்கள்"

"ஆரும் அண்டிவிட்டிருப்பினமோ? உவர்.... கணபதிப் பிள்ளை சேர்..."

மெதுவாக இழுத்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"இருக்கும். அந்த ராஸ்கலின்ர வேலைதான் இது. அவன் டீ.ஈ. இன்ர வால்தானே! அவன்தான் அள்ளி வைச்சிருப்பான்." ஆத்திரத்திலே பல்லைக்கடித்த அதிபர் கதிரையைத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

"கந்தசாமியர். வெளிக்கிடும் டீ.ஈ.யிட்ட. இண்டைக்கு ரெண்டிலை ஒண்டு பாத்திட்டுத்தான் மற்றவேலை".

"சேர் ரெண்டு பேரும் வெளிக்கிட்டா பள்ளிக்கூடத்தை ஆர் பாக்கிறது?"

"மிஸ் இராசநாயகம் பார்க்கட்டும்" என்றவர், அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டபின் புறப்பட்டார். கந்தசாமி மாஸ்ரர் சிரிப்புடன் பின்தொடர்ந்தார்.

தற்காலிக நியமனத்திலுள்ள அனுபவமில்லாத ஆசிரியையான மிஸ் இராசநாயகத்தினால் பாடசாலையை நிர்வகிப்பது சாத்தியமாகுமா என்பது பற்றி அதிபர் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

புகை கக்கிக்கொண்டு புறப்பட்ட மோட்டார் சைக்கிள் கச்சேரி நல்லூர் வீதியில் ஏறியது. பள்ளங்களில் அடிக்கொரு தடவை விழுந்தெழும்பியதால் அவதிப்பட்ட கந்தசாமி மாஸ்ரர் முணுமுணுத்தார்.

"உவங்கள் குச்சொழுங்கைகளையும் ஒழுங்கான றோட்டுக்களையும் தாரைக்கொட்டி நிரப்புவாங்கள். பழுதாப் போன றோட்டுகளைத் திரும்பியும் பாராங்கள். இஞ்சை நாரி சந்தெல்லாம் விட்டுப்போகுது."

"கந்தசாமியர் இப்ப ஏன் புறுபுறுக்கிறீர்? கல்லுக் கொட்டி வைச்சிருக்கிறாங்கள் தானே! கெதியிலை றோட்டுப் போடுப்படும் பாருமன்..."

அதிபர் கூறியதைக் கேட்டு முகம் சுழித்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"ஓமோம் கட்டாயம் செய்வாங்கள். அதுசரி சேர்... இப்பத்தை டீ.ஈ. ஒருமாதிரி. ஆள் கட் அன் ரைட் கண்டியளோ. உங்கட கதை எடுபடாது."

"எடுபடாட்டி எடுபடப் பண்ணுவன். பல்லிமுட்டை இனிப்பிலையிருந்து பஜாஜ் வரைக்கும் நீட்டிப்பார்க்க வேண்டியது தான்." அதிபர் அலட்சியமாகக் கூறினார்.

மனித மனம் பலவீனமானதுதான். எனினும், எதையும் சரிவரச்செய்ய வேண்டும் என்ற உறுதியை மனதிலே கொண்டு துணிச்சலுடன் செயற்படும்போது பிற அழுத்தங்கள் சிதறிப் போகின்றன. இதையும் அவர் உணரவில்லை.

மோட்டார் சைக்கிள் கிட்டுபூங்காவின் பக்கமாகச் சென்றபோது திடீரென்று காதுக்குள்ளே கிசுகிசுத்தார் கந்தசாமி மாஸ்ரர்.

"சேர்! அங்க பாருங்கோ....!"

அவர் காட்டிய திசையிலே பார்த்த அதிபருக்கு அழல் பற்றியது. அங்கே கணபதிப்பிள்ளை மாஸ்ரர் பேரப்பிள்ளையையும் ஏற்றிக்கொண்டு தனது பழைய சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

"கணபதிப்பிள்ளை! எளிய வடுவா! நில்லடா.." என்று கத்தியபடி அவர் பக்கமாக மோட்டார் சைக்கிளைத் திருப்பினார் அதிபர். விரைந்து வந்த மோட்டார் சைக்கிள் கணபதிப்பிள்ளை மாஸ்ரரின் சைக்கிளைப் பக்கவாட்டாக மோதியது. சரிந்து விழுந்தார் கணபதிப்பிள்ளை மாஸ்ரர். வீதியோரக் கற்கள் முழந்தாள்களைத் தேய்க்கச் சறுக்கிய அவருடைய பேரப்பிள்ளை வீரிட்டுக் கத்தியது. பின்னே கட்டியிருந்த அரிசிப்பை உடைந்து சிதறியது. இடுப்பிலிருந்து நழுவிய வேட்டியை ஒரு கையால் இறுகப்பிடித்தபடி எழுவதற்கு முயற்சித்த கணபதிப்பிள்ளை மாஸ்ரர், பாய்ந்து குதித்த அதிபர் நெஞ்சிலே ஏறி மிதிக்கவே அப்படியே மல்லாந்து சரிந்தார்.

அயலில் நின்றவர்கள் தடுப்பதற்குள் இவ்வளவும் நடந்தேறிவிட்டன. மாணவர்களை நெறிப்படுத்த வேண்டிய அதிபர் மனிதத்தையே தொலைத்துவிட்டு மிருகம் போல நிற்பதை வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு போனார்கள்.

கல்வித்தகுதியால் விளைகின்ற பண்பு அங்கே கவிழ்ந்து கிடந்தது.

○ சஞ்சீவி 29.05.99

# 14

# உணர்வுகள்

நீலவானம் பரந்துவிரிந்து சிவப்பைப் பூசியபடி மேற்குப்பக் கமாகச் சொருகிக்கிடந்தது. ஒன்றிரண்டு மேகக் கூட்டங்கள் சோடிசோடியாக நகர்ந்து கொண்டிருந்தன. சுழன்றடித்து வீசிய சோளக்காற்று சொக்கிப் போயிருந்ததால் மேகங்களின் வேகங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

வசந்தகாலத்தின் விளைவினை உணர்த்துவதுபோல நன்கு சடைத்துக் கிளைத்திருந்த வேப்பமரத்தினடியிலே கதிரையில் படுத்திருந்த எனக்கு, இந்த வானத்தையும் கேற்றினூடாகத் தெரியும் நீண்ட வீதியையும் பார்ப்பதைத்தவிர வேறென்ன பொழுதுபோக்கு?

ஒன்றையே மீண்டும் மீண்டும் பார்ப்பதனால் மனித மனம் சலிப்படைந்துவிடுவது இயற்கைதானே! எனினும், பார்க் கப்படும் பொருளை மாற்றாமல் பார்வையிலே புதுமைகளைப் புகுத்துபவர்களுக்கு எதுவும் என்றைக்கும் பழகிப் போனதாகத் தோன்றாது.

பாரிசவாதம் வந்து கைகால் வழங்காமல் இந்தக்கதி ரையும் அந்தக் கட்டிலும் எனக் கடந்த பத்து ஆண்டுகளாகப் படுத்துக்கிடக்கும் எனது நிலையைப்பற்றிச் சொல்லத் தேவை யில்லை.

ஓய்வு என்பது உடலுக்கு அவசியமானாலும், தொடர்ச் சியான ஓய்வு மனத்தைத் தன்பாட்டில் இயங்க வைத்துவிடும். உடல் ஓய்வெடுக்கும்போது மனம் அலைபாயத் தொடங்கி, ஆனந்தத்தையும் வேதனையையும் மாறிமாறி அனுபவித்துக் கொள்கிறது. இதிலிருந்து தெளிவடைவதென்பது எவருக்கும் கைகூடாத ஒன்று.

என் கணவர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று சரியாகப் பதினைந்து ஆண்டுகள் நிறைந்துவிட்டன. நான்

இயலாமல் முடங்கியது போல அவர் என்றைக்கும் தளர்ந்தது கிடையாது.

நாற்பது வருடத் திருமண வாழ்வென்பது ஒரு சாதனை யாகக் கொள்ளப்படவேண்டியது. அந்தச்சாதனையை நிகழ்த் திய பெருமை எங்கள் இருவருக்குமுண்டு. திருமணம் என்பது சந்தோஷப்படவும், சந்ததியைப் பெருக்கவும் மட்டுமே ஏற்படுத் தப்பட்டது என்ற கருத்து நிலவுகின்றவேளையிலே, அவற்றை விடவும் எவ்வளவோ உண்டு என நிருபித்தவர்கள் நாங்கள். மகிழ்வான சந்தர்ப்பங்களில் ஒன்றாக மகிழ்ந்து, துன்பப்பட்ட போதெல்லாம் சேர்ந்தே துடித்து........, ஒருவருக்குப் பிடிக்காத வற்றை மற்றவர் இயன்ற வரை செய்யாதிருந்து, பிடித்தவற்றை யெல்லாம் செய்ய முயற்சித்து...!

உண்மையான நேசிப்பின் வெளிப்பாடாக இவற்றை நாங்கள் கருதுவதாலேயே அவ்வாறிருக்க முடிகின்றது. இவ் வேளைகளில் எமது தனிப்பட்ட சுயகௌரவங்களையெல்லாம் மூடைகட்டி வைத்துவிடுவோம். உள்ளங்கள் ஒன்றான வேளை யில் அவையெல்லாம் எமக்கிடையில் எதற்கு என்ற பொது வான கொள்கை இருப்பதாலேயே அவ்வாறிருக்க முடிகின்றது. ஒருவரில் ஒருவர் வைத்திருக்கின்ற பூரண நம்பிக்கைதான் எங்கள் இல்லற வெற்றியின் இரகசியம் என்பதை இன்றும் நம்புகிறோம்.

இல்வாழ்க்கை ஒரு கலை என்று சொல்லுவார்கள். அதை ஆரம்பத்திலேயே கற்றுத்தேறியவர்களாக எவரும் இருப்பதில்லை. போகப்போகவே அது புரியத்தொடங்கும். புற அழகெல்லாம் அழிந்து, தனியே உள்ளங்களை நேசிக்கின்ற காலத்திலேதான் உண்மை அன்பென்றால் என்னவென்று உணர்கின்ற பக்குவம் முழுமையாக வந்தடையும். வாழ்ந்து அனுபவித்தவர்கள் விட்டுச்சென்ற தத்துவம் இது.

எங்களுக்கு விளைந்தவை இரண்டு ஆண்பிள்ளைகள். மூத்தவன் திருமணமாகி வெளிநாட்டில் இருக்கிறான். அடுத்தவன் பத்து வருடங்களுக்கு முன்பே எம்மைவிட்டுப் பிரிந்து போய்விட்டான். இப்போது அவன் வன்னியில் இருப்ப தாகக் கேள்வி. அவனுடைய பிரிவினால் உண்டான தாக்கம் இந்தப் போராட்டத்தின் மீது எனக்கு ஒருவித வெறுப்புணர்ச் சியையே ஏற்படுத்தியிருந்தது.

குடாநாட்டில் எங்காவது தாக்குதல் நடந்தால் என் மனம் திட்டித்தீர்க்கும்.. சமூக நிலையைக் குலைக்கிறார்களே என்றெண்ணி ஆத்திரப்படுவேன். என் கணவர் மட்டும் சந்தோஷப்படுவார். சிறுபிள்ளைபோலத் துள்ளிக் குதிப்பார். சம்பந்தப்பட்ட செய்தியை நாலைந்து தடவைகள் வாசித்துப்பார்ப்பது மட்டுமல்லாது வீம்புக்காக எனக்கும் காட்டுவார். அவ்வேளைகளில் இருவரும் கொஞ்சநேரம் வாக்குவாதப்படுவோம். பிறகு சமாதானமாகி விடுவோம்.

குடும்ப வாழ்விலே கருத்து முரண்பாடென்பது என்றைக்குமே வரக்கூடாது. இருவரில் ஒருவர் விட்டுக்கொடுப்பதே தீர்வு காண்பதற்கான சரியான வழியாகும் எந்த விடயமானாலும் விட்டுக்கொடுத்துவிடும் நான் இதில் மட்டும் சற்று முரண் படுவேன்.

இன்று மதியம்கூட அப்படித்தான்.

இதமான வெந்நீரில் குளிப்பாட்டியபின் இந்தக்கதிரையிலே என்னைப் படுக்க வைத்திருந்தார் என் கணவர். இனிமையான காற்றுவீசி என்னைச் சிலிர்க்க வைத்ததால் மனம் பொங்கி மலர்ந்திருந்தது. தலையை இலேசாகத் திருப்பி, சற்றுத்தள்ளி முன் விறாந்தையிலே அமர்ந்திருந்தவரைப் பார்த்தேன். என் உள்ளத்திலே காதல் நிரம்பியது. காதலுக்கு வயதில்லை என்றும் சொல்வார்கள். இந்த வயதிலும் எங்களால் ஒருவரையொருவர் ஆழமாக நேசிக்க முடிகிறதே! உணர்வுகள் ஒருபோதும் அழிவதில்லை என்பது உண்மை தானோ?

வெகு மும்முரமாகப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தவர் தற்செயலாக என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் மெல்ல முறுவலித்தேன்.

“என்ன கடுமையா யோசிக்கிறீர்? தலை இன்னும் காயேல்லையே?” அவருடைய குரலிலே பரிவு நிறைந்திருந்தது.

“அது காஞ்சிட்டுது...”

“அப்ப....?”

“சும்மா கிடந்து இழுபட்டு உங்களுக்கு கரைச்சல் தாறன். அதுதான் மனதுக்குச் சங்கடமாக கிடக்கு....”

இதைக்கேட்டதும் பத்திரிகையை வைத்துவிட்டு எழுந்து என்னை நோக்கி வந்தார். வந்தவர் எனக்கு அருகிலிருந்த கல்லில் உட்கார்ந்து கொண்டார். எனது விழிகளைக் கொஞ்சநேரம் ஊடுருவியபின் கேட்டார்.

"புனிதம்! தற்செயலாக நான் இப்பிடிக்கிடந்தா நீர் என்னைப் பாத்திருக்கமாட்டீரோ?"

"ஐயையோ! ஆர் சொன்னது அப்படி?" பதறிப்போய்க் கேட்டேன்.

"அப்ப உம்மைப் பராமரிக்கிறது எனக்குக் கஸ்ரம் எண்டு ஏன் சொல்லுறீர்?"

அவருடைய கரம் நரைத்துப்போயிருந்த எனது தலையை நடுக்கத்துடன் கோதியது. நிமிர்ந்து மெல்லத் தோளிலே தலையைச் சாய்த்துக்கொண்டேன்.

"இப்படியே செத்துப்போனாலும் பரவாயில்லைப் போல இருக்கு. உங்களுக்கு முதல் நான் போயிடவேணும். இயக்கத்துக்குப் போனவன் என்னைப் பாக்கவரான். கனடாவிலை இருக்கிற கழுதை எட்டியும் பாராது....."

"ஏன் புனிதம் அப்படிச் சொல்லுறீர்? நான் நடைப்பிணமாகத் திரிஞ்சு சாகவேணும் எண்டு விரும்பிறீரே?"

அவருடைய குரல் இடறியது. அதற்குமேல் என்னால் எதுவும் பேச இயலவில்லை. என்னுடைய தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. இருவருக்கிடையே நிலவிய மௌனத்திலேயே பொழுது கரைந்துகொண்டிருந்தது. சற்றுநேரம் பொறுத்துக் கேட்டேன்.

"எங்கட சின்னவன் வன்னியிலை இப்ப என்னப்பா செய்து கொண்டிருப்பான்?"

இதைக்கேட்டதும் என் கணவரின் குரலில் உற்சாகம் தொற்றியது.

"அவன் இப்ப பெரிய ஆள் எண்டு கேள்வி!"

"பெரிய ஆள்தான். இந்தப் பத்து வருசமா நான் நெஞ்சிடியிலை இருக்கிறது அவனுக்கெங்க தெரியப்போகுது?"

“அது கிடக்கட்டும். இண்டைக்குப் பேப்பரிலை பாத்தனீரே? நேற்று நீர்வேலியிலை வெடிச்சு நாலுபேர் சரி. எண்டாலும் உவங்கள் சுழியன்கள்தான்.!”

விருட்டென்று நிமிர்ந்தேன்.

“நல்லா வைச்சுப்போற்றுங்கோ. நீங்களும் உங்கட ஆக்களும்..” ஆத்திரத்தில் வெடித்தேன்.

“மகன் போட்டான் எண்ட கோபத்திலை நீர் உப்பிடிப் பேசிறீர். நாங்கள் போற்றாவிட்டாலும் பரவாயில்லை. பழிக்காமலாவது இருக்கவேணும் புனிதம்.”

அவர் எதைக் கூறினாலும் என்மனம் சமாதானமாக வில்லை.

‘இவர் என்ன இப்படிக் கல் நெஞ்சக்காரராக இருக்கிறாரே! மகனைப் பிரிந்த துயரம் கொஞ்சம்கூட இவரிடமிருப்பதாகத் தெரியவில்லையே!’

இவ்வாறு எண்ணி வேதனைப்பட்டேன். என்மகன் தானாகப் போனாலும் அவனை இணைத்துக் கொண்டவர்கள் மீதுதான் எனது கோபம் திரும்பியது.

அர்த்தமற்ற ஒன்றுக்காக அநியாயமாகப் போய்த் தொலைகிறார்களே! இவர்கள் ஏன் இப்படிப்பட்ட முடிவினை எடுக்கிறார்கள்? ”

என்னைத் தனியே யோசிக்க விடுவதுபோல அவர் எழுந்து தன்னிடத்துக்குப் பேனார்.

மதியம் நிகழ்ந்தவற்றைச் சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு அவர் அருகில் இல்லை என்பது உறுத்தியது. கடைப் பக்கம் போனவரை இன்னமும் காணவில்லை. ஒவ்வொரு தேவைக்கும் அவரையே தேடும் என்னால் இந்தச் சிறு பிரிவைக்கூடச் சகித்துக்கொள்ள முடியவில்லையே! எனது விழிகள் கேற்றடியை நோக்கிச் சலித்தன.

‘அரசியல் பேசுவதற்கு யாராவது அகப்பட்டிருப்பார்கள். நல்ல பிரசங்கம் வைத்துக்கொண்டிருப்பார்’ என எண்ணிச் சிரித்துக் கொண்டேன்.

திடீரென கேட்ட பெருத்த குண்டு வெடிப்பிலே என் சிரிப்புத் தொலைந்துபோனது. வேப்பமரம் ஒருமுறை அதிர்ந்து அடங்கியது. தொடர்ந்து படபடவென ஒலித்த வேட்டுக்கள் என்னைப் பொறிகலங்க வைத்தன.

'மிக அண்மையாகக் கேட்டதே! அவரும் அந்தப் பக்கம் தானே போனார். ஒருவேளை...! கடவுளே! அப்படி ஏதும் நடந்து விடக்கூடாது.'

நான் பல்வேறு விதமாகக்கற்பனை செய்து பயந்தேன். வெருண்டு பறக்கும் பறவைகளுக்குப் போட்டியாக வீதியில் ஆள்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். எனது மனக்கலக்கம் மேலும் அதிகரித்தது.

பொழுது மிகமெதுவாக நகர்ந்து என்னைக் கொல்லத் தொடங்கியது.

சற்றுநேரம் கழித்து கேற்றைத் திறந்து கொண்டு என் கணவர் தள்ளாடியபடி வந்தார். அவரிடம் ஓடிச்செல்ல மனம் துடித்தாலும் என்னால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அவர் என்னை அண்மித்ததும் அவருடைய நிலைமையைப் பார்த்துத் திடுக்கிட்டேன். உதடு கிழிந்து கடைவாயில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. உடைகள் கிழிந்திருந்தன. முகத்தில் இலேசான வீக்கம் எட்டிப்பார்த்தது.

வந்தவர் பொத்தென்று என்னருகே அமர்ந்தார். என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அவருடைய வாயில் வழிந்த இரத்தத்தை ஒருகையால் துடைத்தபடி அழத் தொடங்கினேன்.

"என்ன நடந்தது? "

அழுகையினூடு நான் கேட்ட கேள்விக்கு விடையளிக்க அவரால் முடியவில்லை. வார்த்தைகளை வெளியே விடச் சிரமப்பட்டவர், ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கூறினார்.

"கனகம்புளியடிச் சந்தியிலை குண்டெறிஞ்திருக்கிறாங்கள். ரெண்டு, மூண்டு பேர் பாட்டறிய விழுந்திட்டாங்கள். ஆத்திரத்திலை அம்பிட்ட சனத்துக்கெல்லாம் நெட்பிள் அடி. வயது போனவனெண்டும் பாராமல் அந்நீதம் விழுவார் கொட்டனாலை எனக்கு வெளுத்துப் போட்டாங்கள்!"

"ஆரன் எறிஞ்சதுக்கு உங்களை ஏனப்பா அடிச்ச வங்கள்?" ஆற்றாமல் கேட்டேன்.

"உதை ஆரிடைடைப் போய்ச் சொல்லுறது புனிதம்? சுப்பற்றை பெடியனை மயங்கி விழுகிற வரைக்கும் அடிச்சிருக் கிறாங்கள். அவன் பாவம். சாதுவான பெடி. ரியூசனுக்குப் போட்டு வந்த வழியிலை மாட்டுப்பட்டிட்டுது."

அடித்தவர்கள் மேல் எனக்கு எழுந்த அளவிடமுடியாத ஆத்திரத்தை வெளிக்காட்டாமல், நொந்துபோய் வந்திருக்கும் அவரைத் தேற்றத் தொடங்கினேன்.

என்றாலும் என் மனம் எரிந்து கொண்டிருந்தது.

'போராட்டங்களால் வன்முறைகள் உருவாகின்றனவா? அல்லது வன்முறைகள் போராட்டங்களை உருவாக்குகின் றனவா? இதை முடிவு செய்பவர்கள் யார்? இன்றைக்கு அடி வாங்கிய அத்தனை பேரின் உள்ளங்களும் அடித்தவர்களுக் கெதிராகத் திரும்பியிராது என்பது என்ன நிச்சயம்? அணுகு முறைகளின் வடிவங்கள் தாம் வெற்றிகளைத் தீர்மானிப்பவை. மிதமானபோக்கு விரைவான வெற்றியைப் பெற்றுத்தந்தாலும் அது நீண்ட காலம் நிலைப்பதில்லை என்பதே வரலாறு.'

இவ்வளவு காலமும் பிழையான ஒரு கருத்தை வைத்துக்கொண்டு வீணாக அவருடன் வாக்குவாதப்பட்டிருக் கிறேன் என்பதை எண்ணி வேதனைப்படத் தொடங்கினேன்

குண்டுச்சத்தத்தின் பின்னிருந்த அமைதியைக் குலைப் பது போலக் காற்று இன்னும் வேகம் பிடித்தது. வேப்பமரம் பேயாட்டமாடியது. அங்குமிங்கும் அலைப்புற்ற கொப்புக்கள் ஒன்றுடனொன்று மோதியதால் பழுத்த இலைகளுடன் பச்சை இலைகளும் உதிர்ந்தன.


எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் தனது வளர்ச்சியை மட்டும் நிறுத்திக் கொள்ளாத வேப்பமரம் என் விழிகளுக்கு வித்தியாசமாகத் தோன்றியது.

நிறைந்த கண்ணீரோடு நிமிர்ந்து பார்த்தேன்.

உறங்கிக்கிடந்த என் உள்ளத்து உணர்வுகள் மெல்ல மெல்ல உருப்பெறத் தொடங்கின.

○ சஞ்சீவி 24.07.99

# அறிமுகம்



'சஞ்சீவி' இலக்கியக் களத்தில் முகிழ்ந்த இளம் வித்து உடுவில் அரவிந்தன்.

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை அரவிந்தன், ஈழத்து சைவத் தமிழ் மக்களின் உயர்கலைக் கூடமான யாழ். இந்துக் கல்லூரியில் செதுக்கப்பட்டவர். யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவனான அவர் சிறுகதைத் துறையில் மட்டுமல்லாமல் கவிதை, ஓவியம் ஆகிய துறைகளிலும் தமது கைவண்ணத்தைப் பொறித்து வருபவர்.

சிறுகதை என்பது இந்த நூற்றாண்டில் இலக்கியத்துக்குக் கிடைத்த கூரான ஆயுதம். வடிவமும், நடையும், வார்ப்பட முறையும், சொல் நளினமும் கைவரப் பெற்ற ஆக்க இலக்கிய கர்த்தாக்கள், இந்தக் கூரான ஆயுதத்தைத் தேர்ந்த முறையில் பயன்படுத்திச் சமுதாயக் கண்ணோட்டத்துடன் உயிர்த்துடிப்பான பதுமைகளைச் செதுக்கி விடுகின்றார்கள்; அதன் மூலம் பசுமரத்தாணி போன்று நல்ல கருத்துக்களைச் சமூகத்துக்குள் விதைத்தும் விடுகின்றார்கள்.

ஈழத்திலே – போராட்ட யதார்த்தங்களுக்கு மத்தியில் – மனித விழுமியங்களை உயர்த்தும் நோக்கோடு ஒரு படைப்பிலக்கியத் துறை முகிழ்ந்து வருகின்றது. அதன் ஓர் அங்கத்தவராக உடுவில் அரவிந்தன் அடையாளம் காணப்படுகின்றார்.

போர் நெருக்கடிகளுக்கு அஞ்சி மூத்த ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலர் மௌனம் சாதிக்க ..... அதனால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பச் சில இளஞ்சிட்டுக்கள் துணிச்சலுடன் புறப்பட்டிருக்கின்றன.

'சஞ்சீவி'யில் வெளியான அரவிந்தனின் கதைகள் நிகழ்கால யதார்த்தத்தை பாத்திரங்கள் ஊடாக நமக்குப் புலப்படுத்தி, நல்ல படிப்பினைகளைச் சமூகத்துக்கு ஊட்டுவனவாக அமைந்திருப்பதை வாசகர்கள் அறிவார்கள்.

90களின் பிற்பகுதியில் யாழ். குடாநாட்டிலிருந்து பிரசவிக்கப்பட்ட சிறுகதைகளில், சமூகத்தைக் கவர்ந்த – பலராலும் பல நிலையிலும் விமர்சிக்கப்பட்ட – பரபரப்பை ஏற்படுத்திய – தன்மை கொண்டவை அரவிந்தனின் கதைகள்.

'உணர்வுகள்' கதைத் தொகுப்பு உண்மையில் உணர்வுபூர்வமான சிந்தனையைத் தூண்டுகின்ற, பல முத்துக்கள் சேர்க்கப்பட்ட ஒரு மாலை என்றால் மிகையாகாது.

இக்கதைகள் ஊடே அரவிந்தன் வெளிப்படுத்தும் சிந்தனை ஓட்டம் தெளிவானது; தங்குதடையற்றது; துலாம்பரமானது. அவரது அடித்தல், திருத்தல் இல்லாத தெளிவான கையெழுத்துப் பிரதிகள் போன்று.

ஆக்க இலக்கியத்துறையில் அரவிந்தன் மேலும் நல்லனவற்றை தரமானவற்றைப் படைத்து உயர உளமார வாழ்த்துகிறோம்.

**ம. வ. கானமயில்நாதன்**
*பிரதம ஆசிரியர்*
*உதயன் – சஞ்சீவி*

10.08.1999

Cover Printed By: Unie Arts (Pvt) Ltd.